

KALKI
27.4.86
ரூ. 1.50
பெரியார் மாவட்டத்தில் கல்கி — 11
கல்கி
"பனையேறும் எங்களுக்கு பஸ் ஏற வழியில்லீங்க!"


கோத்ரெஜ் படைத்துள்ள சுகபோகத்தின் சிகரம்: மார்வல் லக்ஷரி சோப்
Godrej Marvel
LLOUS PERFUME
செழுமையான
க்ரீம்போன்ற நுரை
மற்றும் மனம் மயக்கும் நறுமணம்
விலை ரூ.4.50(தல வரிகள் தனி)
Mudra B:GS:2704 TM



இது சினிமா கிராமம் அல்ல!

* வறண்டு கிடக்கும் குட்டை



* தேவராஜன்

நமது இந்தியக் கிராமங்களெல்லாம் எப்படி இருக்கும்? தமிழ்சினிமாவில்வருகிறமாதிரி, ஒருபக்கம் சலசலவென்று தாளம் தப்பாமல் ஓடி வரும் நீரோடை; மறுபக்கம் எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என்று குளிர்ச்சியூட்டும் வயல்கள்; இன்னொரு பக்கம், ஏதோ வேறு வேலை வெட்டியே இல்லாதவர்களைப் போல, கிராமத்துக் காதலர்கள் இருபத்து நான்கு மணி நேரமும் கட்டிப்பிடித்து உருண்டு அட்டகாசம் செய்வதற்கென்றே பூத்துக் குலுங்கிக் கண்ணைப் பறிக்கும் பூந்தோட்டங்கள்..... என்று?


இப்படி யாராவது நினைத்துக்கொண்டிருந்தால் அவர்கள் நமது தமிழ் சினிமாக்காரர்களால் மிகச் சுலபமாக மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம். எங்கோ ஒன்றிரண்டு கிராமங்கள் அப்படியிருந்தாலும் நிஜம் அதுவல்ல; தொண்ணூற்றைந்து சதவிகிதக் கிராமங்கள் வறுமையின் விலாசங்களாகத்தான் இருக்கின்றன. குடிநீர்ப் பஞ்சத்தால் ஆடு, மாடுகளைக்கூட வைத்துக் காப்பாற்ற முடியாமல் ஒவ்வொன்றாக விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை!

ஆம்; பெரியார் மாவட்டத்திலுள்ள பவானி சாகர் அணைக்கட்டிலிருந்து சுமார் ஒன்பது கி.மீ. தள்ளியிருக்கும் பெரிய கள்ளிப்பட்டி என்ற கிராமத்துக்குச் சென்றபோது ஒரு பாலைவனத்துக்குள் வழி தவறிச் சென்றுவிட்ட உணர்வுதான் ஏற்பட்டது. மழையைக் கண்டு நாளானதால் அத்துணை வறட்சி!

அந்தக் கிராமத்தைச் சேர்ந்த தேவராஜன் என்பவரைச் சந்தித்தபோது, "எங்கள் குடும்பத்துக்கு மொத்தம் பதினைந்து ஏக்கர் நிலம் இருக்கிறது. அதில் ஐந்து ஏக்கரைத் திருத்தி வயல்களாக்கியிருக்கிறோம். ஆனால் வயல்களில் பாய்வதற்குத் தண்ணீர் வசதிதான் இல்லை. அதற்காக ஒரு கிணறு அல்ல; மூன்று கிணறுகளை வெட்டிப் பார்த்துவிட்டோம். அதனால் ஆயிரக் கணக்கில் கடனானதுதான் மிச்சமே தவிர தண்ணீர் மட்டும் கிடைத்தபாடில்லை. மூன்று கிணறுகளிலும் குடிப்பதற்குக்கூடத் தண்ணீர் இல்லை. இந்த நிலையில் விவசாய வேலைகளுக்கான மாடு கன்றுகளை

வைத்து எப்படிக் காப்பாற்றுவது? அதனால் அவற்றையெல்லாம் விற்றுவிட்டோம். இப்படியே வறண்டு கொண்டு போனால் ஊர்ப் பொதுக்கிணற்றிலுள்ள தண்ணீரும் வற்றிப் போய்விடும். பிறகு குடி தண்ணீருக்காக நாங்கள் எங்கே போவதென்றுதான் தெரியவில்லை....'' என்று விரக்தியாகச் சொன்ன அவர் கடைசியில் கொஞ்சம் கூச்சத்தோடு சொன்னார், ''உண்மையைச் சொல்லணும்னா தண்ணீர்ப் பஞ்சத்தாலே நான் தினமும் குளிக்கிறதில்லீங்க. இந்த வெயில் காலத்திலேயும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தானுங்க குளிக்கிறேன்!''

கவுண்டப்ப கவுண்டர் என்பவரும், ''என் தோட்டத்திலே மொத்தம் அஞ்சு தென்னம் பிள்ளைங்க இருக்குதுங்க. 'கஷ்டப்பட்டு ஆளாக்குன அதுகளும் இந்த பஞ்சத்திலே போய்டுமோன்னு பயமா இருக்குங்க....'' என்றார்.





ஊர்க்கிணற்றிலிருந்து குடத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வெகு தூரத்திலுள்ள தன் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த செம்பம்மாவைக் கேட்டபோதும், ''நான் வாரத்துக்கு ஒருக்காத்தாங்க குளிக்கிறேன்... தண்ணிக்கு எங்கீங்க போறது?'' என்றுதான் சொன்னார்.


அவர்கள் சொன்ன அத்தனையும் உண்மை. கல்யாணம், கார்த்தி என்று யார் வீட்டிலாவது விசேஷம் என்றால் நிறையத் தண்ணீர் செலவாகுமே? என்ன செய்வார்கள்? மாட்டு வண்டிகளைக் கட்டிக் கொண்டு பக்கத்துக் கிராமங்களுக்கு மைல் கணக்கில் சென்றுதான் தண்ணீர் எடுத்து வருகிறார்கள். இதை நாங்களே கண்கூடாகப் பார்த்து நொந்து போனோம்.

இப்படி வானம் பொய்த்துக் கொண்டே போனால் அவர்களின் கதிதான் என்ன? அந்த ஊரிலுள்ள நடராசன் என்ற ஆசிரியரைக் கேட்டோம்.

''வழி இல்லாமல் இல்லை. அரசு மட்டும் மனம் வைத்து ஒரு சிறிய திட்டம் தீட்டிச் செயல்படுத்தினால் போதும். எங்கள் கிராமமும், சுற்றியுள்ள மேலும் இருபத்தைந்து கிராமங்களும் பயனடையும்!'' என்றார் அவர்.

''அது என்ன திட்டம்?'' ஆர்வத்தோடு கேட்டோம்.

''பவானி சாகர் அணைக்கும் எங்கள் கிராமத்திற்கும் இடையிலுள்ள சுமார் ஒன்பது கி.மீ. தூரத்தையும் குழாய்ப் பைப்புகள் மூலம் இணைத்து ஐம்பது அல்லது நூறு ஹெச்.பி. சக்தியுள்ள மோட்டாரின் மூலம் அணையிலிருந்து தண்ணீரை எடுத்துக் கொண்டு வந்து எங்களூரில் சுமார் ஏழரை ஏக்கர் பரப்பில் வறண்டு கிடக்கும் குட்டையையும், பக்கத்திலுள்ள புங்கம்பள்ளி என்ற ஊரிலுள்ள குட்டையையும் நிரப்பிவிட்டால் போதும். எங்கள் கிராமம் மட்டுமல்லாமல், சுற்று வட்டாரத்திலுள்ள சுமார் இருபத்தைந்து கிராமங்களிலுள்ள நூற்றுக் கணக்கான கிணறுகளிலும் ஊற்றுக் கண் திறக்க




வழி ஏற்பட்டுவிடும்.

''இது மாதிரி அணைத் தண்ணீரைக் குழாய் மூலம் கொண்டு வருவது சாத்தியமா என்றால் சாத்தியமே. காரணம், எத்தனையோ தனியார்கள் தங்கள் நிலங்களின் பாசனத்துக்காக, இப்படி ஆற்றில் பம்ப் செட் வைத்துத் தண்ணீரை வெகு தூரத்திற்கு எடுத்துச் செல்லும்போது ஓர் அரசுக்கா சாத்தியமில்லாமல் போகும்? அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்திவிட்டுப் பிறகு அதற்கான செலவைக் கொஞ்சம் கொஞ்சமாக வரியின் மூலம் வசூலிக்க முன்வந்தாலும் நாங்கள் அதற்குத் தயாராய் இருக்கிறோம். ஏனெனில், அது போன்றதொரு திட்டம் இல்லாமல் இனி எங்கள் பகுதி செழிப்படைய வாய்ப்பே இல்லாதபடி நிலத்தடி நீர் அதல பாதாளத்திற்குச் சென்றுவிட்டது. நாங்களும் அதைத் தேடும் முயற்சியில் கிணறுகளை ஆழப்படுத்தி ஆழப்படுத்திக் கடன்பட்டுவிட்டோம். இனியும் அரசு எங்களுக்கு உதவாமல் போனால், நாங்கள் பஞ்சத்தில் வெந்து மடிவதைத் தவிர வேறு வழியே இல்லை.....'' என்று சொல்லி முடித்தார் அவர்.

அவர் சொன்னது நூற்றுக்கு நூறு நிஜம். இப்படிபட்டதொரு நெருக்கடியான நிலையிலும் அரசு இந்த விஷயத்தில் ஒரு சிறு துரும்பைக்கூட அசைக்காமலிருப்பது அவலம். ஒருவேளை, இருபத்தோராம் நூற்றாண்டின் பிரகாசத்தில் நமக்கெல்லாம் தண்ணீர் என்ற வஸ்துவே தேவைப்படாது என்று சொல்வார்களானால் நாம் வாயை மூடிக் கொள்கிறோம்.

— இளங்கோவன்

அடுத்த இதழில்...



லஞ்ச் டைம்

-தொடர் நாடகம்



* புதை சேறாய்க் காட்சியளிக்கும் நீச்சல் குளம்




* வ.உ.சி. பூங்காவுக்குள் ...

ஈரோடு
நகரம் ஒரு ரவுண்ட்



* பெரியார் நகர் ...

சென்னை நகர உப்புத் தண்ணீரின் பிசுபிசுப்புக்குப் பயந்து, தலைக்குக் குளிக்காமலிருக்கும் நமக்கு ஈரோடு சென்றிறங்கியதுமே ஒரு குதூகலம்; ஈரோடு காவிரிக் கரையின் ஓரத்தில் அமைந்துள்ள ஊராயிற்றே அதனால் எங்கும் தாராளமாகக் காவிரி நீர் கிடைக்கும்; நம் தலைக்கும் ஒரு விமோசனம் பிறக்கும் என்று! ஆனால் ஹோட்டலில் ரூம் போட்டுக் குழாயைத் திறந்தபோதுதான் 'அரசனுக்குப் புருஷனே மேல்' என்று தெரிந்தது! அங்கும் அதே உப்புத் தண்ணீர்தான். குடிநீர் எப்படி? காவிரி ஓடினால் மட்டும் தாராளமாகக் குடிநீர் வழங்கிவிட முடியுமா? பிறகு மக்களுக்கு எப்படித்தான் சிக்கன உணர்வு வரும்? அதனால்தான் 78ம் ஆண்டில் பெரியார் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டுத் துவக்கப்பட்டபோது, 'ஈரோடு நகருக்கு 2.72 கோடி செலவில் புதிய குடிநீர்த் திட்டமொன்று நிறைவேற்றப்படும்' என்று எம்.ஜி. ஆர். கொடுத்த வாக்குறுதியைக் கூட ஆற்றில் தூக்கிப் போட்டுவிட்டு குடிநீருக்கும் பால் விநியோகம் மாதிரி டோக்கன் வழங்கியிருக்கிறது ஈரோடு நகராட்சி. டோக்கனுக்கு இரண்டு குடம். ஒரு குடும்பத்திற்கு இரண்டு டோக்கன். அவ்வளவுதான். சமயங்களில் இதுவும் கிடைக்காதாம். அதனால் உப்புத் தண்ணீரையே சமையலுக்கும் உபயோகப்படுத்துவதால் சாதம் மஞ்சளாக



ஈரோடு நகராட்சி [illegible] ஒரு சத்துணவுக்கூடம்



நடு வீதியில் சாக்கடை நீர்



இயற்கைய [illegible]

மாறிவிடுகிறதென்று பல பெண்கள் வருத்தப் பட்டார்கள். அதில் வருத்தப்பட என்ன இருக்கிறது? எலுமிச்சை சாதம் போன்ற வற்றுக்கு அநாவசியமாக மஞ்சள் தூள் போட வேண்டிய செலவு மிச்சம்தானே! சிறிதும் விவரமில்லாத மாதர் போலும்!

* ஈரோடு நகரின் ஒரு பகுதியான பெரியார் நகரில் ஒரு ரவுண்ட் அடித்த போது அங்கு குடிநீருக்குத்தான் தட்டுப்பாடே தவிர மற்றபடி வீட்டு வசதி வாரியம் கட்டிக் கொடுத்த வீடுகளின் மாடிகளிலுள்ள வாட்டர் டேங்க் உள்பட அனைத்துச் சுவர் களிலும் ஆங்காங்கே காணப்படும் விரிசல் கள், குப்பை கூளங்கள், இத்யாதி.... இத் யாதி..... குறைபாடுகளுக்குத் தட்டுப்பாடே இல்லை என்பது புரிந்தது. தன்மானச் சுடரை ஏற்றி வைத்துப் பகுத்தறிவைப் பரப்புவதற் காகவே வாழ்நாள் முழுவதும் உழைத்த பெரியார் பெயரிலுள்ள ஒரு நகரில் வீதி விளக்குகள்கூட எரிவதில்லை! பள்ளிக்கூடம் கட்டுவதற்கான இடம் ஒதுக்கப்பட்டிருந்தும் வீட்டு வசதி வாரியத்துக்கும் நகராட்சிக்கும்

இடையிலுள்ள பிரச்னைகளால் பள்ளிக்கூடம் கட்டப்படவில்லை! இதெல்லாம் பெரியாருக்குத் தெரிய வந்தால் 'பெரியார் நகர்' என்ற பெயரைத் தார் பூசி அழித்துவிட்டு, 'வெங்காய நகர்' என்று எழுத ஒரு போராட்டமே அவர் நிகழ்த்தலாம். நல்லவேளை, இதற்கெல்லாம் அவசியமில்லாமல் அவர் காலமாகிவிட்டார்.

* ஈரோடு நகரவாசிகள் குப்பை கூளங்களைப் போட்டு நகரை அசுத்தப்படுத்த மாட்டார்கள் என்பதில் ஈரோடு நகராட்சிக்கிருக்கும் தன்னம்பிக்கை சற்று அதிகம் போல்தான் தெரிகிறது. இல்லையென்றால் முப்பத்தாறு வார்டுகளைக் கொண்ட நகருக்கு மொத்தம் பத்தொன்பது துப்புரவுப் பணியாளர்களை மட்டும் நியமித்துவிட்டுத் திருப்தியடைந்திருக்குமா? வெளியூர்ப் பயணிகள் வந்துபோடும் குப்பைகளைத் தூய்மைப்படுத்த இவர்களே போதும்தான். ஆனால் ஈரோடு வாசிகள் போடும் குப்பைகளையும் அப்புறப்படுத்த வேண்டாமா? அதற்கும் நகராட்சி கொஞ்சம் மனம் வைத்து ஆட்களை நியமிப்பது நல்லது.

* ஈரோடுவாசிகள் ரொம்ப ரொம்பக் கறாரான பேர்வழிகள் என்பதற்கு ஓர் உதாரணம் இருக்கிறது. ஒரு வீட்டுச் சாக்கடை நீர், அடுத்த வீட்டு வழியாக ஓடக்கூடாது என்பதில் பலரும் தீவிரமாய் இருக்கிறார்கள். அதனால் அந்தந்த வீட்டுச் சாக்கடை நீரும் அப்படியே நேரடியாக வீதிக்கே வந்து தேங்கிவிடுவதால் மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் நடக்க வேண்டியிருக்கிறது. இதற்கும் நகராட்சி ஒரு வழி செய்தால் நல்லது என்றே நமக்குத் தோன்றுகிறது.

* மக்கள் தொகைப் பெருக்கம் எப்படி ஏற்படுகிறது? திருமணங்கள் செய்யப்படுவதால்! முடிந்தவரை திருமணங்களை நடத்த முடியாமலேயே செய்துவிட்டால் ஆட்டோமேடிக்காக மக்கள் தொகை கட்டுப்படுத்தப் படுமல்லவா? அதனால்தான் ஈரோடு பெரியார் நகரிலுள்ள பாரதியார் சமூக நலக் கூடத்திற்கு (வெறும் இடத்திற்கு மட்டும்) நாள் வாடகையாக ஆயிரத்து நூறு வசூலிக்கிறார்கள். இதற்குப் பயந்து கொண்டே பலர் தங்கள் திருமணங்களை முடிந்தவரை ஒத்திப் போட்டுக் கொண்டே வருகிறார்கள். கடைசியில் இனியும் தாங்க முடியாது என்ற நிலை வரும்போதுதான் இங்கே திருமணம் செய்து கொள்கிறார்கள். இல்லையென்றால் இந்தத் திருமணக் கூடத்தில் கடந்த மூன்றாண்டுகளில் ஒரேயொரு திருமணம் மட்டும்தான் நடைபெற்றிருக்குமா என்ன?

இந்த இதழில்
பெரியார் மாவட்டம் பற்றிய
கட்டுரைகளுக்கான
புகைப்படங்களை வழங்கியிருப்பவர்:

மணி

* ஈரோடு நகர வாசிகளுக்கிருக்கும் ஒரேயொரு பொழுது போக்கிடம் (சினிமா தவிர) அங்குள்ள வ.உ.சி. பூங்காதான். ஞாயிற்றுக்கிழமைகளில் குடும்பத்தோடு அங்கு வருபவர்களும் அதிகம். ஆனாலும் குழந்தை குட்டிகளோடு புறப்பட்டு வரும் எந்தப் பெற்றோரும் தங்கள் குழந்தைகளைப் பூங்காவுக்குள் விட்டுவிட்டு நிம்மதியாக இருக்க முடியாது. 'வாழ்க்கையின் கொடூரமான யதார்த்தத்திலிருந்து சிறிது நேரமாவது தப்பிக்கப் பூங்காவுக்கா வருகிறாய்?' என்ற வேகத்தோடு பாய்ந்து வரும் பஸ், லாரி போன்ற வாகனங்களைப் பூங்காவின் மையச் சாலையிலேயே பார்க்கலாம். ஆமாம்; பூங்காவுக்குள் புகுந்து சென்றால் தூரம் குறைவு என்பதால் வாகனங்கள் அமைதியான பூங்காவின் மையச் சாலையை 'பைபாஸ்' ரோடாகப் பயன்படுத்தி பூங்காவின் அமைதியையே குரூரமாக்குகின்றன.

இந்தப் பக்கம் வாகனப் போக்குவரத்து இருக்கிறதே என்று யாரும் கொஞ்சம் உட்பகுதிக்குச் சென்றுவிட முடியாது. ஒரே மல ஜல மயம். சாயங்கால வேளைகளில் கஞ்சா அடிக்கும் கும்பல்கள்; மற்றும் பல சமூக விரோத சக்திகள், பூங்காவின் உட்பகுதிகளை ஆக்ரமித்துக் கொள்வதால் அந்தப் பக்கம் போகவே முடியாது. குழந்தைகளுக்கு வேடிக்கை காட்ட மான்கள், மயில்கள் என்று பூங்காவின் ஒருபுறம் கூண்டுகளில் அடைக்கப்பட்டிருந்தாலும் சில சமயங்களில் அவை திடீரென்று காணாமல் போய்விடுவதாகச் சொன்னார்கள். அப்படித்தான் முன்பிருந்த மான்கள் காணாமல் போய்விட்டதாம். இப்போது வந்திருப்பவை புதிய மான்களாம்.

மேலும் பூங்காவிற்குள்ளிருக்கும் நீச்சல் குளத்தைப் பராமரிப்பதற்காக நகராட்சி நான்கு லட்ச ரூபாய்களை ஒதுக்கியிருந்ததாம். ஆனாலும் அந்த நீச்சல் குளம் பழைய நிலையிலிருந்து சிறிதும் மாறவே இல்லை; அந்தப் பணம் போன இடம்தான் எங்கே என்று சிலர் சந்தேகப்படுகிறார்கள். நாங்கள் போய்ப் பார்த்தோம். ஜல சமாதி அடைய வேண்டுமென்ற தீராத தாகமுடையவர்களைத் தவிர வேறு யாரும் அந்தக் குளத்தில் இறங்கி விட முடியாது. அவ்வளவும் புதை சேறுதான்-பாசி மூடிக் கிடந்தது. இதுவரை யாரும் அங்கு நீச்சலடிக்கும் தைரியம் பெறாததால் அதற்கு ஏற்பட்ட பசிதான் அந்த நான்கு லட்ச ரூபாய்களையும் விழுங்கி இருக்க முடியுமே தவிர வேறு என்ன? கடைசியில் பூங்காவிலிருந்து நாங்கள் வெளியேறியபோது பேசாமல் அதைத் 'திறந்த வெளிக் கழிப்பிடம்' என்று நகராட்சியே பிரகடனப்படுத்தி விடுவதுதான் புத்திசாலித்தனம் என்று தோன்றியது. அப்படி அறிவித்துவிட்டால் மக்கள் போய் அவஸ்தைப்படுவதும், பத்திரிகையாளர்கள் போய்ப் பார்த்து வந்து அங்கலாய்ப்பதும் ஒழிந்து போகுமல்லவா!

* ஈரோடு நகரவாசிகளுக்காக ஸ்டேடியம் கட்டுவதற்காகக் கடந்த 12.12.83 அன்று

முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களே ஈரோட்டில் அடிக்கல் நாட்டினாராம். அடிக்கல் நாட்டிய கையோடு முதல்வரே அதை மறதியாகச் சென்னைக்கு எடுத்து வந்துவிட்டாரோ என்னவோ, என்ன தேடியும் ஈரோட்டில் அந்த அடிக்கல்லைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. ஸ்டேடியம் தொடர்பாக அண்மையில் அமைச்சர் ஒருவரிடம் உள்ளூர்க்காரர்கள் சிலர் உரிமையோடு கேட்டபோது. "நீங்கள் தான் நகராட்சித் தேர்தலில் தி.மு.க. வேட்பாளரைத் தேர்ந்தெடுத்துவிட்டீர்களே! பிறகு எப்படி நாங்கள் ஸ்டேடியம் கட்டித் தரமுடியும்? தி.மு.க.வே கட்டித் தரும். போங்கள்!" என்று சொன்னதாகச் செவி வழித் தகவல்!

* ஈரோட்டில் இன்னொரு விசேஷம்: தீயணைப்புப் படையினருக்கு யாரும் போன் செய்து சொல்லிவிட்டால் மட்டும் போதாது என்பது. போன் செய்த கையோடு கூடவே பத்துப் பேரைக் கூட்டிக் கொண்டும் செல்ல வேண்டும். அப்போதுதான் அந்த வண்டியைத் தள்ளி ஸ்டார்ட் செய்து கொண்டு வர முடியும். இதைத் தீயணைப்புப் படையினரே வேதனையோடு சொன்னார்கள்.

* 'அட என்னய்யா குறைகளைச் சொல்லிச் சொல்லியே போரடிக்கிறீர்?' என்பவர்களுக்கு ஒரு போனஸ். 'ஈரோட்டில் ஆளுயர தோசை!' என்பது அவ்வப்போது அங்கிருந்து வெளி வரும் தமிழ்த் தினசரிகளுக்குப் பரபரப்பான போஸ்டர் செய்தி. ஆறடி நீளமுள்ள அந்த தோசையின் விலை பன்னிரண்டே ரூபாய்தான்! மாலை நேரங்களில் வீதிகளில் நடந்து சென்றால் அங்கங்கே இருக்கும் மீன் பஜ்ஜி கடைகளில் அசைவப் பிரியர்களும் கடச்கட ஒரு கை பார்க்கலாம்! மக்களின் மரியாதையான சொற்கள் சென்னை போன்ற மரியாதையற்ற நகரங்களிலிருந்து செல்வோருக்கு ஒரு வரப் பிரசாதம்!


* மற்ற ஊர்களைவிட இங்கு மலிவான விலையில் கைத்தறித் துணிகள் வாங்கலாம்.

* காந்தியடிகள் கடைப்பிடித்த 'மண் சிகிச்சை' 'ஜல சிகிச்சை' முறையில் நோய்களைக் குணப்படுத்தும் இயற்கை மருத்துவ நிலையம் ஒன்று ஈரோட்டில் இருக்கிறது; இயற்கை வைத்தியத்தின் மூலம் 'எய்ட்ஸ்' நோயைக் கூட குணப்படுத்திவிட முடியும் என்கிறார் அதன் டாக்டர் ஆறுச்சாமி.

* கடைசியாக ஒன்று. ஈரோடு ரொம்ப ரொம்ப காஸ்ட்லியான நகரம். அங்கு பணமில்லாமல் எதுவுமில்லை என்பதற்கு ஒரேயொரு சின்ன உதாரணம் சொல்லி முடிக்கிறோம். அங்குள்ள தேசிய பால் வள ஊழியர்கள் சம்மேளன ஊழியர்கள் சிலர் சஸ்பெண்ட் செய்யப்பட்ட பிரச்னை தொடர்பாக நாங்கள் விசாரிக்கச் சென்றபோது, அதைச் சேர்ந்த ஒருவர், 'எவ்வளவு பணம் கொடுத்தால் எங்கள் பிரச்னைகளைப் பிரசுரிப்பீர்கள்?' என்று கேட்டார். அலறியடித்துக் கொண்டு சென்னைக்கு ரயிலேறிவிட்டோம்!

— நமது நிருபர்கள்.

படங்கள் :
ஸ்ரீதர், மனோ,
என். எஸ். மணி,
எஸ். கணேஷ்.


அமெரிக்க பயங்கரவாதம்
கடாஃபியை ஒழிச்சுக் கட்டறீங்களா?.. அல்லது நான் உங்களை ஒழிச்சுக் கட்டட்டுமா?
லிபிய மக்கள்




தூய்மை அரசியல் வேண்டும்!
ஹெக்டே ராஜினாமா செய்க!


தமிழன் வாழ்க, தமிழ் மொழி வாழ்க, தமிழ் உலகம் வாழ்க.. தமிழ் மொழி வாழ்க.. தமிழன் வாழ்க யாம் பத்து கோடி வரி வழங்க உறுதி அளிக்கிறோம்...!
பொன்மனப் பாண்டியன் வாழ்க! புரட்சிப் பாண்டியன் வாழ்க! டாக்டர் பாண்டியன் வாழ்க! ராமச்சந்திர பாண்டியன் வாழ்க!
வாழ்க! வாழ்க! பத்து கோடியில் வாழ்க!
தமிழ் மக்கள்



கல்கி

1986 ஏப்ரல் 27
மலர் 44 · இதழ் 39
அக்ஷய சித்திரை 14



பல்லவனிடம் வாலாட்டலாமா பட்டுக்கோட்டை?

பல்லவனிடம் மல்லுக்கு நின்றானாம் பட்டுக்கோட்டை! என்ன ஆணவம்! பட்டுக்கோட்டையில் பயணம் செய்யும் பல்லவனிடம் டிக்கெட் கேட்பதா, என்ன அக்கிரமம்! பல்லவனை டிக்கெட் வாங்கச் சொன்னதோடு நில்லாமல், டிக்கெட் இல்லாமல் பல்லவனைப் பயணம் செய்ய அனுமதித்த பட்டுக்கோட்டை நடத்துனருக்கு 'மெமோ' கொடுத்தாராம் பட்டுக்கோட்டை செக்கிங் இன்ஸ்பெக்டர். என்ன துணிச்சல்! எத்தகைய சர்வாதிகாரப் போக்கு!

சைதாப்பேட்டை மறைமலை அடிகள் பாலம் தாண்டிச் சின்னமலை சந்திப்பில் பல்லவன் பஸ்கள் படையெடுத்து வந்து அணிவகுத்து நின்றன! அந்தப் படையெடுப்பைச் சந்திக்க பட்டுக்கோட்டை பஸ்கள் சீறிப் பாய்ந்து வந்து தாக்குதலுக்குத் தயாராயின!

இரு எதிரிகளும் போட்டி போட்டுக் கொண்டு சாலைக்குக் குறுக்கே தாறுமாறாகப் பஸ்களை நிறுத்த, நாலு மணி நேரம் சென்னையின் பிரதான சாலையான மவுண்ட் ரோடில் போக்குவரத்து ஸ்தம்பித்தது. விமான நிலையம் செல்ல வேண்டியவர்கள், விமானங்களைத் தவற விட்டு லட்சக்கணக்கில் தொழிலிலோ வியாபாரத்திலோ நஷ்டப்பட்டால் யாருக்கு என்ன? பெண்களும் ஆண்களும் குழந்தைகளும் கடும் உச்சி வெயிலில் மைல் கணக்கில் வியர்க்க விறுவிறுக்க நடக்க நேர்ந்தால் என்ன குடிமுழுகிப் போய்விடும்? காரியாலயத்திலிருந்து வீடு திரும்புகிறவர்கள் அவதிப்பட்டால் அது அவர்கள் தலையெழுத்து! இதெல்லாமா முக்கியம்? 'பல்லவனா, பட்டுக்கோட்டையா? யார் உயர்ந்தவன்?' என்பதைத் தீர்மானிப்பதல்லவா முக்கியம்! உரிமைகளுக்குப் போராடுவதே லட்சியம்! கடமைகள் பற்றி யாருக்கு என்ன கவலை? அப்பாவி பஸ் பயணிகள் கஷ்டப்படட்டும்; மவுண்ட் ரோடில் அவசர காரியமாகப் பல்வேறு வாகனங்களில் போக வேண்டியிருப்பவர்கள் நன்றாகத் தவிக்கட்டும்!

இவர்களுக்கு யூனியன்கள் வேறு! யூனியன்களுக்குத் தலைவர்கள் வேறு! வெட்கக் கேடு!

ஒரு போக்குவரத்தில் பணி செய்பவர்கள் இன்னொரு போக்குவரத்தில் இலவசமாகப் பயணம் செய்யலாம் என்பதை ஓர் உரிமையாகக் கோருவதே நியாயமாகப் படவில்லை. அப்படி விதிமுறை ஏதும் இல்லையாம்! எழுதப்படாத ஒப்பந்தமாம்! இல்லாத ஒப்பந்தத்தை மீறியதற்காகத்தான் இத்தனை ஆர்ப்பாட்டம்! அழகாயிருக்கிறதல்லவா?

நாளைக்கே இவர்கள் குடும்பத்துடன் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி கேட்பார்கள். அதற்குப் போராட்டம் நடத்துவார்கள். குடும்பத்துடன் விடுமுறையில் நீண்ட தூரம் போகும்போது நின்று கொண்டே பயணம் செய்ய முடியுமா? அமர்ந்து செல்ல உரிமை கோருவார்கள். காசு கொடுத்துப் பஸ் ஏற விரும்பும் பயணிகளுக்கு இடமில்லாவிட்டால் அதற்கு இவர்கள் என்ன செய்ய முடியும்? 'ஒரே பஸ்ஸில் பல பஸ் ஊழியர்கள் பயணம் செய்யக் கூடாது' என்பதை உணர்த்துவதுதான் 'மெமோ' கொடுத்த செக்கிங் இன்ஸ்பெக்டரின் நோக்கம் என்பதாக மறியலுக்குப் பின் தரப்பட்ட ஒரு விளக்கம் கூறுகிறது. எனவே அடுத்த கட்ட போராட்டம், 'எத்தனை ஊழியர்கள் வேண்டுமானாலும் ஒரே சமயத்தில் ஒரே பஸ்ஸில் ஏறிப் பயணம் செய்யலாம்; அதற்குத் தடை இருக்கக் கூடாது' என்பதற்காக இருக்கும். ரயில்வே ஊழியர்களுக்குச் சமமாகப் பயண வசதிகள் தேவை என்றும் ஒரு போராட்டம் தொடங்கலாம்.

இதற்கெல்லாம் முடிவு ஏது? அனைத்தையும் அரசுடைமையாக்குவதால் ஏற்படுகிற விபரீதங்கள் இவை. 'கடமைகளை எண்ணிப் பாராதவர்களுக்கு உரிமை பேசவே உரிமை இல்லை' என்பதை அரசு தைரியமாக எடுத்துக் கூற வேண்டும்.

ஆனால் இந்த அரசு, தானே கதவடைப்பு நடத்துகிற அரசாகவும், முதல்வர், தாமே உண்ணாவிரதம் இருந்து போராடுகிறவராகவும் ஆயிரக்கணக்கான கோப்புகள் ஆளுயரத்துக்கும் மேல் குவிகின்ற நிலையிலும் கடமையை வலியுறுத்தும் துணிவை இழந்து நிற்கிறது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்.

அருமையான வாய்ப்பிருந்தும் அரசுக்கு மனமில்லை!


—அவதிப்படும் அந்தியூர் விவசாயிகள்

கர்நாடகத்தையும் தமிழ்நாட்டையும் பிரிக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைச் சரிவில், பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த அந்தியூரை ஒட்டி இருக்கிறது பர்கூர் மலைத் தொடர். (அழகான மலைத் தொடர். பிக்னிக் போகலாம். அங்கே கூட்டம் கூட்டமாக வரும் காட்டு யானைகளைக் கண்டு ரசிக்கலாம். ஆனால் சமயத்தில் எங்களைப் போல் தனியாக வந்த காட்டு யானையின் கோபப் பிளிறலைக் கேட்டு பயப்படும்படியும் நேரலாம்!) அந்த மலைத் தொடரிலிருந்து கல்லூப் பள்ளம், தும்பரவாணிப் பள்ளம், வரட்டுப் பள்ளம் என்று அழைக்கப்படும் மூன்று காட்டாறுகள் ஓடி வருகின்றன. மழைக் காலங்களில் இந்தக் காட்டாறுகளில் ஓடி வரும் வெள்ளம், கெட்டி சமுத்திரம் ஏரி, அந்தியூர் ஏரி, பிரம்மதேசம் ஏரி, வேம்பத்தி ஏரி, ஆப்பக் கூடல் ஏரி ஆகிய ஐந்து ஏரிகளையும் நிரப்பிவிடும். அதனால் அந்தச் சுற்று வட்டாரக் கிராமங்களிலுள்ள விவசாயக் கிணறுகளில் நிலத்தடி நீர் குறைந்து போகாமல் எப்போதும் தண்ணீர் இருந்து கொண்டே இருக்கும். கிணற்றுப் பாசன விவசாயிகளும் தண்ணீர்ப் பிரச்னை யில்லாமல் கரும்பு, மஞ்சள், நெல்..... என்று சாகுபடி செய்து கொண்டிருப்பார்கள்.

இப்படி அமைதியாகச் சென்று கொண்டிருந்த வாழ்க்கை 72ம் ஆண்டில் புயலில் சிக்கிக் கொண்டது. ஆம்; நிஜப் புயலே தான். அப்போது அந்தியூர்ச் சுற்றுவட்டார மக்களுக்கு ஏற்பட்ட வெள்ளச் சேதம் சொல்லி மாளாதது. அதனால் மேற்கொண்டு வெள்ளச் சேதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக அந்த மூன்று காட்டாறுகளையும் இணைத்து 'வரட்டுப் பள்ளம் அணைத் திட்டம்' என்ற திட்டத்தைக் கொண்டு வந்தது அரசு.

அப்போது அந்தியூர் மக்கள், அந்த அணைத் திட்டத்தால் தற்போது நிரம்பிக் கொண்டிருக்கும் ஐந்து ஏரிகளுக்கும் தண்ணீர் வருவது நின்று போய் அதனால் தங்கள் விவசாயம் பாதிக்கப் பட்டுவிடுமோ என்ற சந்தேகத்தை வெளியிட்டபோது, அப்போதைய கோவை மாவட்ட கலெக்டர் (அச்சமயம் பெரியார் மாவட்டம் பிரிக்கப்படவில்லை) 'இந்த அணை கட்டப்படுவதால் ஏற்கெனவே நிரம்பிக் கொண்டிருக்கும் ஏரிகளுக்கான பழைய ஆயக்கட்டுப் பாசனத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது. இது முழுக்க முழுக்க வெள்ளச் சேதத்தைத் தடுக்கும் நோக்கத்தில்மட்டுமேதான் கட்டப்படுகிறது' என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறார். அதனால் அந்தப் பகுதி விவசாயிகளும் நிம்மதியாகிவிட்டார்கள்.

கடந்த 76ல் — அவசர நிலைப் பிரகடனம் செய்யப்படுவதற்கு ஒரு வாரம் முன்னர் அப்போதைய முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டவே, வேலையும் சுறு-



சுறுப்பாக நடந்து 79ல் அணைக்கட்டு வேலை பூர்த்தியாகிவிட்டது. அதோடு அந்தப் பகுதி விவசாயிகளுக்கும்தலைவலி ஆரம்பமாகிவிட்டது!

எப்படி ஆரம்பமானது என்பதை இந்திய உழவர் உழைப்பாளர் கட்சியின் அந்தியூர் ஒன்றிய இணைச் செயலாளர் மு. தவசியப்பனிடம் கேட்டபோது, "அணை கட்டி முடிக்கப்படும்வரை எங்களுக்குப் பிரச்னை ஏதும் இல்லை. கட்டி முடிக்கப்பட்ட பிறகு, கட்டுவதற்கு முன் கொடுத்த வாக்குறுதிப்படி ஏற்கெனவே பயனடைந்து கொண்டிருந்த ஐந்து ஏரிகளுக்கும் தண்ணீர் வருவது தடைப்பட்டுவிட்டது. அதனால் அந்த ஏரியை நம்பியிருந்த சுற்றுவட்டாரக் கிணறுகளும் இதனால் 2924 ஏக்கர் பாசன வசதி பெற வேண்டும். ஆனால் ஒரேயொரு ஆண்டு மட்டும்தான் ஆயிரம் ஏக்கர் பாசனம் பெற்றது. மற்றபடி இருநூறு முந்நூறு ஏக்கர் நிலங்கள்கூடப் பாசன வசதி பெறுவதில்லை. அதிலும் மெயின் வாய்க்காலிலிருந்து வயல்களுக்குப் பிரிந்து செல்லும் சிறு சிறு பாத்தி வாய்க்கால்களை அரசு அமைக்காததால், இருக்கும் நீரும் வீணடிக்கப்படுகிறது. ஆக, பழைய ஆயக்கட்டுகளும் பயனடையவில்லை; புது ஆயக்கட்டுகளும் பயனடையவில்லை. அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டுக் கரும்பு உற்பத்தி இல்லாமல் போய்விட்டதால் அருகிலுள்ள ஆப்பக்கூடல் சர்க்கரை ஆலை கூடப் பாதிக்கப்படுகிறது!" என்றார் அவர்.



• தவசியப்பன்



• வேம்பண்ணன்.



• பொன்னைய கவுண்டர்

வறண்டு போய்விட்டன. விவசாயிகள் அனைவரும் விவசாயத்தையே விட்டுவிட வேண்டிய அளவுக்கு வறட்சி தலை தூக்க ஆரம்பித்தது.

"எனவே நாங்கள் சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டபோது, 'புது அணை ஒன்று கட்டப்படும்போது அதற்குப் புது ஆயக்கட்டுகளை ஏற்படுத்தி அதன் மூலம் வருமானத்தை ஏற்படுத்துவது ஒன்றுதான் அரசின் நோக்கம்' என்றார். 'அப்படியானால் பழைய ஆயக்கட்டுகள் ஏதும் பாதிக்கப்படாது என்று ஆரம்பத்தில் கொடுத்த வாக்குறுதி என்னவாயிற்று?' என்று திருப்பிக் கேட்டோம். அதற்கு அவர் அதுபற்றியெல்லாம் தங்களுக்கு ஏதும் தெரியாது என்று சொல்லிவிட்டார்.

"புதிய அணைக்குப் புது ஆயக்கட்டுகளை ஏற்படுத்தி வருமானம் ஈட்டுவதுதான் அரசின் நோக்கம் என்றாலும் இந்த வரட்டுப் பள்ளம் அணைக்கட்டிலுள்ள புது ஆயக்கட்டுகளும் வருமானம் தருகிற முறையில் அமைக்கப்படவில்லை. அரசாங்க அறிவிப்புப்படி

புது ஆயக்கட்டின் மூலம் பாசன வசதி பெற்று வரும் வேம்பண்ணன் என்பவரிடம் கேட்டபோது, "அணையிலிருந்து தண்ணீரை மெயின் வாய்க்காலில் விட்டுவிட்டாலே நிலங்கள் பாசன வசதி பெற்றுவிடும் என்று அரசு நினைக்கிறது போல் இருக்கிறது. அதனால்தான் வயல்களுக்குச் செல்லும் கொப்பு வாய்க்கால்களைப்பற்றி அது கவலைப்படவே இல்லை. கொப்பு வாய்க்கால்கள் சரிவர இல்லாததால் எனது வயல்களுக்கான நீர் வரத்தும் சரியாக இல்லை. இப்படிப்பட்டதொரு நிலையில் நான் எப்படி தண்ணீர் வரி கட்ட முடியும்? அதனால் நான் கட்டவே இல்லை. என்ன செய்தாலும் செய்யட்டும் என்றிருக்கிறேன்...." என்றார்.

பிறகு எங்களோடு வந்திருந்த மு. தவசியப்பனை தொடர்ந்து, "வரட்டுப் பள்ளம் அணையையொட்டியே பின்னாலுள்ள மலைத் தொடரில் சுமார் எண்ணூறு அடி உயரத்தில் மணியாச்சி ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது. அது முழுக்க முழுக்கத் தமிழகத்துக்கே

ஆற்றங்கரையில் ஓர் அழகிய கோயில்



கவுந்தம்பாடிக்கும், ஆப்பக் கூடலுக்கும் இடையில் உள்ள ஊர் பெருந்தலையூர். பவானி ஆற்றின் கரையில் அமைந்துள்ள இந்த ஊரின் சிவன் கோயில் ரொம்ப ரொம்பப் புராதனமானது. கல்வெட்டுக் களைப் படிக்கும் ஸ்பெஷலிஸ்ட் யாராவது இருந்தால் அவர்களை உடனே அங்கே அனுப்ப வேண்டும்; நிறையக் கல்வெட்டுக்கள்! பவானியில் வெள்ளம் வந்தால் கோயிலே மூழ்கி விடுமாம்! இந்தக் கோயிலில் உள்ள அம்மன் சன்னதிக்கு முன்னால் உள்ள தாழ் வாரத்தில் சுரங்கப்பாதை ஒன்று இருக் கிறது. அதில் இறங்கினால் பவானி ஆற்றின் அடியிலேயே சென்று பவானி கூடு துறையை அடையலாமாம். இறங்கிப் பார்த்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று விசாரித் தோம். எல்லோரும் உயிருக்கு பயந்தவர்கள் என்று தெரிந்தது. அமைச்சர் வீரப்பன் வந்து இந்த கோயிலைப் பார்த்துவிட்டுத் 'தமிழகத் திலுள்ள சிறந்த கோயில்களில் இதுவும் ஒன்று' என்று கூறிவிட்டுச் சென்றாராம். அப்படியிருந்தும் இந்தக் கோயில் கவனிப் பாரற்றுக் கிடப்பதால் கொஞ்சம் கொஞ்ச மாகச் சிதிலமடைந்து வருகிறது என்று வேதனையாக குறிப்பிட்டார்கள், துணுக்கு எழுத்தாளர்களான எஸ்.பி. இளங்கோவும், சீனிவாசனும்.

சொந்தமானது. அதில் எப்போதும் நீர் வற்றாமல் ஓடிக் கொண்டே இருக்கும். எனவே, இந்த மலையைச் சிறிது குடைந்து கொண்டு சென்றால் அந்த ஆற்று நீரை இந்தப் பக்கமுள்ள வரட்டுப் பள்ளம் அணைக் குத் திருப்பிவிடலாம். அணையிலும் எப் போதும் தண்ணீர் இருக்கும். அதனால் பழைய—புது ஆயக்கட்டுகள் அனைத்தும் பயன் பெறும். மேலும் அந்த ஆறு எண் ணூறு அடி உயரத்தில் ஓடுவதால் அதைத் திருப்பிக் கொண்டு வந்தாலும் அந்த உயரத் திலிருந்தேதான் அணைக்குள் தண்ணீர் விழும் என்பதால் அதைப் பயன்படுத்தி ஓர் அற் புதமான நீர்மின் நிலையத்தையும் ஏற்படுத்த முடியும். அரசுக்குத்தான் மனமில்லை. அரசுக்கு இல்லை என்பதோடு, முடியாவிட் டால் தங்களிடமாவது அந்தப் பொறுப்பை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கும் சக்தி சுகர்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கவும் மனமில்லை. நாங்கள்தான் பயிர் நிலங்களைப் பாலை நிலங்களாகப் போவதைப் பார்த்துப் பார்த்து நொந்து போகிறோம்...'' என்றார்.

இப்படியோர் அருமையான திட்டத்திற்கு வாய்ப்பிருந்தும் அரசு மெத்தனம் காட்டுவது வியப்பாகவும் வேதனையாகவும் இருக்கவே அண்மையில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தலில் அந்தியூர் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கும் இ.காங்கிரஸ்காரரான பொன்னைய கவுண்டரைச் சந்தித்து, ''இந்த நிலைகளுக் கெல்லாம் நீங்கள் என்ன செய்யப் போகிறீர் கள்?'' என்று கேட்டோம்.

''மணியாச்சி ஆற்றை இந்தப் பக்கம் திருப்பி விடுவது தொடர்பாக நாங்கள் மூப்பனாரிடம் மனு கொடுத்துள்ளோம். அவ் வப்போது அதை அவரிடம் நினைவுபடுத்திக் கொண்டுமிருக்கிறோம். நிச்சயம், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வேலைகள் தொடங்கப்படும்வரை நாங்களும் ஓய்ந்துவிட மாட்டோம்!'' என்றார்.

தலைவலியை நீக்குவதாகக் கூறிக்கொண்டு திருகு வலியை ஏற்படுத்துகிறது அரசு. அந்தத் திருகு வலிக்கு ஒரு நல்ல மருந்து இருப்ப தாகச் சொன்னாலும் ஏற்பதில்லை. ஆக, இந்த அரசாங்க டாக்டரிடம் வைத்தியம் பார்த்துக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ள மக்களின் கதி என்ன?

— ப்ரியன்

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது.

அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்—இப்போது, காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.



23

மூலதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்

புரதம்	ரிபோ
கொழுப்பு	ஃபிளேவின்
கார்போ	[illegible]
ஹைட்ரேட்	[illegible]
கால்சியம்	[illegible]
பாஸ்பரஸ்	பெண்டோதெனேட்
சோடியம்	கோலின்
குளோரைடு	பைரிடாக்ஸின் (பி6)
(உப்பு வடிவில்)	வைட்டமின் (பி12)
பொட்டாசியம்	ஃபாலிக் அமிலம்
இரும்புச்சத்து	வைட்டமின் ஸி
அயோடின்	வைட்டமின் டி
வைட்டமின் 'ஏ'	வைட்டமின் ஈ
வைட்டமின் 'பி1'	வைட்டமின் கே

பால் சேர்த்திடத் தேவையில்லை.



காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு

தபால் மூலம் சித்திரக்கலை !





படம் வரைய,
வர்ணம் தீட்ட வேண்டுமா ?

28 வருடங்களுக்கும் மேலாக, தங்கள்
நம்பிக்கைக்கும், திறமைக்கும் பெயர் பெற்ற

சந்தனுவின்
சித்திர வித்யாலயத்தின் மூலம்

தபால் மூலம், தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, ஹிந்தி ஆகிய 5 மொழிகளில் வீட்டிலிருந்தபடியே தங்களின் சித்திர ஈடுபாட்டையும், திறமையையும் பயனுள்ள முறையில் முன்னேற்றிக் கொள்ளலாம்.

முழு விவரங்களுக்கு 90 பைசா தபால் தலைகளுடன் விண்ணப்பிக்கவும்

சந்தனுவின் சித்திர வித்யாலயம்
C/o. சித்திரக் குள்ளன் (KD) சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-600 002. போன்: 846188

SILVER JUBILEE 25

Modern: SCV/Tel 30

ஸ்தாபிதம்: 1942 போன்: 2379

'சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு'

கும்பகோணம் லலிதா பார்மஸி

ஸ்தாபகர்: Dr. V. R. L. சர்மா.
D. L. No. 40
157, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை — 609 001.

எமது மருந்துகளை 39, ரெங்கனாதன் தெரு, தி. நகர், சென்னை—17, எமது பிராஞ்சில் பெற்றுக் கொள்ளலாம். போன்: No. 441454.

1. பஞ்சசத்பாக்னி லேஹியம்: பிரஸவித்த பின் பெண்கள் உபயோகிக்கச் சிறந்தது.
2. மதுயஷ்டி தைலம்: பொடுகு, மயிர் உதிர்தலை நிறுத்தி கூந்தல் வளர்ச்சிக்கு உதவ,
3. நீலி பிருங்காமலக தைலம்: அகால நரை, கேச வறட்சி, செம்பட்டை இவைகளைப் போக்கிக் கூந்தலுக்கு கருமை தர, யௌவந ரஸாயனம் ஆயுர்வேத முறையில் தயார் செய்யப்பட்ட ஆண்களுக்கான டானிக்.

எம்.ஜி.ஆரின் பெயரைக் கெடுப்பதில் மும்முரமாக இருப்பவர் யார்?



* தங்கத் [illegible]

நீங்கள் கேட்டவை — தராசு



* கருத்தாழமிக்க கடிதம்

* ரஜினி சுகுமார், சென்னை — 11

? இந்திராவிடம் இருந்த செல்வாக்கு, ராஜ தந்திரம், அணுகுமுறை இவை ராஜீவிடம் கொஞ்சம்கூட இல்லையே? ஏன்? அனுபவம் போதவில்லையா?

! இந்திராவிடம் இருந்த செல்வாக்கு, ராஜ தந்திரம், அணுகு முறை இவை மட்டுமின்றி, பிடிவாதம், யதேச்சாதிகாரப் போக்கு, ஆணவம், தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற எண்ணம், தான் வைத்ததே சட்டம் என்ற கருத்து போன்ற பலவும் ராஜீவிடம் இல்லை. அது இன்றைய இந்தியாவின் நல்ல காலம். ஒருவேளை நீங்கள் கூறுவதுபோல் அனுபவம் ஏற்பட ஏற்பட இவருக்கும் அவை யெல்லாம் வந்து விடுமோ என்னமோ! நினைத்தாலே பயமாயிருக்கிறது!

* டி. எல். ரெட்டி, வேலிடுபட்டி

? தமிழ்நாட்டு மின்சாரம் தமிழ்நாட்டு அரசியல் எது உயர்ந்தது?

! முன்னது நஷ்டக் கணக்கினால் தரம் தாழ்ந்தது; பின்னது லாபக் கணக்கினால் தரம் தாழ்ந்தது!

* ப. விஜயபாலன், பம்பாய்

? தாஜ்மகாலைப் பார்த்தபோது உங்கள் மனத்தில் மேலிட்ட உணர்வு காதலா, கட்டிடக் கலையா?

! முதல் பார்வையில் கலை அழகு; அடுத்ததாக உழைப்பின் வெற்றி; அப்புறம் நிதானமாக யோசிக்கும்போதுதான், 'அடேயப்பா காதலுக்கு இவ்வளவு சக்தியா?' என்ற எண்ணம்.

* ஆர். அப்துல் சலாம், திருச்சி

? தொடர்ந்து பத்து நிமிஷம் ஒரு பொதுக் கூட்டத்தில் எம். ஜி. ஆர். பேசினாராமே?

! பத்து நிமிஷம் பேசியது இன்று அவர் உடல்நிலையில் ஒரு சாதனைதான் என்றாலும், என்ன பேசினார் என்று பார்க்கும்போது ஏமாற்றமே ஏற்படுகிறது.

* அ. விவேகானந்தன், திருச்சி

? பொதுவாக இன்றைய திரைப் படங்கள் குறித்து என் போன்ற இளைஞர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

! நிழல்கள் நிஜமாகாது.

* திருமதி ராணி கோவிந்த குமார், நீடாமங்கலம்.

? எம்.ஜி. ஆரின் பெயரைக் கெடுப்பதில் மிக மும்முரமாக இருப்பவர் யார்?

! ஒருவருக்குள்ள நல்ல பெயரை இன்னொருவர் கெடுப்பது என்பது நடக்காத காரியம். நம்முடைய நற்பெயர் கெட்டுப் போகிறதென்றால் அதற்கு நாமேதான் காரணமாயிருக்க முடியும். சரியான தருணத்தில் எடுக்கப்பட்ட முறையான நடவடிக்கையால் எப்போதுமே நற்பெயரைக் காத்துக் கொள்ள முடியும்.

* மு. மேத்தா பிரியன், துடுப்பதி

? அப்பா கொடுத்த கல்கண்டிற்கும் மகன் தரும் கல்கண்டிற்கும் என்ன வித்தியாசம்?

! வைத்தியச் சரக்கு அதிகம் என்ற முறையில் அப்பா தந்தது பனங்கல்கண்டு.

* [illegible] அனுபவம்

[illegible] இல்லை

* பனங்கல்கண்டு









* பி. சத்திய நாராயண மூர்த்தி,
சென்னை — 93

? வழக்கறிஞர் என்.வி. ராகவாச்சாரியை மேல் சபை உறுப்பினராக நியமித்திருப்பது குறித்து.....?

! என்ன சார் நீங்க, சுத்த மோசம்! மற்ற அத்தனை பேரும் வெண்ணிற ஆடை நிர்மலா நியமனம் பற்றித்தான் கேட்டிருக்காங்க..... உங்களுக்கு மட்டும் என்ன வந்தது!

* வண்ணை கணேசன், சென்னை — 11

? கே.ஏ.கே. ராஜினாமா பற்றி?

! சென்றவாரமேஎழுதினேன்;'பாராட்டை வாபஸ் பெற நேராது என நம்புவோம்' என்று. ஐம்பது சதம் பாராட்டை வாபஸ் பெற வைத்துவிட்டார், துணிந்த பின் எண்ணியதின் விளைவாக.

* மு. பாலசுப்பிரமணியம், திருச்சி *

? 1987ம் ஆண்டில் பூரண மதுவிலக்கு என்று அறிவித்த பின், பட்ஜெட்டில் மது விலக்குப் பிரசாரத்துக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கிப் பணத்தை விணடிப்பதா?

! விணடிப்பதாவது! பைசா விரயமாகாமல் போய்ச் சேர வேண்டியவர்களிடம் போய்ச் சேர்ந்துவிடும், கவலைப்படாதீர்கள்!

* ஆர். இளங்கோ, ஏந்தல்

? 'நான் 43 வருஷ அரசியல் அனுபவம் உள்ளவன்; ராஜீவுக்கு இன்னும் 43 வயது கூட ஆகவில்லை. இதை அவர் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்' என்று ஜெயவர்த்தன கூறியிருப்பது குறித்து?

! வயதும் அனுபவமும் மட்டுமே அரசியல் அறிவில்முதிர்ச்சியைத்தந்துவிடாது. வயதில் குறைந்தவர்கள் எல்லாரும் அரசியல் ஞான சூனியங்கள் என்று முடிவு கட்டிவிடவும் முடியாது. இதற்கு எத்தனையோ எடுத்துக் காட்டுகளைப் புராண இதிகாசங்களில் மட்டுமின்றி உலக சரித்திரத்திலும் காணலாம். இதைக்கூட ஜெயவர்த்தனவின் 43 வருட அரசியல் அனுபவம் கற்றுத் தரவில்லையென்றால் அந்த அனுபவம் உபயோகமற்றது.

* எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப் பட்டி

? பிடிவாதம், மன உறுதி — என்ன வித்தியாசம்?

! என்ன கஷ்டம் வந்தாலும் துரத்திக் கொண்டு போய்ப் பிடிப்பது மன உறுதி. பிடித்தபின் மூன்றே கால் என்று சாதிப்பது பிடிவாதம்.

* மஞ்சுதேவன், கல்கத்தா

? பலமுறை படித்து மகிழ்ந்து, திரும்பத் திரும்பப் படிக்கத் தூண்டும் புத்தகம் எது?

! சபதமே செய்யலாம் — சிவகாமியின் சபதம் என்று.

* மாதவ இராமன், கிருஷ்ணகிரி

? 'எம்.ஜி. ஆரைத் தவிர வேறு யாருக்கும் நாங்கள் பயப்படத் தேவையில்லை' என்கிறாரே அமைச்சர் காளிமுத்து?

! அந்த எம்.ஜி. ஆரும் வாக்காளருக்குப் பயப்பட வேண்டியவர் என்பதை மறந்து விடுவதுதான் பல அநீதிகள் நிகழக் காரணமாகிறது.

* பா. நாராயணன், சென்னை — 40

? கர்நாடக மாநிலத்தில் சாராயக் காண்ட்ராக்டில் ஊழல் நடந்தது உண்மை என்று உச்ச நீதி மன்றம் தீர்ப்பு வழங்கி இருப்பது குறித்து?

! உச்ச நீதி மன்றம் ஏற்கெனவே உயர் நீதி மன்றம் அளித்த தீர்ப்பை உறுதி செய்துள்ளது. உயர் நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதி மன்றம் சென்றது கர்நாடக அரசு அல்ல. மாறாக உயர் நீதி மன்றத் தீர்ப்பை ஏற்று கர்நாடக அரசு தலை வணங்கியது. இந்தக் கண்ணியத்தை உச்ச நீதி மன்றம் பாராட்டியுள்ளது. ஊழல் அல்லது முறைகேடு நடந்தது உண்மை எனினும் அதில் உள்நோக்கம் ஏதுமில்லை என்று உயர்நீதி மன்றம் கூறியதை உச்ச நீதி மன்றம் ஆமோதித்துள்ளது. விஷயம் இவ்வளவு தெளிவாக இருக்கும்போது,ஹெக்டே தார்மீகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்து மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதையும் மறந்து, ராஜீவ் ஒரேயடியாகக் குழப்பிக் கொண்டு, பொருந்தி வராத எடுத்துக்காட்டுக்களைக் கூறி, ஹெக்டேயின் ராஜினாமாவைக் கோரியதுதான் ஆச்சரியம். ஆனால் அதனாலும் ஒரு நன்மை விளைந்தது! ஹெக்டேவிடமிருந்து சொல்லாற்றலும் கருத்தாழமும் மிக்கதோர் அற்புதமான கடிதம் பிறந்தது— ராஜீவுக்கு அனுப்பப்பட்டது.

* எஸ். எச். ஷேக்தாவுத், திருச்சி

? எம்.ஜி. ஆர். மக்களைத் திசை திருப்புவதில் வல்லவர்தானே?

! இல்லாமலா மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் என்று கூறி மக்களின் வரிப் பணத்தைத் தண்ணீராய்ச் செலவழிக்கிறார்? பத்து கோடி ஒதுக்குவதாக அறிவிக்கிறார்? நாலு லட்சம் பெறுமானமுள்ள தங்கத் தாமரையைப் பழனி தேவஸ்தான தக்கார் பரிசளிக்கப் பெற்றுக் கொள்கிறார்? தமிழ் வளர்ச்சி என்பது பணத்தை வாரி இறைப்பதால் அடையக் கூடியது அல்ல. அதற்கு யதார்த்த நோக்குடன் கூடிய அமைதியான பணி தேவை.

* ரூ 10 பரிசு பெறுபவர்:
மு. பாலசுப்பிரமணியம்,
C—113, கோட்டை ஸ்டேஷன் ரோடு,
தில்லை நகர், திருச்சி—18.


குழந்தைகளுக்கான அமுல்ஸ்ப்ரே
பாலுணவு இப்போது நருவிசான
புதிய டிசைனிலே வருகிறது*
ஸ்ப்ரே-ட்ரை செய்முறைப்படி தயாரிக்கப்பட்டு, வைட்டமின்-
களும் இரும்புச் சத்தும் சேர்த்து வளமூட்டப்பட்ட அமுல்-
ஸ்ப்ரே, இந்தியாவில் எங்குமுள்ள தாய்மார்களால் மிகவும்
விரும்பப்படும் குழந்தைப் பாலுணவு—உங்கள் குழந்தைக்கு
அமுல்ஸ்ப்ரே துவங்கு முன்பாக உங்கள் டாக்டரிடமோ அல்லது
ஆரோக்கிய நலம் காக்கும் ஊழியரிடமோ ஆலோசனை
கேட்டுப் பெறுங்கள். மறவாதீர்கள், உங்கள் பாப்பாவின் உடல்
நலம் கெடாதிருக்க, டின் மீதுள்ள வழிமுறைக் குறிப்புகளைக்
கவனமாகப் பின்பற்றுங்கள்.
அமுல்ஸ்ப்ரே
குழந்தைக்குத் தாய்ப்பால் தான் சிறந்தது.
Amulspray
Milk food for infants
Enriched with
Vitamins and Iron
Breast feeding
is best for your child
* அரசாங்க விதிமுறைகளின்படி, டின் மீதிருந்து
பாப்பாவின் படம் அகற்றப்பட்டு, வழிமுறைக்
குறிப்புகளில் இதர மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.
விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங்
ஃபெடரேஷன் லிமிடெட், தபால் பெட்டி எண் 10,
ஆனந்த 388 001, குஜராத் மாநிலம்.
OPERATION
FLOOD

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி — 1986

தமிழ் உரைநடை இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்குக் காரணமானவராக விளங்கி பட்டி தொட்டிகளிலெல்லாம் கூடப் பத்திரிகை படிக்கும் பழக்கத்தை உருவாக்கிய அமரர் "கல்கி" அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் கல்கி நடத்தும் சிறுகதைப் போட்டி இது :



முதல் பரிசு	ரூ. 1000
இரண்டாவது பரிசு	ரூ. 500
மூன்றும் பரிசு (இரு கதைகளுக்கு தலா ரூ. 250 வீதம்)	ரூ. 500

ஆக மொத்தம் ரூ. 2000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

* கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் வேறு எந்த உருவிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.

* அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.

* நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசி தேதி : ஜூன் 15

* உறையின்மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

* பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

* கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

* எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

* சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

* போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 3 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.

* எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.

சருக்கம்—3
திருநாகேச்சுரம்

எல்லாரும் தமிழை வாழ்த்துகிறபோது நான் மட்டும் சும்மா இருக்கலாமா என்பது போல, யானைப் பிளிறி வாழ்த்தியது. அந்தப் பிரணவமே வாழ்த்தியது போல மகிழ்ந்து கொள்கிறார்கள்.

முன்னங்காலை முட்டியிட்டுப் பட்டத்து யானை அமர, புலவர்களிருவரும் இறங்கினர்கள். சோழ மாமன்னன் கைலாகு கொடுத்து இறக்கி விடுகிறான்.

முதன்முறையாக அரண்மனையுள் அடியெடுத்து வைத்த இராமதேவர், 'நமச்சிவாய' என்கிற பஞ்சாட்சரத்தை சரணக் கமலாலயத்தில் ஜபித்துக் கொள்கிறார்.

எழுநிலை மாடங்களைக் கொண்ட அந்த அரண்மனையில் சற்றே இளைப்பாறிய இராமதேவர், பிறகு தமக்காக அளிக்கப்பட்ட விருந்தினர் மாளிகைநோக்கிப்புறப்பட்டார். உடனிருந்து எல்லா நலன்களையும் கவனிக்குமாறு கட்டளைப் பணிக்கிறார் ஒட்டக்கூத்தர்.

மன்னன் குலோத்துங்கனும் விருந்தினர் மாளிகையில் பணிபுரிய தூயதான சைவர்களை ஏற்பாடு செய்திருந்தான்.

அரங்கேற்றம் நாளைய மறுநாள்.

அன்று முழுவதும், நன்கு ஓய்வு எடுத்துக் கொண்டார் இராமதேவர்.

துணைக்குத் தம்பி பாலருவாயன் வருவதாக எவ்வளவோ கேட்டுக் கொண்டான். ஏனோ மறுத்துவிட்டார். உடன் அந்தத் தில்லையம்பலவனே வருகிறபோது வேறு துணை தேவையா?

அன்றிரவு குலோத்துங்க சோழ மாமன்னனும் அவைக்குரவர் ஒட்டக்கூத்தரும் வந்து நலன் விசாரித்துச் சென்றனர். அவர்களிருவர் நெஞ்சிலும் இராமதேவரை எவ்வாறு முதலமைச்சர் பதவியான அந்த மாண்புமிக்கப் பதவியை ஏற்கச் செய்வது என்பதிலேயே நினைவுகள் போராடின.

எத்தனையோ கோணங்களில் அவர்கள் சிந்தித்தாகிவிட்டது. சிவ பெருமான் தில்லை நடராஜ மூர்த்தி விட்ட வழி.

இரவு மூன்றும் யாமத்து மணியோசை கேட்கிறது.

தமது அறையில் மல்லிகைப் பூ போன்ற மஞ்சம் விரிக்கப்பட்டிருந்தும், இமைகளும் கண்களும் 'எங்களுக்குக் கொஞ்சம் ஓய்வு தரலாகாதா?' என்று கெஞ்சியும் ஏனோ பலத்த சிந்தனையுடன் உலவிக் கொண்டிருக்கிறார் இராம தேவர்.

அரண்மனை தமக்குச் செய்கிற பணிவிடைகள், ஏதோ ஒரு மகாப் புருஷனுக்குச் செய்கிற சேவை போலிருக்கக் கண்டு வியந்து போனார். முதலமைச்சர் பதவிக்கு வலை விரிக்கிறார்களோ என்கிற இலேசான ஐயமும் எழத்தான் செய்தது.

அதே சமயம்.....

அனைவருமே தூய விசுவாசிகளாக நடந்து கொண்டதை நினைக்கிறபோது நினைவுக்கே ஓர் ஆரோக்கியம் தருவது மாதிரி இருக்கிறதே!

சோழ மாமன்னன், யானைப் பாகனாக அமர்ந்து அங்குசமேந்தி யானையை நடத்துவதா!

ஒரு நாடகத்து இனிய காட்சி போல இருந்தாலும் இது நடக்கக் கூடியதுதானா? நடந்திருக்கிறதே! நிச்சயமாக இது ஒரு நாடகமாக இருக்க நியாயமில்லை; அவசியமுமில்லை. இது தமிழ்பால் பட்ட உணர்வே! பெருமை கொள்ளத் தக்கச் செயலே!

இராம தேவரின் ஆன்மச் சிலிர்ப்பில், கண்களில் ஆனந்த நீர் கரைகட்டவும் செய்தது.

மேல் துண்டால் மெல்ல ஒற்றிக் கொண்டு படுக்கையில் சாய்ந்தார்.

ஒற்றை விளக்கு மெல்லிய ஒளியுமிழ்ந்து கொண்டிருந்தது.

கண்கள் இலேசாக மயங்குகிறபோது....

சலங்கை ஓசை....

சிலிர்த்துக் கண் விழிக்கிறார்.

சுற்றுமுற்றும் கவனிக்கிறார்.

பிறையாகச் சிரித்து மீண்டும் இமைகளை மூடுகிறார்.

மீண்டும் அந்த நாட்டிய சலங்கை ஓசை....

கண் விழிக்கிறார்.

இப்படிச் சில சமயங்களில் அவரைத் தூக்

கோவி.மணிசேகரன்



கத்தில் ஏதோ ஓர் ஒலி வியக்கச் செய்வதுண்டு.

அந்தத் தில்லையம்பலவன் அடிக்கடி, கேள்வியும் அவனே, விடையும் அவனே என்று ஏனோ மருட்டுகிறான்.

ஓகோ! இவ்வளவு தூரம் வந்தவன் — தில்லை அருகாமையில்தானே இருக்கிறது. எனது பிரபஞ்ச அரங்கில் அண்ட சராசரத்துக்குமாக நான் ஆடும் நடனத்தைக் காணக் கூடாதா என்று மருட்டுகிறானோ?

நமச்சிவாய....

நன்றாகவே நித்திரை அவரை நலங் கொள்ளத் தாலாட்டியது.

பொழுது பலபலவென்று விடிகிறது.

வைகறையில் துயிலெழுந்து கொண்ட இராம தேவர், காலைக் கடன்களை இனிது முடித்தார்.

அரண்மனை வாசத்தில் ஒரு சுகமிருப்பதை முதன்முறையாக உணருகிறார்.

இறைவா! இது என்ன சுகவாச கோலம்? உன்னை நினைத்ததன் பயனோ! அன்றி அல்வினைப் பயனோ? நல்வினைப் பயனோ?

காலை, சிவத்தியானத்தில் மூழ்குகிறார்...

மீண்டும் கண் மலரும்போது......

''ஐயா!''

''யாரது?''

ஒரு பணியாளன் தலை வணங்கி, ''வெளியே மகாராணியார் தங்கள் திருமுன் தரிசிக்கக் காத்து நிற்கிறார்'' என்கிறான்.

என்னது? பட்டத்தரசி தியாகவல்லி தேவியாரா?

வாசலைக் கடந்து விரைந்து நடக்கிறார்.

வெளி வாசலில் முத்துப் பல்லக்கு. அதனுள் மோகினியின் பேரலங்காரமாக தியாகவல்லி தேவியார்.

''சக்கரவர்த்தினியார்க்கு என் வணக்கம். இந்த எளியவனைப் பார்க்க நீங்களா! வாருங்கள்!''

ஆபரணங்கள் அசைந்தோசையெழுப்ப, பல்லக்கை விட்டு வெளியே வந்த தியாகவல்லி, வணங்கி நின்றாள்.

''மூன்று தமிழுக்கும் உரிய மகாமானுடத்தைப் பட்டத்து யானையில் அமர்த்தி, பாகனாகப் பலர் முன் காட்சி தந்தார் அனபாயச் சோழர் என்றால், உங்களைக் காண நான் வரக் கூடாதா? நானே எளியவள்!''

பட்டத்தரசி உள்ளே வர, தொடர்ந்து இராம தேவரும் நுழைகிறார்.

''அமருங்கள் சக்கரவர்த்தினி!''

''நீங்கள் அமருங்கள். தமிழைப் பின்னால் அமரச் செய்வது சோழர் குலத்துக்குப் பாவ



மாகும்.''

இராம தேவர் அமர, தொடர்ந்து தியாக வல்லியும் அமருகிறாள்.

''காலைக் கடன்கள் முடிந்தனவா, குன்றத் தூராரே!''

''முடித்துத் தியானத்தில் ஆழ்ந்து மீண்ட மறுகணம் அந்த சிவகாமியே தரிசனம் தந்து விட்டார்.''

''நல்ல தமிழ் படித்த நெஞ்சு ஒன்றுதான் பெண்களைத் தெய்வமாகப் போற்றும். நான் உங்களுடன் காலையுணவு உண்ண ஆசைப் பட்டேன். அதனால்தான் கையோடு கொண்டு வந்து இருக்கிறேன்.''

ஓ...... இவர்கள் என்னை அன்புச் சிறை யில் வைத்துப் பூட்டுகிறார்கள். பெருமானே! இது என்ன திருவிளையாடல்?

''என்னை அழைத்தால் நானே வந்திருப் பேனே, தாயே!''

''அது என் ஆசையாகாது; ஆணைவ மாகும்'' என்று கூறிய தியாகவல்லி, திரும்பி, ''கோமளா!'' என்று குரல் கொடுக்கிறாள்.

அந்தரங்கப் பணிப் பெண்ணான கோமளா, காலையுணவுகளை ஆட்கள் மூலம் கொண்டு வருகிறாள்.

''தமிழ்ச் செல்வமே! நானே உங்களுக்குப் பரிமாறுவதன் மூலம் சோழர் குலத்தைச் சிறக்கச் செய்கிறேன்.''

''நீங்கள் பரிமாறி நான் உண்பதா? அப சாரம்! அபசாரம்!''

''தயவு செய்து மறுக்க வேண்டாம்.''

அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்? ஒப்புக் கொள்கிறார்.

தியாகவல்லி பரிமாற, இராம தேவர் உண்கிற காட்சி.....

குலோத்துங்க சோழ மாமன்னன் இருந்து பார்க்க வேண்டுமே! பார்ப்பதென்ன? அவர் அரண்மனையிலிருந்து மானசீகமாகப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறார்?

''குன்றத்தூராரே! ஒரு வேண்டுகோள்!''

''சொல்லுங்கள் சக்கரவர்த்தினி.''

''குடமூக்குக்கு அண்மையில் திருநாகேச் சுரம் என்ற கோயிலில் எழுந்தருளி இருக்கும் ஈசனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர் களா?''

''அறிவேன் தாயே!''

''என் பொருட்டு அங்கு சென்று வர வேண்டும். அதுவும் என் பல்லக்கில் அமர்ந்து சென்று வர வேண்டும். அது என் பாக்கிய மாகும்.''

''நான் இல்லைக்குச் செல்லலாம் என்றிருந் தேன்.''

''நாம் அனைவருமே அங்கு செல்ல இருக் கிறோமே!''

''நாம் அனைவருமே என்றால்?''

இராம தேவருக்குப் புரை தட்டியது. நீர் அருந்தினர்.

''மன்னருடன் செல்ல வேண்டியதாக இருக்கும் என்று சொன்னேன்.''

இராம தேவருடன், தியாகவல்லியும் வாழை இலை விரித்து உண்ணுகிறாள்.

இருவரும் உண்டு முடித்தனர்.

''அத்துடன் இன்னொரு வேண்டுகோள்!''

''சொல்லுங்கள் சக்கரவர்த்தினி.''

''இங்கே இரண்டு அமைச்சர்கள் இருக் கிறார்கள். ஒன்றும் தெரியாமலேயே கேள்வி ஞானத்தை வைத்துக் கொண்டு எல்லாம் தெரிந்த பல்கலைவாணர்களைப் போலப் பாவனை செய்து வருகிறார்கள். அவர்களுக் குச் சற்றே சூடு வைத்துச் செல்வீர்களே யானால் நாட்டுக்குச் சுகம் பயப்பதாகும்.''

''இதை நான் செய்யலாமா?''

''நீங்கள் தாம் செய்ய வேண்டும்.''

''செவி ஞானம் என்பது பெரு ஞான மாயிற்றே! செவிச் செல்வம் தலையான செல் வம் என்கிறாரே திருவள்ளுவப் பெருந் தகை!''

''திருவள்ளுவர் சொன்னது வேறு! உங் களிடம் நான் சொல்வது அதிகப் பிரசங்க மானாலும், தோன்றியதைச் சொல்ல மறுப் பது நல்லதல்ல. பிறந்த குழந்தைக்குச் செவிச் செல்வம் இல்லையானால் ஊமையாகி விடும். செவிகளைக் கொண்டுதான் எதையும் கற்கத் தொடங்குகிறோம். ஆனால் காதில் விழுவது நல்லதாகவும் இருக்கலாம் அல்லதாகவும் இருக்கலாம் அல்லவா? எதைக் கேட்டு வளர் கிறோம் என்பதைப் பொறுத்துதானே அது கேள்வி ஞானமா அல்லது அஞ்ஞானமா என்று நிர்ணயிக்க முடியும்?''

''தாயே!'' என்று கரம்கூப்பிக் கண் கலங்கிப் போனார் இராம தேவர். எவ்வளவு ஆழ்ந்த சிந்தனையோடு பேசுகிறார் அரசி!

''இந்த ஒன்றுக்காகவாவது இவர் விருப் பப்படி நான் திருநாகேச்சரம் சென்று திரும்பு கிறேன். அந்த ஈசன் அறிவார்ந்த ஈசனே!''

பட்டத்தரசி தியாகவல்லி தேவி விடை பெற்றாள்.

தனது பல்லக்கையும் ஆட்களையும் விட்டு விட்டு, கோமளாவுடன் வேறு பல்லக்கில் அமர்ந்து அரண்மனை நோக்கிச் சென்றாள்.

இராம தேவரும், தம்மை அலங்கரித்துக் கொண்டு திருநாகேச்சரத்துக்குப் புறப் பட்டார்.

பாய்புனல் வந்து அலைக்கும் பழங் காவிரித் தென்கரையில், ஞாயிறும் திங்களும் கூடி வந்தாடும் நாகேச்சரத்தை அடைகிறார் இராம தேவர்.

இல்லைக்குச் செல்லவிருந்த பாதங்களை ஏன்தான் தியாகவல்லி, திருநாகேச்சரத்துக் குத் திருப்பினளோ?

விதியின் திருவிளையாடல் விநோதமானது, விசித்திரமானது என்கிற தத்துவார்த்தத் துக்கு இதுவரை எவர் தாம் பதவுரை, பொழிப் புரை, விளக்கவுரை எழுதினர்?

கன்னித் தமிழ் மணக்க காவிரியாள், பொன்னியாய்ப் பிரவகித்துப் பொங்கி வழிந் தோடுகிறாள்.

ஆலய மணி சுநாதமாக ஒலியெழுப்பிக் கொண்டிருக்கிறது.

இராம தேவரைப் பற்றி அந்தக் காவிரி யின் செவிகள் அவ்வளவாகக் கேள்விப் படவில்லை; கேள்விப்பட நியாயமுமில்லை!

அரசாங்கத்திலிருந்து வந்திருக்கிறார் என்ற



அடுத்த முறை,
ஸன்ஃப்ளவர்
பாதுகாப்பு கவசம் மூலம் உங்கள்
குடும்பத்தைக் காத்திடுங்கள்.



ஸன்ஃப்ளவர் இகானமி பேக். நீங்கள் இழப்பதோ சில சில்லறை காசுகளும் சில்லறை வனஸ்பதியும். பெறுவதோ அதி தூய்மை.

WPL/25 35

உங்கள் குடும்பத்திற்கு, முற்றிலும் பாதுகாப்பானதையும், தூய்மையானதையும் கொடுங்கள்: ஸன்ஃப்ளவர் ப்ராண்ட் வனஸ்பதி, விட்டமின் A மற்றும் D செறிந்த, ஊட்டமிக்க, ஆரோக்கியமான வனஸ்பதி உங்களுக்குக் கிடைக்க, ஸன்ஃப்ளவர் பாதுகாப்பு கவசத்தால் ஸீல் செய்யப்பட்டு, பேக் செய்யப்பட்டு வருகிறது.



IS:10633
VANASPATI

ஸன்ஃப்ளவர்

ப்ராண்ட் வனஸ்பதி
இதை விடச் சிறந்தது தூய நெய் மட்டுமே.

கிலோ மற்றும் ½ கிலோ
பேக்குகளில் கிடைக்கிறது.

WIPRO LTD - Closer to the consumer

வெளியில்தான் சாதனை...



* பழனிச்சாமி



* வெங்கிடுசாமி

கோபிச்செட்டிபாளையத்திற்கு அருகிலுள்ள கூகலூரைச் சேர்ந்த விவசாயியான வெங்கிடுசாமி 83–84ம் ஆண்டில் ஒரு ஏக்கரில் 3,560 கிலோ நெல் விளைவித்துச் சாதனை புரிந்தார். இந்த ஆண்டில் அவரது மைத்துனரான பழனிச்சாமி ஒரு ஏக்கரில் 3,815.5 கிலோ நெல் விளைவித்துச் சாதனை புரிந்திருக்கிறார். இவர்களின் சாதனை நெல்லில் மட்டுமல்லாது மஞ்சள் போன்ற மற்ற பயிர்களிலும் தொடர்கிறது.

சாதனைகள் புரிந்து கொண்டிருக்கும் இவர்களைச் சந்தித்தபோது, "சாதனை செய்திருக்கிறோம் என்பது வாஸ்தவம்தாங்க. ஆனா, நாங்களும் ஒரு தொழிலதிபர் மாதிரி முதலீடு, தேய்மானம், வட்டி..... என்று கணக்குப் பார்த்தால் கொஞ்சமும் லாபமில்லீங்க. இந்த நிலையிலே விவசாயிங்களுக்கு எப்படீங்க தொழில்ல ஆர்வம் வரும்?" என்றார்கள்.

— நமது நிருபர்.

ஒரே சிறப்பு காரணமாக அவரை அமர்க்களமாக அழைத்துச் செல்கிறார்கள்.

பல்லியம் முழங்க, பயன் தரு வேதங்கள் பரிசுத்தமாய் ஒலிக்க, பரிவட்டம் சூட்டி அழைத்துச் செல்கிறார்கள்.

சுற்றிச் சூழ்ந்து கவனித்த மக்களுள் ஒருவர் "கிழார்" என்கிறார்; இன்னொருவர் "யாரோ நிலக்கிழார்" என்கிறார். வேற்று இடத்தில் "இவர் தமிழ்க் கிழாரோ?" என்கிறார்கள். ஆக, இராம தேவர் செவிகளில் விழும் சொற்கள் கிழார், கிழார், கிழார்......

தமது குடி, சேக்கிழார் குடி என்பது இவர்களுக்குத் தெரிந்திருக்க முடியாது. ஆனாலும் சுக சங்கீதமாய் இந்தச் சொற்கள் ஒலிக்கின்றன.

கருவறையுள் பிரவேசிக்கிறார் கன்னித் தமிழுக்குச் சொந்தக்காரரான இராம தேவர்.

அவர் அங்கு சென்று நின்று நாகேச்சுரத்து ஈசனை தியானேச்சுரமான இதயத்துள் எடுத்து வைத்து இமைகளை அரை பாகம் மூடி ஈச்சுர மந்திரத்தை ஜபிக்கிற போது.....

அவருக்கு முன்பே அங்கு வந்திருந்த ஜோதி, இராம தேவரைக் கவனித்து இதயம் பூரித்துப் போனான்.

இவர்தான் அந்த 'அலகில் சோதி அம்பலத்து ஆடுவானோ?' என்றெண்ணி, பலனடைய வந்த நெஞ்சை சலனடையச் செய்து சரணாகதியாகிறான்.

இராம தேவர், கங்கை கொண்ட சோழபுரத்துக்கு வந்திருக்கும் செய்தி நேற்றே தஞ்சையில் கேள்விப்பட்டான். திருநாகேச்சுரப் பெருமானை வழிபட்டுவிட்டு, கங்காபுரி செல்ல எண்ணியவன், இப்படி இங்கே தரிசனம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

கோயிலின் தலைமை அர்ச்சகர், 'குன்றத்தூர் இராம தேவர் வருகிறார்! அதுவும் அரசு அனுப்பி வருகிறார்' என்று தனது சக அர்ச்சகர்களிடம் சொல்லிக் கொண்டே பரபரத்த போதுதான் ஜோதியும் அறிந்து ஜோதி கொண்டான்; இப்போது ஜோதி கண்டான்.

ஆமாம், இராம தேவரின் அறிவில் ஜோதி இருப்பதை அறிவான். இப்போது அழகிலும் ஜோதி இருப்பதைக் கண்டு ஆச்சரியத்துக்கு மாலை போட்டான்.

ஓர் அர்ச்சகர் வந்து ஜோதியிடம் நின்று, அவனது அர்ச்சனைத் தட்டைப் பெற்று, "என்ன நட்சத்திரம்?" என்றார்.

"ரேவதி!" *

ரேவதி என்ற சொல், செவிகளில் விழுந்ததும் இமை மூடியிருந்த இராம தேவர், இமை திறந்து கவனிக்க, அங்கே....

பளீர் பளீர் என மின்னலிடும் சௌந்தரிய தேவதை! மின்னல் கொடிக்கும் கனி தரும் இயல்புண்டோ?

பூவை மொய்க்கும் வண்டுகள் இந்த அழகு ஜோதியின் முகத்திலும் ரீங்கரிக்குமோ?

அர்ச்சகர் கேட்கிறார்:

"பெயர்?"

"ஜோதி!"

ஜோதி, ஜோதி, ஜோதி.....

எங்கோ எதிரொலிப்பது போன்ற பிரமை....

(தொடரும்)

* குன்றத்தூரில் சேக்கிழார் எடுத்த திரு நாகேச்சரக் கோயிலில் மாதந்தோறும் ரேவதி நட்சத்திரத்தில் வழிபாடு நடப்பதாக, பேராசிரியர் வெள்ளைவாரணனார், தமது 'பன்னிரு திருமுறை வரலாறு' என்ற நூலில் குறிப்பிடுகிறார். இது சேக்கிழார் நட்சத்திரமாக இருக்க வேண்டும்.

காட்பரிஸ்

போர்ன்விடா



சுறு சுறுப்புப் பானம்!



"ஒரு டம்ளர் பாலிலே இரண்டு ஸ்பூன் போர்ன்விடா அதுவே சுலமான சுவையான பானம்—அதை, என் குழந்தைகளுக்கு அன்றாடம் இருவேளை தருகிறேன்.

என் குழந்தைகளுக்கு, கோகோ, மால்ட், பால், சர்க்கரை ஆகியவற்றின் போஷாக்கினைத் தருகிறது போர்ன்விடா. அவர்கள் வளரும் காலம் முழுவதும் அவர்களுக்குத் தேவைப்படும் ஊட்டச் சத்தையும் சக்தியையும் அளிக்கிறது. அவர்கள் நல்ல வளர்ச்சி பெறுகிறார்கள். ஆகவே நல்ல வளர்ச்சி, போர்ன்விடா பயிற்சி."

போர்ன்விடாவின் இனிமைக்காலம். போர்ன்விடா அளித்துவரும் பாசமணங்கள் நேசத்தோடு நினைந்து மகிழும் ஒருநாள்.



இப்போது பிரச்சாரக்கழிவாக ரூ. 2/- தள்ளுபடியுடன் கிடைக்கிறது.

OBM/4686/TAM

அநாமதேயத்

ஆண்டு விழியை நன்றாக உருட்டிப் பார்த்துச் சிரித்தது அந்தக் குழந்தை. கடை முழுவதும் கொட்டிக் கிடக்கும் அத்தனை பொம்மைகளையும் வாங்கிக் கொடுத்தால் கூட அள்ளி வைத்துக்கொண்டு, அப்புறமும் உருள விழிக்கும்....

ஒரு கூடைச் சுமையை அதன் அப்பா தூக்கிக் கொண்டு நடக்க, ஒரு கையால் அவரைப் பிடித்துக் கொண்டு, மறு கைக் கட்டை விரலை வாயில் சூப்பிக் கொண்டே நடந்தது குழந்தை. அடிக்கொருதரம் 'இன்னும் என்ன பாக்கி' என்கிற மாதிரி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே அது நடந்து போனது.

கடை வாசலில் நின்றபடி ரங்கராஜன், பார்த்துக் கொண்டே இருந்தார். 'அப்படிப் பார்த்தால் திருஷ்டி விழாதோ குழந்தைக்கு' என்கிற காலம் இப்போது அவ்வளவாய் இல்லை. அதுதான் சினிமாவிலும் ட.வி. யிலும் தினுசு தினுசாய்ப் போஸ் கொடுத்து அட்டகாசம் பண்ணுகின்றனவே!



"யாருக்கு என்ன வேணும்.... ரொம்ப நேரமா நிற்க வச்சுட்டம்.... மன்னிக்கனும். ஸாரி....." வியாபார மொழியில் கடைக் காரன் விசாரித்தான்.

அப்போதுதான் விழித்துக் கொண்டார் ரங்கராஜன். எதைச் சொல்லுவது? வெறுமனே பார்த்துவிட்டுப் போகத்தான் வந்தேன் என்று சொல்லி விடலாமா? அது மரியாதையைக் காப்பாற்றுமா? 'இதெல்லாம் என்ன விலை?' என்று கேட்டுவிடலாம். ஆனால் கடையில் சொல்லக் கூடிய விலையில் கால் பாகம் கூடப் பையில் இல்லை என்பதும் சேர்ந்தே நினைவுக்கு வந்தது.

அப்படி இப்படி என்று ஆராய்ந்து, சாய்த்தால் விழியை உருட்டுகிற முயல் பொம்மையை வாங்கிக் கொண்டார். சுத்தமாக 'பேக்' செய்யப்பட்டிருந்தபொம்மைப்பெட்டியுடன் தெருவில் நடந்தபோது அவருக்குச் சங்கடமாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. இருந்தாலும் யாராவது பார்க்கப் போகிறார்களே என்று கூச்சமும் ஏற்பட்டது. பொம்மைப் பெட்டியை அப்படியே, கைப் பையில் திணித்துக் கொண்டார்.

அவர் மகள் சீதா சிரிப்பதுபோல் ஒரு 'களுக்' ஒலி கேட்டது. பின்னால் எவளோ ஒருத்தி தோழியுடன் பேசிக்கொண்டு சுற்றுப் புறச் சூழலையே மறந்து சிரித்துக் கொண்டிருந்தாள். அவள் புடைவைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு நின்றது ஒரு நண்டு. சீதாவின் புடவைத்தலைப்பையும் இப்படித்தான் அவள் குழந்தை பிடித்து இழுப்பாளோ....?

தெருவில் நடக்கிற மாலை நேர நெரிசலில் ஆயிரம் சீதாக்கள்... ஆயிரம் பேரன் பேத்திகள் தோன்றி மறைந்தார்கள். இது ஒரு வேடிக்கையான அனுபவமாகப் பட்டது ரங்கராஜனுக்கு.

விட்டில் குழந்தைகள் துள்ளிவிளையாடிப் பார்த்து அவருக்கு இப்போது நினைவே இல்லை. சித்திரை மாதத்து வானத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாய்த் தென்படுகிற மேகக் கீற்றுகள் மாதிரி ஏதோ ஒன்றிரண்டு மங்கலாக நினைவுக்கு வந்தன.

சீதா குழந்தையாக இருந்து தவழ்ந்து விளையாடி இப்போது முப்பது வருஷங்கள் ஆகி விட்டன. மறுபடியும் இப்போது தான் நினைக்க நினைக்க அவருக்கு ஆனந்தமாக இருந்தது.

என்ன ரங்கராஜன்! என்ன ஒரே யடியா யோசனை.... ரோட்டைப் பார்த்து நடந்து போங்க.... எவனுச்சும் என்னை மாதிரி ஸ்கூட்டர்வாலா மோதிட்டுப்

சுப்ர பாலன்

தடைகள்!

போறுன்னு முழுக் கனவும் கலைஞ்சு போயிடும்." கனகப்பன் சிரித்தார்.

கனவுகளிலிருந்து விடுபட்டு நண்பர் கனகப்பனின் கிண்டலைப் புரிந்து கொள்வதற்குச் சில விநாடிகள் பிடித்தன. கனகப்பன் ஸ்கூட்டரை ஓரம் கட்டினார்.

"ஒண்ணுமில்லே கனகப்பா. என்னமோ ஞாபகம். சீதாவுக்குக் கல்யாணம் நிச்சயமாகப் போறது. அனேகமா வர ஞாயிற்றுக் கிழமை நிச்சயதார்த்தம் இருக்கும். பொண்ணைப் பார்த்துட்டுப் பிடிச்சருக்குன்னு சொல்லிட்டுப் போயிருக்கா. யாரோ வீட்டுக்குப் பெரியவர். அவர்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டுத் தாம்பூலம் மாத்திக்க வரோம்னு சொல்லிட்டுப் போயிருக்கா." நடுத்தெரு என்றும் பாராமல் படபடவென்று கொட்டித்தீர்த்தார் ரங்கராஜன். சந்தோஷமோ, துயரமோ, மனசுக்குள்ளேயே தேக்கி வைத்துக் கொள்வது எவ்வளவு சிரமம்! அணுக்கமானவர்களிடம் சொன்னால்தான் மனம் லேசாகிறது.


கனகப்பன் சந்தோஷமாகக் கைகுலுக்கினார். "எப்படியோ நான் ஆனாலும் நல்லபடியா முடிஞ்சதேன்னு சந்தோஷப்படுங்கோ. மேலே நாலஞ்சு ஆனாலும் விட்டுடாதீங்கோ. ஏதாவது அவசரம் அவசியம்னா என்னையும் கேளுங்கோ."

விடை பெற்றுக்கொண்டு அவர் போன பிறகுதான் அவரையும் அவர் மனைவியையும்கூட நிச்சயதார்த்தத்துக்கு வரச் சொல்லியிருக்கலாம் என்று தோன்றியது ரங்கராஜனுக்கு. கூடவே ஞாயிற்றுக் கிழமையன்று நிச்சயதார்த்தம் நடைபெறுவது இன்னும் உறுதியாகவில்லையே என்றும் நினைவுக்கு வந்தது.

சீதாவின் கல்யாணம் என்று நினைத்துக் கொண்டவுடன், சற்று முன்னால் அசட்டுத்தனமாய்ப் பராக்குப் பார்த்துக் கொண்டு போனது எவ்வளவு பெரிய தவறு என்பது புரிந்தது. மகள், அவளுடைய திருமணம், அவளுடைய எதிர்காலம் எல்லாம் வரிசையாக நினைவுக்கு வந்தவுடன் தன்னுடைய உயிரின் மீது கூடுதலான புதிய அக்கறை ஏற்பட்டது.

ஏராளமான கனவுகள். நேற்று அவர்கள் பெண் பார்த்துவிட்டுப் போனதிலிருந்து அவரே சொர்க்கலோகத்தில் திளைத்துக் கொண்டிருந்தார்! 'நல்ல மனிதர்களாகவே தெரிகிறார்கள்' என்று அவருடைய மனைவி சுபத்ரா சொன்னது நூற்றுக்கு நூறு சரிதான் என்று தோன்றியது. சம்பிரதாயமாக எல்லாம் பேசி முடித்து, அவர்கள் புறப்பட்டுப் போனபோது, வாசல்வரை சென்ற பையன் திரும்பி..... சீதாவை அழைத்து, அவளிடமும் போய்விட்டு வருகிறேன் என்று சொன்னது, முகம் சிவக்க, உடல் வியர்க்கப் படபடத்து சீதா உள்ளே ஓடியது— எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்தபோது ரங்கராஜன் ஆகாயத்திலேயே மிதந்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

பொம்மை வாங்கியது போகப் பையில்



மூன்று ரூபாயும் கொஞ்சம் சில்லறையும் இருந்தது. கொஞ்சம் மல்லிகைப் பூ வாங்கிக் கொண்டார்.

"மூப்பதாயிரம் ரூபாயாவது ரொக்கமாக வேண்டாமா..... என்ன பண்ணப் போறேள்?" சுபத்ரா கேட்டபோதுதான் அவருக்கு அந்தப் 'பெரிய' விஷயம் பற்றிய சிந்தனை விசுவரூபம் எடுத்தது. மனசுக்குள் கணக்குப் போட்டுப் பார்த்தார். சீதாவின் சேமிப்பில் ஒரு பத்தாயிரம் இருக்கும். அவருடைய பிராவிடண்ட் பண்ட் கணக்கில் ஒரு பத்தாயிரம்...... கல்யாணக் கடனில் ஒரு மூவாயிரம் என்று திரும்பத் திரும்ப யோசித்து....ஐயாயிரம்ரூபாய்தானே துண்டு விழுகிறது, சமாளிக்கலாம் என்று மனசைத் தேற்றிக் கொண்டார். மேலே நாலஞ்சு ஆனாலும் கவலைப்படாதே என்று சொன்ன கனகப்பன் மாதிரி பலர் சொல்லிவிட்டார்கள்.

ஒரே பெண்ணைப் பெற்றுவிட்டு எத்தனையோ இடையூறுகளில் அவளுக்கு ஒரு நல்ல இடமாகப் பார்த்துக் காலாகாலத்தில் கல்யாணம் செய்து வைக்க, அவரால் முடியாமல் போய்விட்டது. ஜாதகத்தில் ஏதோ கோளாறு என்கிறார்கள். எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு இந்த இடம் குதிர்ந்து வருகிற போது சீதாவுக்கு முப்பத்து மூன்று வயது ஆகிவிட்டது. ஏறக்குறைய, அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் என்கிற சொல்லே அந்நியமாகிப் போன வேளையில் இது நிறைவேறுகிறது.

"சீதா! நாளைக்கே வேலை வேணும்னு ராஜிநாமாக் கடிதாசு எழுதிக் குடுத்துட்டு வந்துடு. அவாளுக்குப் பெண் வேலை பார்க்கிறது பிடிக்கல்லே. பையன் கை நிறையச் சம்பாதிக்கிறான். உனக்கு என்ன கவலை. இதுவரைக்கும் உழைச்சதெல்லாம் போறும்."

காலையில் உறங்காமல் உறங்கி விழித்தவுடன் சீதாவிடம் சொன்னதை நினைத்துப் பார்த்தார். பத்துப் பன்னிரண்டு வருஷம் பழகிவிட்ட வேலையைக் கால் கடுதாசில் உதறுவது எவ்வளவு சிரமம் என்பது அவருக்கும் புரியாமல் இல்லை. இருந்தாலும் அது ஒரு கட்டாயமாகிவிட்டது.

அவள் சொன்னபடி வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டு வந்திருப்பாள். அல்லது முன்னறிவிப்பு நோட்டீஸாவது வாங்கிக் கொண்டிருப்பார்கள்.

மனக் குதிரையைக் கடிவாளம் போட்டு நிறுத்த முடியவில்லை. சுதந்திரமாக அது மேய்ந்து கொண்டே போயிற்று. ஒரு வழியாக வீட்டை அடைந்து, சுய நினைவு வருகிற வேளையில், சுபத்ராதான் வாசலில் நின்று கொண்டிருந்தாள்.

வாசல் படியேறும்போதே, "சீதா வந்துட்டாளா?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார் ரங்கராஜன்.

"வந்துட்டேன்'பா!" என்று குரல் கொடுத்துக் கொண்டே வெளியே வந்தாள் சீதா.

மல்லிகைப் பூவை அள்ளி அவள் கையில் கொடுத்தார். வழக்கப்படி கைப்பையை வாங்க அவள் கைநீட்டியபோது, ரங்கராஜன் சமாளிக்க வேண்டி வந்தது. "ஒண்ணுமில்லேம்மா. வெறும் பைதான். நானே கொண்டு வரேன்....." என்று சொல்லிக் கொண்டே அவசரமாக அறைக்குள் நுழைந்து பொம்மைப் பெட்டியை எடுத்து பீரோவின் அடித் தட்டில் வைத்துவிட்டுத்தான் முகம் கழுவக் குளியலறைக்குப் போனார் ரங்கராஜன்.

தற்காலிகம்தான். நாளைக்கே சீதாவோ இல்லை சுபத்ராவோ அலமாரியில் எதையாவது எடுக்கத் திறக்கும்போது பார்த்து விடுவார்கள். அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டார்.

"அப்பா! ரிஸைன் பண்ண வேண்டாம்னு ஆபீஸர் சொல்றார்'பா. வேணும்னு ரெண்டு வருஷம், மூணு வருஷம் லீவு போட்டுக்கோ. அப்புறம் பார்த்துக்கலாம்னு சொல்றார்'பா. முதல் தேதியிலிருந்து ரெண்டு வருஷம் லீவு வேணும்னு கேட்டு எழுதிக் குடுத்துட்டேன்'பா" என்று சீதா சொன்னபோது அவருக்குக் கோபமாக வந்தது. யார் அவன் ஆபீஸர்? அவனுக்கென்ன வந்ததாம்....?

"அதெல்லாம் வேண்டாம்மா! அவா சொன்னதுக்கு அப்புறம் லீவு போடப்படாது. நாளைக்கே ராஜிநாமாக் கடிதாசு குடுத்துடு. எதுக்குத் தயங்கறே....?"

அவள் போய்விட்டாள். இன்னும் மனக் குதிரை மேய்ச்சல் களம் நாடியது. கல்யாண



வக்கற்றவன் வாத்தியார் வேலைக்கும், போக்கற்றவன் போலீஸ் வேலைக்கும்தான் போவான் என்பது கிராமங்களில் வழங்கி வரும் பழமொழி. ஆசிரியர்களையும் காவல் துறையினரையும் இழிவு படுத்துவது போலமைந்த இப்பழமொழி பற்றி ஒரு தமிழாசிரியரிடம் கேட்டதற்கு அவர் கூறிய விளக்கம்:

'வாக்கு கற்றவன் வாத்தியார் வேலைக்கும், போக்கு கற்றவன் போலீஸ் வேலைக்கும், அதாவது நல்ல சொல்லாற்றலைக் கற்றவன் ஆசிரியராகவும், உலக நடப்பை கற்று புரிந்து கொண்டவன் போலீஸாகவும்' என்றுதான் அப்பழமொழி இருந்திருக்க வேண்டும். பேச்சு வழக்கில் நாளடைவில் அது திரிந்து இப்படி விபரீதப் பொருளைத் தந்து நிற்கிறது!

— கிரிஜா மணாளன்.

மண்டபம்.... ஏற்பாடுகள், பத்திரிகை.... ரிஸப்ஷன்..... எல்லாம் கண நேரத்தில் வரிசையாகக் கண்ணுக்குள் ஆட்டம் போட்டன. இரவு உறக்கம் அழுத்துகிறவரை அவரை விடவில்லை.

மறுநாள் விடிந்தது. எதிர்பார்ப்புப் பரபரப்பில் எல்லாமே வேகம் குறைகிற மாதிரி ஒரு பிரமை.

ஏழு மணி. வாசலில் கார் வந்து நிற்கும் ஒலி தெளிவாகக் கேட்டது.

குறுகுறுப்புடன் வாசலுக்கு விரைந்த ரங்கராஜனை வரவேற்றது காரின் டிரைவர் மட்டுமே.

''ஐயா, இந்தக் கடிதாசைக் குடுத்துட்டு வரச் சொன்னாங்க.''

கடிதத்தைக் கொடுத்த சுருக்கில் அவன் காரைக் கிளப்பிக் கொண்டு பறந்தான்.

கடித உறையைப் பிரிக்க அவருக்குத் தயக்கமாக இருந்தது. காகித உறையானாலும் சுமக்க முடியாமல் கனத்தது.

''சுபத்ரா.... சுபத்ரா.....!'' அழைத்துக் கொண்டே உள்ளே போனார். ஊஞ்சலில் போய் அமர்ந்து கொண்டார்.

''கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா'' அவள் ஓடினாள். செருமிக் கொண்டே கடித உறையைப் பிரித்தார் ரங்கராஜன்.

சுருக்கமாக நான்கைந்து வரிகள்.

''......... பெரியவருக்குச் சம்மதமில்லை. அவருடைய சம்மதமில்லாமல் எதையும் செய்து எங்களுக்கு வழக்கமில்லை. ஆசை இருந்தும் எங்களால் முடியவில்லை. மன்னியுங்கள்.''

அவருக்குக் கண்கள் இருண்டு வந்தன. வரதட்சணை சம்பிரதாயங்கள், ஜாதிப் பாகுபாடுகள், ஜாதகப் பொருத்தங்கள் — எவ்விதத் தடைகளையும் மீற முடிந்தாலும் இப்படிப் பெரியவர்கள் என்று யாரோ அநாமதேயங்களுக்காகத் தூளாகிற கனவுகள்..... இது சமுதாயமா இல்லை சந்தைக் கடையா?

சீதா குளித்துவிட்டுப் புதுசாக வெளியே வந்தாள். அவளை நிமிர்ந்து பார்க்க அவருக்குத் திராணி இல்லை. சுபத்ரா பழகிப் போன மௌனத்தில் மேலும் இறுகிப் போனாள்.

சீதாவுக்கு— அவர்கள் இருந்த நிலை வழக்கமான கதையைச் சொல்லிற்று. சற்று முன்னால், குளிக்கப் போகும்முன் எழுதி வைத்த ராஜினாமாக் கடிதத்தை எடுத்து நிதானமாகக் கிழித்தாள்.

''அப்பா! எனக்குப் பழகிப் போச்சு. இதெல்லாம் நிஜமில்லே. பத்து வருஷமாச் சோறு போடறதே. அந்த உத்தியோகம், அது ஒண்ணுதான் நிஜம்.....'' சிரித்தாள்.

அவருக்கு முதல் நாள் இரவு வாங்கிய முயல் பொம்மை நினைவுக்கு வந்தது. குமுறி அழ வேண்டும் போல் இருந்தது. மேலும் ஒரு தம்ளர் தண்ணீரைப் பருகி நினைவுகளையும் கனவுகளையும் சேர்த்து விழுங்கினார்.....



வாசகர் பங்கு

சென்ஸார் தேவையில்லையா?

மூக்கு உள்ளவரை சளி தீராது!

சென்ஸார் போர்டு இருந்து மட்டும் என்ன வாழுதாம்? அது இருக்கும்வரை லடாய் நடந்து கொண்டுதானிருக்கும். 'திருடனைப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிப்பது கடினம்' என்றபடி படாதிபதிகளே நாட்டுப் பண்பு, நல்லொழுக்கம் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் நல்ல, தரமான படங்களைத் தயாரித்து வெளியிட வேண்டும். சென்ஸார் போர்டைக் கலைத்துவிட்டால் இந்தப் பொறுப்பு அவர்களுக்குத் தானாக வந்துவிடும்.

— ஜி. என். மேரி மைக்கிள், சென்னை — 19

சான்றிதழ் தந்தாலே போதும்

ஒரு திரைப்படத்தில் சம்பந்தம் இல்லாத இடத்தில் வேண்டுமென்றே கவர்ச்சி நடனங்களைச் சேர்ப்பதனால் அப்படத்தின் வெற்றி வாய்ப்புகள் அதிகரித்துவிடுவதில்லை. நல்ல கதை, சிறந்த நடிப்பு இவற்றுக்காக மட்டுமே பல படங்கள் இன்று வெள்ளி விழாக் கொண்டாடுகின்றன. எனவே தணிக்கை குழுவானது ஒரு படத்திற்கு 'A' அல்லது 'U' சான்றிதழ் தருவதோடு நிறுத்திக் கொண்டாலே போதும்.

— வி. கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீஹரிகோட்டா.

ஏன் இந்தப் பாரபட்சம்?

முக்தா சீனிவாசனின் கருத்தை ஆமோதிக்கிறேன். பெருநகரங்களில் உள்ள மக்களுக்குத் தணிக்கை செய்யப்படாத படம், சிறு நகரங்களில் உள்ளவர்களுக்குத் தணிக்கையான படம் என்று திரையிடுவது என்ன நியாயம்? மேலும் தணிக்கை என்பது அரசாங்கத்தைத் தடையின்றி விமர்சிக்க விடாமல் ஒரு முட்டுக்கட்டையாகவே இருந்து வருகிறது.

— ஆர். தமிழரசி, சிதம்பரம்.

அறிவிப்பு வெளியிட்டால் என்ன?

தணிக்கை செய்யப்பட்ட படத்தில் கூடத்தான் சம்பந்தமே இல்லாத ஆபாச, வன்முறைக் காட்சிகள் இடம் பெறுகின்றன! மது விலக்கில் தீவிரம் காட்டாத நமது அரசு, எப்படி மது அருந்துவதும், புகைப் பிடிப்பதும் ஆபத்து என்று அறிவிக்கிறதோ அதே மாதிரி 'ஆபாசப் படங்களைப் பார்ப்பது மனதிற்கு கேடு விளைவிக்கும்' என்று அறிவிப்பு வெளியிட்டால் என்ன?!

— க. முனுசாமி, இராணிப்பேட்டை.

ஹைதர் அலிக் காலத்துச் சட்டம்!

இந்தியத் திரைப்படங்கள் தேசிய உணர்வைத் தூண்டுவதைத் தடுக்க பிரிட்டிஷ் அரசு

பிறப்பித்த அதே ஸென்ஸார் சட்டம்தான் இன்றும் அமுலில் இருக்கிறது. அரசால் நியமிக்கப்படும் சென்ஸார் குழு அரசைக் கண்டிக்கிற, விமர்சிக்கிற காட்சிகளையும் வசனங்களையும் தடை செய்துவிட்டு, சமுதாயத்தைப் பாழ்படுத்துகிற ஆபாசக் காட்சிகளை இரட்டை அர்த்த வசனங்களை, வன்முறை வக்கிரங்களை அனுமதிக்கிறது. இந்த நிலை நீடிக்கும்வரை இந்த ஸென்ஸார் போர்டினால் பெரிய நன்மை எதுவும் விளைந்துவிடப்போவதில்லை.

— எஸ். சுந்தர்ராஜ், மதுரை—2.

தமிழ்ப் படங்களின் வில்லன்

மந்தாகினி குழந்தைக்குப் பாலூட்டுவதை ராஜ்கபூர் ஹிந்திப் படத்தில் காட்டினால் அது தாய்மை! சினு (ஆங்கிலம்) படத்தில் வரிக் குதிரை மீது அமர்ந்து வரும் கதாநாயகி முழு நிர்வாணமாகக் காட்சி தரலாம்; அது காட்டுராணியின் இளமை! ஆபாசமான தமிழ்த் தலைப்புகளுடன் பல மலையாளப் படங்கள், கன்னிப் பெண்களின் கற்பை வியாபாரமாக்கலாம்; அது அந்தப் படங்களுக்கே உரிய தனித்தன்மை! ஓஹோ என்று ஓடும் அந்தப் படங்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் அம்பேல் ஆகும் தமிழ்ப் படங்களுக்கு 'வில்லன்' தான் இந்த ஸென்ஸார். இப்படிப் பட்ட ஸென்ஸார் நமக்குத் தேவையா?'

— ஜெயலக்ஷ்மி ராகவன், கோயமுத்தூர்.

இது ஜனநாயக நாடு

ஜனநாயக நாட்டில் 'மீடியா' சுதந்திரம் வேண்டாமா? ஆண்டுக்குக் கிட்டத்தட்ட எண்ணூறு திரைப்படங்கள் நம் நாட்டில் தயாராகின்றன. இவ்வளவையும் பார்க்கும் ரசிகர்களுக்கு நல்லது கெட்டது தெரியாமலா இருக்கும்? வி.ஸி.ஆர். வேறு வந்துவிட்டது இப்போது. எனவே ஸென்ஸார் அர்த்தமற்றதாகிறது. அதற்குப் பதிலாக திரைப்படங்கள் எடுக்க ஒரு சட்டம், ஒழுங்கு முறை வகுத்துத் தரலாம்.

— திருமதி சரோஜ் ரத்னம், சென்னை—102

சீர் திருத்தம் வேண்டாம், சிறு திருத்தம் போதும்!

ஸென்ஸாரை ஒழித்துக் கட்டுவது என்பது மூட்டைப் பூச்சிக்காக வீட்டைக் கொளுத்துவதற்குச் சமமாகும். 'நாலாவது நான்' படத்தைப் பார்த்ததால்தான் ஒன்பது கொலைகள் செய்யத் தூண்டப்பட்டதாகச் சொன்னார் ஜெயபிரகாஷ். எனவே தற்போதைய சூழ்நிலைக்கு ஸென்ஸார் மிக மிக அவசியம். ஆனால் பிராந்தியப் பாகுபாடு இன்றி தேசியக் கண்ணோட்டத்துடன் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். சீர்திருத்தம் செய்யாவிட்டாலும் ஸென்ஸாரில் இந்தச் சிறு திருத்தமேனும் செய்தால் நன்றாக இருக்கும்.

— போடி ரவிராஜ், திண்டுக்கல்.

ஸென்ஸார் நிச்சயம் தேவை

திரைப்பட விழாவில் நடந்த கருத்தரங்கில் ஒரு மொழிப் படத்தில் அனுமதிக்கப்படும் காட்சி மற்ற மொழிப் படங்களில் அனுமதிக்கப்படுவதில்லை என்று குற்றம் சாட்டப்பட்டது. ஓர் ஆண்டுக் காலம் ஸென்ஸாருக்கு 'விடுமுறை' அளித்துவிட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இது 'ஓர் ஆண்டுக் காலம் திருடவும் கற்பழிக்கவும் அனுமதித்துப் பார்க்கலாம்' என்று சொல்வதற்குச் சமமான செயல். அதனால் ஸென்ஸார் நிச்சயம் தேவை.

— எம். பத்மா, நாகர்கோயில்—2.

நீலப் படம் குடும்பப் படமாகிவிடும்!

ஸென்ஸார் இருக்கும்போதே காது கொடுத்துக் கேட்க முடியாத வசனங்களும் குடும்பத்துடன் பார்க்க முடியாத காட்சிகளும் படங்களில் வருகின்றன. இந்நிலையில் ஸென்ஸார் இல்லையெனில்..... ப்ளூ ஃபிலிமையே குடும்பப் படம் என்று வெளியிட்டுவிடுவார்கள்!

— டி.ஏ. பெரியசாமி, சென்னை—28.

சினிமாக்களின் மானம் காக்க....

'மலராத பெண்மை மலரும், முன்பு தெரியாத உண்மை தெரியும்' என்ற முதலிரவுக் காட்சிப் பாடல், பாச மலர் படத்திற்குக் கவிஞர் கண்ணதாசன் எழுதி இருந்தார். பத்துத் தடவைக்கு மேல் இக்காட்சியைப் போட்டுப் பார்த்த ஸென்ஸார் குழு இவ்வரிகளை வெட்ட வேண்டும் என்று அபிப்ராயப்பட்டது. ஆனால் அதன் தலைவர் கே.டி. சாஸ்திரி இதில் சொல்லப்பட்டிருக்கும் விஷயம் எங்களை வெட்கப்படச் செய்தாலும் அதைச் சொல்லியுள்ள முறை எங்களைச் சொக்க வைக்கிறது என்று சொல்லி, அப்பாடலை அனுமதித்துவிட்டார்.

ஆனால் இன்றோ தமிழ் சினிமாவில் இரட்டை அர்த்த வசனமும், விரசமும் மலிந்துவிட்டன. எனவே சினிமாக்களுக்கு ஆடை உடுத்தி அனுப்பக் கண்டிப்பாக ஸென்ஸார் தேவைதான்.

— ஏ. சிவாஜி, அகத்தீசுவரம்.

ஆசையே போய்விடும்

திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு வேண்டுமானால் ஸென்ஸார் தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால் பார்வையாளர்களான நமக்கு அது கண்டிப்பாகத் தேவை. இந்தப் போக்கில் போனால் குடும்பத்தோடு படம் பார்க்கும் ஆசையே போய்விடும்.

— பெ. கிருஷ்ணமூர்த்தி, மோகனூர்.

சினிமாவே வாழ்க்கையெனும் போது

நம் நாட்டு மக்கள் சினிமாவை வாழ்க்கையின் ஓர் அங்கமாகக் கருதுபவர்கள், அதை நிஜம் என்றே எண்ணி, தங்கள் வாழ்வில் கடைபிடிக்க நினைப்பவர்கள். இப்படிப்பட்ட

சமுதாயத்தில் மக்களை நல்வழிப்படுத்தும் வகையிலும், வாழ்க்கையில் நம்பிக்கையூட்டும் வகையிலும் சினிமா அமைய வேண்டும். அப்படி இல்லாமல் பாலுணர்வு, போராட்ட உணர்வு, இரத்த வெறி மற்றும் பல தவறான எண்ணங்களை விதைக்கத் தூண்டும் படங்களையும், இவற்றுக்கு வக்காலத்து வாங்கும் படங்களையும் தணிக்கை செய்வதில் தவறில்லை. தணிக்கையின் மூலமே சக்தி வாய்ந்த சினிமாவை பயனுள்ளதாகவும் ஆக்க முடியும்.

— பி. ஆறுமுகம், திருச்சி—17.

நீதிபதிகளாகச் செயல்படட்டும்

திரைப் படத் தயாரிப்பாளர்களில் பெரும் பான்மையினர் மனித பலவீனங்களைத் தடவிக்கொடுத்துப் பணம்பண்ணுபவர்கள். ஆகவே ஸென்ஸார் என்ற கடிவாளம் இல்லாமல் அவர்களை நடமாட விடுவது சமுதாயத்துக்கு ஆபத்து. தணிக்கைக் குழு உறுப்பினர்கள், நீதிபதிகளைப் போல், வெட்டப்படும் காட்சிகளை அவ்வாறு வெட்டுதற்குக் காரணம் என்ன என்று விவரமாக விளக்க வேண்டும். இப்படிச் செய்தால் குழு உறுப்பினர்களுக்கும் பொறுப்பு அதிகரிக்கும்.

— ப. பாக்கியவதி, சென்னை—18.



ப்ளோப்ளாஸ்ட் வழங்கும் வி.ஐ.பி. ஸூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:
ஜி.என். மேரி மைக்கிள்,
C/o மைக்கிள் ரப்பர் ஸ்டாம்ப்ஸ்,
18/4, வடக்கு மாடவீதி சந்து,
காலாடிப்பேட்டை,
சென்னை—600 019.

வாசகர் விமர்சனம்



சித்தரஞ்சனி

* சரித்திரக் கதை எழுதுவதிலும் ... ர் தாமே என்று வரிக்கு வரி நிரூபித்திருந்தார். கௌதமி புத்ரன்—சித்தரஞ்சனி ஜோடியினைக் காலத்தாலும் அழிக்க முடியாத வகையில் உயிரோட்டமிக்க காதல் ஓவியங்களாகப் படைத்து கதைக்கு முற்றுப் புள்ளி வைத்திருந்தார் கதாசிரியர்.

— இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

* ஒவ்வொருவாரமும்சித்தரஞ்சனிதொடர்கதையைப் படிக்கும் அந்த ஐந்து நிமிட நேரத்திற்குச் சரித்திர கால நிகழ்ச்சிக்கே சென்று வருகிற ஒரு திருப்தியை யும், மகிழ்ச்சியையும் நாங்கள் பூரணமாக அனுபவித்தோம்.

— ஸ்ரீபஞேபாரதி, பாண்டிச்சேரி—13.

* சற்றுகூட வேகம் குறையாமல் விறுவிறுப்பாக இருந்தது சித்தரஞ்சனி. கதைக்கேற்பக் கனகச்சிதமாகக் காட்சிகளை வரைந்த லதாவின் தூரிகை வண்ணம் அருமையிலும் அருமையாக இருந்தது.

— எ.எஸ்.ஆர். சாதிக்பாஷா, அரகண்டநல்லூர்

A ஃபார் ஆப்பிள்: M ஃபார் மர்டர்

* ராஜேஷ் குமாரின் கதை இவ்வளவு சீக்கிரம் முடிவடையும் என நான் எண்ணவில்லை. எப்படியோ கன்னியப்பனைக் காப்பாற்றிய விவேக்கிற்கு வாழ்த்துக்கள்.

— பகவதி மூர்த்தி, தென்காசி.

* ராஜேஷ் குமார் கதையில் கோவை மாநகரத்தை வைத்து எழுதும்போதுதான் கோகுல்நாத்தும், நவநீதகிருஷ்ணனும் வருவார்கள். ஆனால் முதன் முதலாகச் சென்னைக்கு ட்ரான்ஸ்பர் செய்துவிட்டாரே?

— என். நவநீதகிருஷ்ணன், திருப்பூர்.

* ராஜேஷ்குமாரின் கதையைப் படித்து முடித்ததும் விறுவிறுப்பான ஆங்கில திரைப்படம் ஒன்றைப் பார்த்த நிறைவு ஏற்பட்டது. ஜெயராஜின் ஓவியங்களும் இதற்கு உதவின.


— பி. சந்தி... ராமம்.



“பனையேறும் எஞ்சினியர்”


வரத்துக்கரை.

பெரியார் மாவட்டத்தில் இருக்கும் அதிகாரிகள் பலருக்கும் இந்தப் பெயரில் ஒரு கிராமம் இருப்பதே தெரிய வாய்ப்பில்லை. அந்த அளவுக்கு பஸ் பாதையிலிருந்து விலகி உள்ளே தள்ளி இருக்கிறது. காங்கேயத்திலிருந்து பத்து கி.மீ. பயணித்து ஊதியூர் வந்தோமானால் இடது பக்கம் வெள்ளக்கோயில் போகும் சாலை வரும். அதில் இரண்டு கி.மீ. தூரம் சென்று பின்னால் வலது பக்கம் திரும்பி, 'இட்டேரி' என்று அழைக்கப்படும் இருபுறமும் இலுவை முட்கள் நிறைந்த மண் பாதையில் துலுக்கன் வலசு, பெருமாள் பாளையம் ஆகிய ஊர்களைத் தாண்டிச் சென்றோமானால்..... அட இனிமேல் ஒரு கிராமம் கூடவா இருக்கும்....? என்று நினைக்கும் அளவுக்குக் காடுமேடுகள், காய்ந்து போன கழனிகள் வரும். அவற்றையும் தாண்டி முயற்சியைக் கைவிடாத விக்ரமாதித்தன் போல மேலும், மேலும் முன்னேறினால், ஜீப்போ, காரோ போக முடியாத அளவுக்கு ஓர் இடம் வரும். அங்கே சென்ற போது...





• அய்யாவு



• பாலம்கட்டுவதற்காகப் போடப்பட்டகுழாய்கள்


'நம்மைத் தேடிக் கொண்டு வருபவர்கள் யார்?' என்ற பாவனையில் முகத்தைச் சுளித்துப் பின் அறிந்து கொண்டவராய், பல் தேய்த்துக் கொண்டிருந்த வேலங்குச்சியை விலக்கிவிட்டு, ''நீங்க.....?'' என்று நம்மை எதிர்நோக்கி வந்தார் நமக்குக் கடிதம் போட்டிருந்த அய்யாவு.

அறிமுகங்கள் முடிந்ததும், ''ஸார் முதலில் 'தெளிவு' சாப்பிடுங்கள்! வெறும் வயிற்றில் சாப்பிடுவது உடம்புக்கு மிகவும் குளிர்ச்சி...'' என்று அன்புடன் பதனீர் கொடுத்தார்.

இருபது வீடுகளை மட்டுமே கொண்ட கிராமம் அது. அனைவருமே பனையேறும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். அய்யாவு மட்டும்தான் எப்படியோ தப்பித் தவறிப் படித்து முடித்து (இப்போது Ph.D. பண்ணிக் கொண்டிருக்கிறார்) அந்தக் குடும்பங்களின் கலங்கரை விளக்கமாக இருந்து வருகிறார். ஊருக்கு நல்லது ஏதாவது செய்ய வேண்டுமென்றால் அய்யாவுதான் முயற்சி எடுக்க வேண்டும். ஏனென்றால் மற்றவர்களுக்கு அதற்கான படிப்பறிவும், போதாது; நேரமும் கிடையாது!


பரம்பிக்குளம், ஆளியார் ப்ராஜெக்ட் என்று கேள்விப்பட்டிருப்பீர்களே! அங்கேயிருந்து பிரிந்து வரும் ஓர் ஓடையின் ஓரத்தில்தான் வரத்துக்கரை கிராமம் இருக்கிறது. அந்த ஓடையின் பெயர் வரத்துக்கரை என்பதால் அதன் ஓரத்தில் அமைந்துள்ள இக்கிராமத்திற்கும் வரத்துக்கரை என்று பெயர் வந்துவிட்டது. கணக்குப் பார்த்தால் ஆயிரத்துக்கு மேற்பட்ட பனை மரங்கள் அந்தக் கிராமத்தில் இருக்கும்.

இடைக் கயிறு, பெட்டி (கத்திகளை வைக்க), கால் கயிறு, இடுப்பு வார், ஒரு சிலுவையைச் சுமந்து செல்வதுபோல் ஏணி, மரத்திலிருந்து பதனீரைச் சேகரிக்கக் குடுவை.... சகிதமாக அதோ தெரிகிறாரே அவர்தான் ரங்கநாதன். மரம் ஏற எல்லாப் பொருட்களும் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்கிறார். ஒவ்வொரு நாளும் அதிகாலை இரண்டு மணிக்கே கிளம்பும் இவர், வேலையை முடித்துக் கொண்டு திரும்ப காலை பத்து மணி ஆகும். பிறகு மாலையில் மறுபடியும் அந்த மரங்களில் ஏறி, பதனீர் சொட்டும் பனம்பாளைகளை லேசாகச் சீவிவிட்டு வருவார். அப்போதுதான் பதனீர் தொடர்ந்து, பானையில் கட்டப்பட்டிருக்கும் மண் சட்டியில் வடிந்து கொண்டே இருக்கும். அதற்கு மாலை இரண்டரை






* சிலுவையைச் சுமப்பது போல்.....





* அரசு தோண்டி உபயோகமில்லாத கிணறு



* பாலம் இல்லாததால் படும் அவதி....

பஸ் ஏற

வழியில்லீங்க!

கவர் ஸ்டோரி

மணிக்குக் கிளம்பினால் இரவு ஏழு மணிக்கு மேலாகும் வீடு திரும்ப....

ஒவ்வொரு நாள் அதி காலையும் அவர் மட்டும் சென்றால் போதாது. ஒவ்வொரு மரத்திலிருந்தும் அவர் சேகரிக்கும் பதனீரை அவ்வப்போது வீடு கொண்டு வந்து சேர்த்துக் கொப்பரையில் ஊற்றிக் காய்ச்சிப் பதத்தோடு பாகாக்கி இட்லிகளைப் போல கருப்பட்டிகளை வார்த்தெடுக்க அவர் மனைவியும் கூடவே சென்றாக வேண்டும்!

"வருடத்தில் ஆறு மாதம் தானுங்க வேலே. சீசன் நல்லா இருந்தா நான் ஏறிக் கொண்டிருக்கும் நாற்பத்தைந்து மரங்களிலிருந்தும் மாசம் 1000 ரூபாய் வருமானம் வருங்க. அதை வெச்சிகிட்டுத் தானுங்க பதனீர் சீசனில்லாத மீதி நாட்களைக் கடத்த வேண்டும்" என்றார் பதிமூன்று வயசிலிருந்தே இப்படிப் பனையேறும் தொழிலுக்கு வந்துவிட்ட ரங்கனுதன்.

சாதாரணமாகப் பனையேறும் ஒரு நபர் 10 கிலோ கருப்பட்டி செய்யும் அளவுக்குத் தினந்தோறும் பதனீர் எடுப்பார்களாம். இந்தக் கருப்பட்டிகளையெல்லாம் காங்கேயத்துக்குக் கொண்டு போய்த்தான் விற்பனை செய்ய வேண்டும். அங்கு போகப் பாதை வேண்டாமா?

வரத்துக் கரையிலிருந்து குறைந்த பட்சம் மூன்று கி.மீ. சென்றால்தான் பஸ் ஓடும் சத்தத்தையே கேட்க முடியும். அந்த மூன்று கி.மீ.க்கும் சரியான சாலை வசதி கிடையாது. இதைவிட ஒரு அநியாயம் என்னவென்றால், ஊருக்குள் நுழையும் முன்னர் ஊர் ஓரத்தில் ஓடும் வரத்துக் கரை ஓடையைக் கடந்துதான் வரவேண்டும். பெரும்பாலும் அந்த ஓடையில் எப்போதும் தண்ணீர் சென்று கொண்டேயிருக்கும். மழைக் காலத்தில் கேட்கவே வேண்டாம்! இந்நிலையில் அதை எப்படிக் கடந்து வருவது? ரொம்ப நாட்கள் போராடிய பிறகு, அந்த ஓடையின் மீது பாலம் ஒன்று கட்டுவதற்காக மூன்று பெரிய பிரும்மாண்டமான சிமெண்ட் குழாய்களைக் கொண்டு வந்து போட்டார்கள். குழாய்களைக் கொண்டு வந்து போட்டார்களே தவிர, பாலம் கட்டும் வேலையை அரசு ஆரம்பிக்கவில்லை. திடீரென்று ஒரு நாள் அரசு அதிகாரிகள் வந்து அந்த சிமெண்ட் குழாய்களை வேறு ஊருக்குப் பயன்படுத்த எடுத்துச் செல்ல முயற்சி செய்திருக்கிறார்கள். விடுவார்களா வரத்துக் கரை மக்கள்? மறியல் நடத்தி, சிமெண்ட் குழாய்களைப் பிடுங்கித் தங்கள் கிராமத்திலேயே வைத்துக் கொண்டார்கள்! ஆனாலும் இன்னும் அந்தக் குழாய்கள் அப்படியேதான் கிடக்கின்றன! அவர்கள் நடத்திய மறியலாலும்கூட பாலம் கட்டும்பணியைத் தொடர வைக்க முடியவில்லை!

"எங்கள் கிராமம் இத்தனை தூரம் உள்ளே தள்ளி இருப்பதைக்கூட அரசு மனம் வைத்தால் சாலை வசதி செய்து மாற்ற முடியும்!" என்கிறார் அய்யாவு.

அப்படியொரு சாலை போடும் திட்டத்தை அரசு அமல்படுத்தி நிறைவேற்றினால் வரத்துக்கரை கிராமம் மட்டுமல்ல, துலுக்கன் வலசு, போன்று மேலும் ஐந்து கிராமங்களுக்கு பஸ் வசதி கிடைக்கும். பிறகு, வரத்துக் கரை மக்கள் காட்டிலும் மேட்டிலும் ஐந்து கி.மீ. சென்று—காங்கேயம்—தாராபுரம் சாலையைச் சென்றடைந்து பஸ் ஏறவேண்டியதில்லை!

"சாதாரணமாக வெறுங் கையுடன் நடந்து சென்றாலும் போய்விடலாம். காங்கேயத்திற்குக் கருப்பட்டியைத் தலையில் தூக்கிக் கொண்டு வாராவாரம் நடந்து செல்வதென்பது ஒரு தண்டனை போல!" என்கிறார் அய்யாவு.

பல கிராமங்களிலும் தலை

விரித்தாடும் குடி தண்ணீர்ப் பிரச்னை இந்தக் கிராமத்தில் இல்லை. பரவாயில்லையே நமது அரசு! என்று அரசைப் பாராட்ட நினைக்கிறீர்கள் என்றால் ஸாரி..... குடி தண்ணீரைப் பொறுத்தமட்டில் இந்தக் கிராமத்தில் அடி பம்பு ஏதும் கிடையாது. இரண்டு கிணறுகள் இருக்கின்றன. இரண்டிலும் கிராம மக்கள் தண்ணீர் எடுப்பது கிடையாது. காரணம் அந்த அளவுக்கு அந்தத் தண்ணீர் துவர்ப்பு! ஓடையில் ஊற்றுத் தோண்டித்தான் இந்தக் கிராம மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். மற்றபடி அரசுதான் குடிநீர் வசதி செய்தாக வேண்டும் என்ற நிலையில் இக்கிராமம் இருந்திருந்தால் அம்போதான்!

இவர்கள் அரிசிச் சோறு சாப்பிடுவது என்பது அபூர்வம்தான். காரணம் ஏழ்மை என்பது மட்டுமல்ல; தாங்கள் செய்யும் கடுமையான தொழிலுக்குத் தகுந்த சக்தியைக் கேழ்வரகுதான் கொடுக்கும் என்பதால், கேழ்வரகுச் சோறுதான் அதிகம் சாப்பிடுகிறார்கள்.

இப்போது அய்யாவுவின் தூண்டுதலால் தான் அந்தக் கிராமத்திலிருக்கும் சிறுவர், சிறுமியர் பலர் பக்கத்து ஊரிலுள்ள பள்ளிக்குச் செல்கிறார்கள். அதுவும் மூன்று கி.மீ. போக வேண்டும். தளர்ந்து போகும் சிறுவர்களுக்கு அய்யாவுதான் டானிக். கிராமத்தில் ஒரு சின்ன பெட்டிக் கடை கூடக் கிடையாது. இந்நிலையில் சாலை வசதியும் இல்லை என்பது தான் கொடுமை!

தங்கள் குறைகளையெல்லாம் பட்டியலிட்டுச் சொல்லி முடித்த அய்யாவுவிடம், "இந்தப் பனையேறும் தொழிலில் ஏதாவது ஆபத்து இருக்கிறதா, என்ன?'' என்று கேட்ட போது, 'எல்லாம் 'தண்ணி' சாப்பிடறது தான் ஸார். தாராளமாகக் கள் கிடைப்பதால், எங்களில் சிலர் 'போட்டு' விட்டு மரம் ஏறுகிறார்கள். அப்போது இடுப்புக் கயிற்றைச் சரியாகப் போட்டிருக்கிறோமா என்று கவனிக்காமல் போனால்...... விளைவு? மரத்தின் மேலேயிருந்து 'தொபேல்' என்று கீழே விழுவதுதான்! இதனால் பலருக்குப் பலத்த அடிபட்டிருக்கிறது. இன்னொன்று, பனைமரத்தில் இருக்கும் வண்டுகள், பாம்புகள் போன்ற விஷ ஜந்துக்கள் கடிப்பது...'' என்றார்.


"பனையேறும் தொழிலாளர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டுவரப்போவதாக அரசு சொன்னதே; அது எந்த நிலையில் இருக்கிறது?'' என்றோம்.

"நாங்கள் போடும் மாநாடுகளில் வந்து கலந்து கொண்டு அந்த நேரத்தில் கைதட்டல் பெறுவதற்காகப் பேசப்படும் பேச்சுத்தான் ஸார் அது. மற்றபடி நடைமுறையில் ஒன்றும் இல்லை!'' என்றார் எட்டாவது வரை படித்த ரங்கனுதன்.

பனை மரத்தை நமது தமிழக அரசு 'அரசாங்க மரமாகச்' சில நாட்கள் விளம்பரப்படுத்திக் கொண்டிருந்த நிலையிலும் அந்தத் தொழிலாளர்களுக்கு ஏதும் செய்யாததால் அவரைப் போல் கிராம மக்கள் பலரிடமும் அரசாங்கத்தின் மேல் ஏற்பட்டிருக்கும் அதிருப்தியின் மௌனம் எதிர்காலத்தில் எங்கு போய் முடியுமோ? என்று சிந்தித்துக் கொண்டே திரும்பினோம் நாங்கள்.

— தில்லப்பா

திரைவிலகாத சன்னதி



சாமி சன்னதியில் ஒரு திரையைத் தொங்கவிட்டுவிட்டுத் திரைக்குப் பின்னால் சாமி இருக்கிறார்; ஆனால் யாரும் திரையை விலக்கிப் பார்க்கக் கூடாது; கும்பிடுவதானாலும் சரி, கற்பூரம் காட்டுவதானாலும் சரி, திரைக்கு முன்னாலிருந்துதான் செய்ய வேண்டும் என்று பரம்பரை பரம்பரையாகச் சொல்லப்பட்டுவரும் ஒரு கோயிலைப் பார்த்திருக்கிறீர்களா?

அதுதான் 'அப்பச்சிமார் மடம்.' பெருந்துறையிலிருந்து திங்களூர் வழியாகச் சுமார் எட்டு கி.மீ. தூரத்திலுள்ளது. திங்கள், வெள்ளி மற்றும் அமாவாசை தினங்களில் ஸ்பெஷல் பஸ்கள் விடுகிற அளவுக்கு வருமாம் பக்தர் கூட்டம்.

மொத்தம் மூன்று சன்னதிகள்: மசிரியாத்தா, மாரசூர ஐயன், ராக்கியப்பன். மூன்று சன்னதிகளும் (படத்தில் உள்ளது போல்) பூட்டியே கிடக்கின்றன. மூன்றிலும் வெளிக் கதவின் ஓட்டைக்குள் பார்த்தால் திரை தொங்குவது தெரிகிறது. அந்தத் திரைக்குப் பின்னால் என்ன இருக்கிறது? சிலையா? அல்லது வேறு ஏதாவதா? சிறு குழந்தையிலிருந்து எண்பது வயதுப் பெரியவர்வரை பலரையும் கேட்டுப் பார்த்தோம். அனைவரும் தங்களுக்கு எதுவுமே தெரியாது; அந்தத் திரை விலக்கப்பட்டுப் பார்த்ததேயில்லை என்று சொல்லிவிட்டார்கள்.

— நமது நிருபர்.

N. S. K.

மோட்டார் & ஜெனரல் பைனான்ஸ்

கவர்ச்சிகரமான வட்டி விகிதம்

27%

1 வருடம்	2 வருடம்	3 வருடம்	5 வருடம்
20%	21%	22%	24%

(குறைந்தபட்சம் ரூ. 3000/- மும் அதற்கு மேலும் ஏற்றுக் கொள்ளப்படும்).

3 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற கூடுதல் போனஸ் 24% + 1% = 25%
6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற கூடுதல் போனஸ் 24% + 2% = 26%
12 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற கூடுதல் போனஸ் 24% + 3% = 27%

கங்கா கேஷ் சர்ட்டிபிகேட் உங்களுடைய முதலீடு 42 மாதங்களில் இருமடங்காகிறது. உதாரணம் ரூ. 10,000/- ரூ. 20,000/- (இச்சலுகை 30.4.86 வரை மட்டுமே)

அன்பளிப்பு

அன்பளிப்பு					
முதலீடு	வருடம்	சிறப்புப் பரிசு	முதலீடு	வருடம்	சிறப்புப் பரிசு
ரூ. 25,000	5	1 சவரன் தங்க நாணயம்	ரூ. 5,000	3	1 HMT வாட்ச்
ரூ. 15,000	5	½ சவரன் தங்க நாணயம்	ரூ. 5,000	2	1 அழகிய வெள்ளி குத்துவிளக்கு
ரூ. 10,000	5	¼ சவரன் தங்க நாணயம்			

பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க சிறப்புப்பரிசுகள் (பிக்சட் டெபாசிட்டுகளுக்கும் கங்காகேஷ் சர்ட்டிபிகேட்டு களுக்கு மட்டுமே) 30.4.86 தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பொன்னான வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்

பேங்க் கேஷ் சர்டிபிகேட்டுகள்

5 வருடம்	6 வருடம்	7 வருடம்	10 வருடம்
18%	19%	20%	24%

N. S. K. மோட்டார் & ஜெனரல் பைனான்ஸ்
எண். 38-B, பர்கிட் ரோடு, (முதல் மாடியில்) (தி.நகர்-பேருந்து நிலையம் எதிர் புறம்) தி.நகர், சென்னை—600 017.
போன்: 447135

HIRE PURCHASE FINANCIERS

மரம் நடுவதன் பலன்

பலவிதமான மரங்களை நிழல் இல்லாத இடங்களில் உண்டாக்கி வளர்த்து, வழிப்போக்கர்களுக்கு நிழலுண்டாக்கியவன் தன் வம்சத்தில் இறந்தவர்களையும், இனி பிறப்பவர்களையும் பாவிகளாக இருந்தாலும் தூய்மைப்படுத்தப் பிதுரர்களுக்குப் ப்ரீதி உண்டாக்குபவனுவான். ஒருவன் இறந்த பிறகு அவனது புத்திரர் அவனைச் சாந்தியடையும்படி பலவித கிரியைகளைச் செய்வதுபோல் ஒருவன் வளர்த்த மரங்களும் அவனை சாந்தியடையச் செய்விக்கும். மரங்கள் மலர்களினுல் தேவகணங்களையும் பழங்களினுல் பிதுர்த் தேவர்களையும் நிழலினுல் அதிதிகளையும் பூஜிக்கின்றன. மலர், பழம் முதலியவற்றுடன் கூடி நின்று பூவுலகத்தில் இருப்பவர்களையும் திருப்தி செய்விக்கின்றன. கின்னரர், உரகர், இராக்ஷஸர், தேவர், கந்தருவர், ரிஷிகணங்கள் முதலிய யாவரும் விருக்ஷங்களை விரும்புகிறுர்கள். இகத்திலும் பரத்திலும் இம்மரங்கள் தம்மை வளர்த்தவனுக்குப் புத்திரர்கள் என்று சொல்லப்படுகின்றன. நீர்த்துறைகளை உண்டாக்குபவர்களும், மரங்களை நட்டு வளர்ப்பவர்களும் யாகங்களைச் செய்த வேதியர்களும் சத்தியவான்களும் ஒரு காலத்திலும் ஸ்வர்க்க லோகத்தை விட்டு நீங்க மாட்டார்கள்.

(சிவ மஹா புராணம்)

மனங்களின் மயக்கம்

இராஜாபாலச்சந்தர்

கடலூர் பெருநகரம் ஆடம்பரமான அலங்காரங்களால் ஆணவப்பட்டுக் கிடந்தது.

'இன்னும் எத்தனை பேர் வேண்டுமானாலும் ஏறிக் கொள்ளலாம்' எனச் சவால் விட்டுக் கொண்டு இருந்தது பிதுங்கி வழிந்த ஸ்டேடியம்.

அந்த ஆயிரமாயிரம் மக்களுக்கு மத்தியில், அங்கமெல்லாம் ஆதங்கத்துடன் ரவி.

18 வது மாநில பொங்கல் விளையாட்டு விழாவின் கோலாகலமான ஆரம்பம்.....

எதிரே கோட்டை போன்ற செட்டப்பின் பூவாயில் திறக்க, அதிகாரத்தனமான சீருடைகளுடன் முதலில் வெளிப்பட்டனர் பாண்டு வாத்தியக்காரர்கள்.

அவர்களின் வாயிலிருந்து முளைத்திருந்த விநோத வடிவுடைய வாத்திய வகைகள் பிரும்மாண்டமாகப் 'பீ......'ரிட்டன.

அவர்களைத் தொடர்ந்து அணி வகுத்து வந்தனர் விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும். அவர்களின் பூரித்த முகங்களும், புஷ்டித்த தோள்களும் காணவே களிப்பைத் தந்தன.

இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற வேண்டியவன் ரவி. கடைசி சில மாதங்களில் ஏற்பட்ட உடல் நலமின்மையால் பயிற்சியைப் பாதியில் நிறுத்த வேண்டியதாயிற்று. இல்லாவிட்டால், இந்தக் கம்பீர அணி வகுப்பின் ஓர் அங்கமாக இருக்க வேண்டியவன் அவன்.

வேதனையும், ஆதங்கமும் அவனை சுற்றுப்புறத்தின் மகிழ்ச்சி வெள்ளத்தில் கலக்க விடாமல் அணை போட்டன.

"மேலே வெளிர் நீல நிற உடையும், கீழே மஞ்சள் நிற உடையும் அணிந்து, நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையுமாக இப்போது உங்களைக் கடந்து கொண்டு இருக்கும் வீர, வீராங்கனைகள் கன்னியாகுமரி மாவட்டத்தின் சொத்துக்கள்."

அறிவிப்பாளர் பெருமிதத்தோடு அறிமுகப்படுத்துவதில் தனது திறமைகளைச் செலவழித்தார்.

அடுத்த நொடி, அவ்வணியின் முன் பகுதியில் அணி வகுத்த மங்கையரை ஆவலோடு நோக்கினான் ரவி.

அவன் விழிகள் பசியுடன் தேடின.

ஏழாவது வரிசையின் நடுவில்..... அவளே தான்!

ரஞ்சனி.

சிவப்பான மேனி, சீரான அங்கலட்சணங்களுடன் அவளை மீண்டும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றான் ரவி.

இது கடலூர். எனவே, அவளும் நிச்சயமாக என்னை எதிர்பார்த்து வந்திருக்க வேண்டும்.

அடுத்த கணம்,

ஸ்டேடியத்தில் அமர்ந்திருந்த அத்தனை முகங்களையும் சல்லடை போட்டுச் சலித்தவளின் விழிகளில் நிலை பெற்றான் ரவி.

ஒரு கணம் இருவரும் மின்னல் பாதித்த உணர்வு கொள்ள.....

ஓ.....! மீண்டும் அவனுக்குள் அதே இன்ப உணர்வுகள்.

அதன் பிறகு அவன் அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை. அணி வகுப்பில் இருந்தபடி அப்படிச் செய்வது அநாகரீகம் என அவன் கருதியிருக்கலாம்.

இருவரும் முதன் முதலாகச் சந்தித்ததும் இது போன்ற ஒரு ஸ்போர்ட்ஸ் மீட்டில்தான்.

சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியத்தில்.

அவள் பங்கு பெற வேண்டிய விளையாட்டு, (ஸ்பிரிண்ட்) மறுநாள்தான் இருந்தது. எனவே, தோழிகளுடன் ஸ்டேடிய கும்பலுக்குள் அலைந்து திரிந்தாள் ரஞ்சனி.

அவளுக்குச் சென்னை புதிது. எனவே, தூரத்தில் வானுயர்ந்த எல்.ஐ.சி.யை வெறித்தபடி நின்றாள்.

அதன் விளைவாக, தோழிகளை விட்டுப் பிரிந்தாள். கூட்டம் நிறைய. எனவே, கண்டு பிடிப்பது கொஞ்சம் கடினம். முடியாவிட்டாலும் பாதகமில்லை. பக்கத்தில்தான் கன்னிமாரா. அவர்கள் தங்கியிருந்த நட்சத்திர ஹோட்டல்.

இருந்தாலும், அவளுக்குள் சின்னத் தவிப்பு.

தவிப்பை ரசித்தான் நெருங்கி நின்ற ரவி.

கவனித்து விட்டாள் ரஞ்சனி.

அவன்தான் ஆரம்பித்தான். "என்ன தனியா நிக்கறீங்க?"

"ம்..... ப்ரண்ட்ஸ் மிஸ்ஸாயிட்டாங்க..."

வெட்கினாள்.

"இப்பத்தானா மிஸ்ஸானாங்க?"

"ஆமா....." என்றவள், அவனின் விஷமத்தனத்தைப் புரிந்துக் கொண்டு உதட்டைக் கடித்தாள். "பெரிய்ய ஆள்தான் நீங்க."

அதன்பின், தோழிகளைத் தேடுவதில் அவளுக்கு உதவுவதாகப் பாசாங்கு காட்டி, ரஞ்சனியுடன் நெருக்கமாக அலைந்தான் ரவி. அவள் மறுக்கவில்லை. மனத்துக்குள் சிரித்தாள். கிளர்ந்தாள்.

இடையே நிறைய பேசினார்கள். விரைவில் சகஜமானார்கள். அந்த ஒரே நாளில் மிகவும் ஒருமித்தார்கள். மனத்தைப் பரிமாறிக் கொள்ளும் அளவுக்கு.

போட்டிகளை வெற்றியுடன் முடித்தனர்.

வேதனையுடன் பிரிந்தபோது திருமணம் புரிந்து கொள்வது என்ற உறுதியுடன் விடை கொடுத்தனர்.

அடுத்த நாளே கடிதம் எழுதினான் ரவி. பதில் இல்லை. அதன் பிறகு பல முறை அவன் முயன்றும், அவளிடமிருந்து எந்தவொரு பதிலும் கிடையாது — இன்றுவரை.

கடினமான பயிற்சிகளும்கூட அவளை மறக்க வைக்க அவனுக்கு உதவவில்லை.

அதனால் அவன் உள்ளம் பாதிக்க, உடல் கெட்டு...... பயிற்சியைப் பாதியில் நிறுத்தும் படியாகிவிட்டது.

இல்லாவிட்டால், அவனும் இந்த அணி வகுப்பின் ஓர் அங்கமாகி ஆனந்தப்பட்டிருப்பான்.

விழா துவக்க நிகழ்ச்சி முடிவடைந்தது.

உடனே, குழுப் போட்டிகள் ஆரம்பிக்கும் என அறிவித்தார்கள்.

எனவே, பந்தய மைதானங்களை நாடிப்



AMERICAN FRIENDSHIP RESIDENTIAL SCHOOL
(For Boys only)

Renumakalahalli, Post Gudibanda 561 209
Chickaballapur Taluk, Kolar District, Karnataka, INDIA.

Opens the doors to a unique educational experience.

Active involvement of eminent educationists gives you an ideal English medium Residential School meeting international standards.

- A project sponsored by Non-Resident Indians.
- Campus situated in a serene rural background about 2 hours drive from Bangalore, the Garden City of India.
- Dedicated Teachers with many years of experience in reputed residential schools.
- Individual attention with freedom and flexibility enabling students to learn at their own pace.
- Training in Computers and Electronics.
- Karate, yoga, sports, educational excursions, gardening and horticultural activities for allround development of the student.
- Wholesome vegetarian food.
- Health and Medical care.
- Counselling, career planning, and coaching for Competitive Examinations.

Through a comprehensive program of educational experiences, allround development of the child will be ensured.

Admissions open to Standards V through IX for the academic year 1986-87. For brochure, application form and fees details please send Rs. 25/- (US $5/- for outside India) by Bank Draft/Money Order/Postal Order to:

G. P. Ravikumar, M.Sc., M.S. (USA)
Secretary.



சம்பள தினத்தன்று...

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

போட்டி: 52

சிலர் சம்பள தினத்தன்று சினிமா பார்த்தே ஆக வேண்டும் என்ற தீர்மானத்துடன் இருப்பார்கள்; வேறு சிலர் பெற்றோரிடம் கொடுத்து வணங்குவார்கள்; இன்னும் சிலர் மனைவியிடம் சம்பளக் கவரைக் கொடுத்துவிட்டு செலவுக்குக் கையேந்தி நிற்பார்கள்; எந்தக் கடனை எப்படிச் சமாளிப்பது என்று குழம்புவோரும் உண்டு! நீங்கள் எப்படி? சம்பள தினத்தன்று என்ன செய்வீர்கள்? கீழே வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப் பக்கத்தை முழுவதுமாகக் கத்தரித்து அனுப்பும்போது உறையின் மீது "சம்பள தினத்தன்று....." என்று மறக்காமல் குறிப்பிடவும். ரசமானவை பிரசுரமாகிப் பரிசு பெறும். தவிர ஒருவருக்குக் குலுக்கலில் வி.ஐ.பி. ஸூட்கேஸ்!

முடிவு தேதி: 12.5.86

வி. ஐ. பி. ஸூட்கேஸ் பரிசு பெற இதுவே கடைசி வாய்ப்பு. நழுவ விடாதீர்கள். அவசியம் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

என் பெயர்: ....

விலாசம்: ....

....

பிரிந்து ஓடினார்கள் பார்வையாளர்கள்.

ரஞ்சனியைத் தேடினான் ரவி.

அவனுக்குள் ஓர் அவசரம், ஆர்வம், ஆத்திரம். ஏன் இப்படி மாறினாய்? எதற்காக? என்று கேட்டுவிட வேண்டும்.

தேடினான் ரவி. நெடு நேரமாகியும் அவளைக் கண்டு பிடிக்க முடியவில்லை. முடியவும் முடியாது.

வேதனைத் தீயில் வதங்கிக் கொண்டு இருந்தாள் ரஞ்சனி.

தன் அன்பிற்குரியவனைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்ததும் இப்படி விலகியோடும் துன்ப நிலைக்காக மனத்துக்குள் துவண்டாள்.

ரவி அவளைக் காணாமல் தவிப்பதையும், மௌனமாகப் புலம்புவதையும் அவளால் உணர முடிந்தது.

அவன் மிகவும் இளைத்துப் போய் இருந்தான். அதன் காரணமும் அவளுக்குத் தெரியும்.

என்றாலும் அவள் மனம் துடியாகத் துடித்தது. அவனை நெருங்கி, அன்பால் நெருக்கி...

ஆசைக்கு அணை போட்டாள். அதுதான் சரியென்று அவள் மனசாட்சி வலியுறுத்தியது.

வேதனையோடு விலகினாள்.

அன்றுமட்டும் அவன் அப்படிக் கூறாமல் இருந்திருந்தால்.....

ரயில் விழுப்புரத்தை நெருங்கிக் கொண்டு இருந்தது.

இன்னும் சில மணி நேரங்களில் பிரியப் போகின்றோம் என்ற உணர்வே இருவரையும் வாட்டியது.

விரைவில் திருமணம் புரிந்து கொள்வது என ஏற்கெனவே முடிவு செய்திருந்தனர். எனவே, இந்தப் பிரிவு நிலையற்றதே. ஆனாலும், பிரிவு பிரிவுதானே.

இருவரின் மன நிலைமைகளை உணர்ந்த நண்பர்கள் அவர்களைத் தனிக்கை இல்லையெனக் கேலி செய்து தனித்துவிட்டனர்.

ரவியை — தன் வருங்காலக் கணவனை — எண்ணி, அவனுடைய பெருமை மிக்க லட்சியத்தைஎண்ணி இன்புற்றிருந்தாள் ரஞ்சனி.

மௌனம் கலைய கிசுகிசுத்தனர்.

"ரவி எப்போ மறுபடியும் சந்திக்கலாம்?" என ஏக்கமாகக் கேட்டாள் ரஞ்சனி.

"முறைப்படி பெண் பார்க்க வர்றப்போ டியர். வர்ற மாசம் கோவையில ஓபன் மீட் இருக்கில்ல, அப்ப சந்திக்கலாமா?"

அவள் சிணுங்கினாள். "அதுக்கு முன்னே...."

"ஓ, உன்னைப் பார்க்க நிச்சயம் வருவேன்."

"அது என்ன 'உன்னைப் பார்க்க?' ஸ்போர்ட்ஸ்ல கலந்துக்க வரமாட்டீங்களா?"

அவன் கனிவாகச் சிரித்தான். "நோ டார்லிங்."

"ஏன்?"

"எனக்கு ஸ்போர்ட்ஸ்ல இன்டரஸ்ட் போயிடுச்சி."

ரஞ்சனி அதிர்ச்சி அடைந்தாள். "வாட்! நேற்றுத்தானே சொன்னீங்க. ஒரு தடவை யாவது இந்தியாவுக்காக ஒலிம்பிக்கில ஓடணும். அதுதான் என் லட்சியம்னு? அதைக் கேட்டு நான் எவ்ளோ சந்தோஷப்பட்டேன் தெரியுமா? நீங்க உங்களோட உயர்ந்த லட்சியத்த அடையறதுல உதவி செய்யப் போகற லட்சிய மனைவியா என்னைக் கற்பனை செய்து இவ்வளவு நேரமா பூரிச்சுப் போய் இருக்கேன் தெரியுமா? அப்படி இருக்கறப்போ, ஏன் இந்தத் திடீர் மாற்றம் ரவி?"

அவளின் வேதனையை அறிந்து கொள்ளும் நிலையில் இல்லை ரவி. கனவுகளில் மிதந்து கொண்டிருந்தவன் காதல் போதையில் பேசினான்:

"எஸ் டியர். நீ சொல்றதும் சரிதான். எனக்குள்ள பெரிய இலட்சியம் இருந்தது வாஸ்தவம். ஆனால் இப்பொழுது இல்லை!"

"அதான் ஏன்னு கேட்கறேன்?"

"ஏனு? நீதான் டியர்" கசிந்துருகினான் ரவி.

"வாட்?"

"ம். உன்னை மேரேஜ் செய்துக்கிட்டு, வாழ்க்கை முழுசும் இன்பத்தை அனுபவிக்கணும், நாம ரெண்டு பேரும். அது மட்டும் தான் இப்போ என்னோட லட்சியம். சீக்கிரமா உன்ன பெண் பார்க்க வருவேன். என்ன சந்தோஷம்தானே?"

சந்தோஷமா?

அப்போதே முடிவு செய்துவிட்டாள் ரஞ்சனி. தனது இன்பத்திற்காக இந்தியா ஒரு சிறந்த விளையாட்டு வீரனை இழப்பதில் சிறிதும் சம்மதமில்லை அவளுக்கு.

பிறகும்கூட தீவிரமாக யோசித்தாள். முடிவில் மாற்றம் இல்லை. காரணம், அதுவே அவளது லட்சியம்.

தூரத்தில் ரவி அவளைக் கவனித்துவிட, பதுங்கி மறைந்தவளின் விழிகளில் நீர்த் தாரைகள் நிரந்தரமாயின.

கவிகளை ரொம்பவும் ஆதரித்த பாரி வள்ளல் காலமாகி, அவனுடைய இரண்டு பெண்கள் அநாதையாக நின்றபோது அவ்வைதான் மிகவும் நன்றியறிதலோடு அவர்களுக்கு வரன் தேடிக் கல்யாணம் பண்ணி வைத்தார். அந்தக் கல்யாணத்துக்கு அவள் அழைப்போலை (இன்விடேஷன்) அனுப்பினாள் என்பதற்காக மூவேந்தர்களுமே வந்துவிட்டார்கள். பரஸ்பரம் குஸ்தி போட்டுக் கொள்பவர்களானாலும் அவ்வையின் அழைப்பைத் தட்டப்படாது என்றே வந்து அப்படி மூன்று பேரும் ஒன்று சேர்ந்ததைப் பார்த்தவுடன் அவள் ரொம்பவும் ஸந்தோஷமடைந்தாள். இருபிறப்பாளர்களான பிராம்மணர்கள் வளர்க்கிற முத்தீ (கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்னி) மாதிரியல்லவா நீங்கள் மூவரும் ஓரிடத்தில் சேர்ந்து ஜ்வலிக்கிறீர்கள்!" என்று பாடினாளாம். புறநானூற்றிலே அந்தப் பாட்டு இருக்கிறது.



ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப்பாளர்
முத்தீ புரையக் காண்தக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர்
வேந்திர்
(புறம் — 367)

பொம்மனாட்டி; அதிலும் கிழவி; கூழுக்குப் பாடுவது என்று அத்தனை எளிமையாக இருந்தவள் அவ்வை. ஆனாலும் ராஜாக்களும் அவள் சொல்வதைப் பயபக்தியோடு கேட்டுக் கொண்டார்களென்றால் அதற்குக் காரணம் அவள் கற்றவளாயிருந்ததுதான்.


கவிகள், பாவாணர்கள் என்பவர்கள் ரொம்பவும் கற்றறிந்தவர்களாக இருப்பார்கள். அதனால் அவர்கள் ராஜாவுக்கு மேலே சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெற்றிருந்தார்கள்.

இப்படித் தங்களுக்கு இருக்கிற சிறப்பை அவர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தார்கள். அதனாலேயே ஒரு ராஜாவுக்குக் கூடத் தாங்கள் ஸலாம் போட வேண்டியதில்லை என்பதாக ரொம்பவும் மானம், ரோஷம், தைர்யம் உள்ளவர்களாக இருந்தார்கள். இப்படி அவர்கள் இருந்ததற்கு அந்தக் கிழப்பாட்டி,

"மன்னர்க்குத்
தன் தேசம் அல்லால் சிறப்பில்லை;
கற்றோர்க்குச்
சென்றவிடமெல்லாம் சிறப்பு" என்று தைர்யமாகப் பாடிப் பிரசாரம் பண்ணியதே பெரிய சான்று.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

அருள்வாக்கு



உங்கள் அபிமான நிறுவனமான "திருப்பதி எஸ்டேட்ஸ்"
பெருமையுடன் அறிமுகப்படுத்தும் புதுமனைப் பிரிவு

ஸ்ரீ புவனேஸ்வரி நகர்

எங்களது இந்த புதிய குடியிருப்புப் பகுதி
செங்கல்பட்டு—காஞ்சிபுரம் பேருந்து மார்க்கத்தில்
மாநில நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ளது.

வரலாறு காணாத புரட்சி! சரித்திரம் கண்டிராத சாதனை!!

கான்கிரீட் காணிக்கற்கள்; கான்கிரீட் மனை இலக்கக் கற்கள்
உபயோகப்படுத்தி மனைகளை என்றும் தேட அவசியம் இல்லாத வகையில்
அமைக்கப்பட்ட மனைப்பிரிவு.

ஐந்து ஆண்டுகளுக்கு மனைகளை காத்திட உத்திரவாதம்!

எந்த அதிகப்படி செலவும் கிடையாது!

மனைப்பிரிவிற்கு ஒரு பொதுக் கிணறு!

இப்படி அனைத்து சிறப்பு அம்சங்களும் ஒருங்கே அமையப்பெற்ற
இந்த லே-அவுட் அரசாங்க அங்கீகாரம் பெற்றது.

DTP. APPROVAL NO: CSAR/DTCP (M) 86-43/LP-39

பத்திரம் சுத்தமானது என்பதற்கு அத்தாட்சியாக அரசாங்க
வழக்கறிஞரின் லீகல் ஒப்பீனியனும் பெற்றது.

மனை ஒன்றின் (2400 சதுர அடிகள்) விலை ரூபாய் 7,650/-
சுலப தவணை முறை திட்டம்! முன் பணம் ரூபாய் 2,550/-
மீதியை 12 மாதங்களில் சுலப தவணையாக செலுத்தலாம்.

15–5–86க்குள் மனை பதிவு செய்பவர்களுக்கு
எங்கள் அன்பளிப்பு: ஏர்பேக் (AIRBAG) இனாம்!
மனைகளைப் பார்வையிடவும், மற்ற விபரங்களுக்கும் நேரில் அணுகவும்.


திருப்பதி எஸ்டேட்ஸ்


"ஸ்ரீ மீனாக்ஷி நிலையம்"
30, ஆற்காடு முதலியார் தெரு. (தெற்கு போக் ரோட் பக்கம்)
தியாகராயநகர், சென்னை-600 017 டெலிபோன்: 442564

PHILIPS


பிலிப்ஸ்

பிலிப்ஸ் டிசைன் செய்துள்ளதென்றால் அதை ஒவ்வொரு அம்சத்திலும் காணலாம்.





சீரான அமைப்பு, எழில்மிகு தோற்றம்
சேர்த்திடும் கம்பீரமும் இணைந்த உறுதிமிக்க பிலிப்ஸ் மிக்ஸர்-கிரைண்டர், கச்சிதமானதும் உபயோகத்திற்கு எளிதானதும் ஆகும்.



உபயோகத்திற்கு மிக எளிதானது
இரண்டு ஜார்கள்—திரவ பதார்த்தங்களுக்கென ஒரு உறுதிமிக்க ஒளிஊடுருவும் பிளாஸ்டிக் ஜார்; அரைப்பதற்கென ஒரு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜார். ஒவ்வொன்றும் தனித்தனியாக இணைக்கப்பட்ட பிளேடுகளுடன்

பல உபயோகங்கள்
அரைத்தல், கலத்தல், நறுக்குதல், பிழிதல், ப்ளெண்டிங் மற்றும் விப்பிங் போன்ற வேலைகள் செய்ய 3-4 நிமிடங்களே தேவை. இதில் சக்திவாய்ந்த 450 வாட் மோட்டார் உள்ளது. மூன்று அடிப்படை சுழல் வேகங்களுக்கென ரோட்டரி ஸ்விட்ச் மற்றும் உங்களுக்குத் தேவைப்படும் சரியான சுழல் வேகத்தைப் பெற 'இஞ்சிங்' சௌகரியம் கொண்டது.

அம்சத்துக்கு அம்சம் இது உயர்தரமானதாகும். தவிர, நாடெங்கும் பரவலாக விற்பனைக்குப் பின் பிலிப்ஸ் வழங்கும் சர்வீஸ் வசதியின் பின்பலம் கொண்டது.

பிலிப்ஸ் மிக்ஸர்-கிரைண்டர்

பிலிப்ஸ்—ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்

CLARION/B/P/168/203 TAM



நெருப்பாக நீ

அம்மா இருந்த வரையில், அவளது புடைவைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டே அலைந்த இன்பா — பின்னால், பள்ளிக்கூட விடுமுறையின் போது தனியாக லண்டன் வரை போய் விட்டு வந்துள்ளாள் என்பதைச் சொன்னால்...

யாராவது நம்புவார்களா?

எல்லாம் சரிதான். இன்னும் கொஞ்சமே கொஞ்ச பயம்... ரத்தத்தைப் பார்த்தால் மட்டும்.

வெளிப்பார்வைக்குத் தைரியமாய் இருப்பது போலத் தோன்றினாலும் — அறுபட்ட விரலைப் பார்த்தால், கழுத்து துண்டிக்கப்பட்ட பெண் போல் — ஏன்தான் இப்படியெல்லாம் தோன்றுகிறதோ?

நந்து கூட அவளைக் கேலி செய்வான்.

ஆர்டிஸ்டுக்குக் கற்பனை தேவைதான். ஆனால் இது பயங்கரமான கற்பனை. நீ மர்மக் கதைக்குப் படம் வரையத்தான் லாயக்கு...

''இல்லே நந்து... அது மாதிரியான ஒரு சம்பவத்தை, ரொம்பவும் பக்கத்துல இருந்து பார்த்த மாதிரி ஒரு ஃபீலிங்...''

''ரீல்!

''ச்சீ... இப்ப உன்னைக் கூடத்தான் சொல்றேன். உன்னை முத முதல்லே பார்த்தப்பவே — ரொம்ப காலத்துக்கு முன்னாலேயே உன் கூடப் பழகின மாதிரி இருக்குன்னு சொன்னேன்... அப்ப அதுவும் ரீலா?

''அப்படி வா வழிக்கு. என் கிட்டே உனக்கு அந்த மாதிரி எண்ணம் ஏற்பட்டது பாரு. அதுக்குப் பேர்தான் காதல்னு சொல்றது...''

எனக்கு வர்ற கோபத்துல, உன்னை அப்படியே கண்ட துண்டமா வெட்டணும் போல இருக்கு...

உன்னாலே முடியாதும்மா... என் மேல் கத்தி பட்டவுடனேயே நீ மயக்கம் போட்டுடுவே... அத்தனை பாசம்... ரத்த பாசம்!''

ஜனார்த்தனம் இவர்களது பேச்சைக் கேட்டபடி, புன்னகை மாறாமல் தம் வேலையில் ஈடுபடுவார்...

எது ஒன்றிடம் பயமோ... எது ஒன்றிடம் வெறுப்போ... அதைப் பற்றித் தீவிரமாகப் பேசினால், அதையே நேசித்தால், பயமும், வெறுப்பும் பறந்து விடுமென யாரோ சொல்லக் கேள்வி.

மகளின் இந்தச் சின்ன பயத்துக்கு, நந்தகுமார் ஒரு மருந்தாக இருப்பானென்றால்... இருக்கட்டுமே!

இன்பாவின் சிநேகிதர்களிலேயே அவருக்கு நந்தகுமாரை மிகவும் பிடித்திருக்கிறது.

கொஞ்சம் முன் கோபக்காரன். இருந்தாலும் நல்லவன். அடிக்கடி வீட்டுக்கு வருவான். ஜனார்த்தனத்தைப் பார்த்தால் மரியாதையுடன் கைகுவிப்பான்.

ஜனார்த்தனத்தைப் பொறுத்தமட்டில், உறவென்று சொல்லிக்கொள்ள யாருமில்லை. லட்சுமி இருந்த வரையில் — அவளது அக்கா, தம்பி என்று யார் யாரோ வந்து, பத்து நாட்கள், ஒரு மாதம் போல் முற்றுகை யிட்டது உண்டு.

அவர்களுக்குமே சகோதரியிடம் உள்ளூர கோபம்... தங்கம்தங்கமாய்த்தாங்கள் பெற்று வைத்திருக்கும் குழந்தைகளில் ஒன்றைத் தத்தெடுத்து வளர்க்காமல், எங்கேயிருந்தோ ஓர் அனாதைக் குழந்தையை லட்சுமி எடுத்து வளர்க்கிறாளே என்று...

அவள் இறந்த பின் — அந்த வீட்டுப் பக்கம் இவர்கள் யாருமே எட்டிப் பார்ப்பதில்லை.

இன்பாவின் அதிர்ஷ்டம்... இன்று வரையில், அவரது பிஸினஸில் பணம் அரித்துக் கொட்டுகிறது...

இவளுக்கு ஏற்றவனாய் ஒருவனைத் தேடிப் பிடிக்க வேண்டும் என்கிற ஒரே கவலையைத் தவிர வேறு கவலையில்லை.

நந்தகுமாரைப் பற்றி, அவனிடமே நிறைய கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறார்.

''அப்பா என்ன வேலையில் இருக்கிறார் நந்து?''

''சொன்னால் கேலி செய்யக் கூடாது..''

''சேச்சே... சொல்லுப்பா...''

''அவர் வேலையே இதுதான் சார்... விடியற்காலையில் எழுந்திருப்பார்... வாயில் பைப்பைக் கவ்விட்டுத் தோட்டத்தை ஒரு ரவுண்டு அடிப்பார். காப்பி, டிபன், சாப்பிட்டுட்டு வீட்டை ஒரு ரவுண்டு அடிப்பார்... எங்க அம்மாவைப் பார்க்க டாக்டர் வந்தால் அவர் கூட உட்கார்ந்து மணிக்கணக்காப் பேசுவார். அப்புறம் சாப்பாடு... சின்ன தூக்கம்... தூங்கி எழுந்ததும், எங்க பங்களாவில் இருக்கிற பெரிய கல்யாணக் கூடத்துல பிரும்மாண்டமான தூண்கள் இருக்கு. மொத்தம் எட்டு தூண்... எங்க அப்பாவோட காலத்துல உருப்படியா அவர் கட்டினது இந்தக் கல்யாணக் கூடம் தான்... அந்தத் தூண் ஒவ்வொண்ணையும், சுத்தி வர்றதுக்குள்ள சாயந்திரம் டீ நேரம் வந்துடும்...

''போதும்பா...''

ஜனார்த்தனம் வாய்விட்டுச் சிரித்தே விட்டார்.

''ஆக மொத்தம் வேலையில்லாமல் வீட்டோட இருக்கார்னு சொல்றே...''

''அவர் வேலைக்குப் போகணும்கிற அவசியமில்லே சார். ஊரைச் சுத்தி நிறைய நிலம் நீச்சு இருக்கு... மாந்தோப்பு, தென்னந்தோப்பு இருக்கு. பணம் வீட்டைத் தேடி வர்றது...

''நாளைக்குக் கல்யாணமானா நீயும், அப்பாவை மாதிரி...''

''நோ... நோ... அங்கேதான் நீங்க தப்பு பண்றீங்க... எங்க அப்பா வீட்டோட உட்கார்ந்திருக்கிறதைப் பார்த்த எவனும் அந்த மாதிரி உட்கார ஆசைப்பட மாட்டான்... இந்தப் பக்கம் வியாதிக்காரப் பெண்டாட்டி. அந்தப் பக்கம் மூளை சரியில்லாத மூத்த பையன்... இவங்க ரெண்டு பேருக்கும் நடுவுல வாழ்ந்தும் எங்க அப்பாவுடைய மூளையும், தேகமும் ஆரோக்கியமான நிலையில் இருக்கேன்னு ஆச்சரியப்படறேன். என்னால் அப்படி இருக்க முடியாது...

''பின்னே, மெட்ராஸிலேயே செட்டிலாயிடப் போறியா...''

''அதுக்கு எங்க அப்பா ஒத்துக்க மாட்டார்... நோ... நோ... நீங்க எப்படி இன்பா பேருல உயிரையே வச்சிருக்கீங்களோ, அதே மாதிரி எங்க அப்பாவும் என் மேல் பாசத்தைக் கொட்டறவர். அவர் எதிர்காலமே, என் வாழ்க்கையில்தான் இருக்கு... அவர் உயிரோட இருக்கிற மட்டும், அந்த ஊருல, எங்க அப்பாவோட பிரியமான வீட்டுல நான், பெண்டாட்டி குழந்தைகுட்டிங்களோட சந்தோஷமா வாழணும். அதே சமயத்துல மெட்ராஸ்லே ஒரு விளம்பர நிறுவனம்ஒண்ணு ஆரம்பிக்கணும். அதுக்கு, உங்களைப் போல் இருக்கிற பெரிய மனுஷங்க தான் உதவணும்...''

''நானா... நான் என்னப்பா செய்ய முடியும்?



''ஒரு பெரிய மனுஷர் எனக்கு மாமனாரா யிருந்தா அவரோட செல்வாக்கை — என் விளம்பர நிறுவனத்துக்குப் பயன் படுத்திப்பேன். வேற என்ன...?''

நந்து, எந்தவித மூடு மந்திரமும் இன்றி, 'பளிச்'செனச் சொல்வான்.

அதனாலேயே, அவன் — இன்பாவை விடு முறைக்குத் தன்னுடன் கிராமத்துக்கு வரும் படி அழைத்தபோது — ஜனார்த்தனமும் அவனுக்குச் சிபாரிசு செய்தார்.

''எவ்வளவு நாட்களா கூப்பிடறான்... அவன் ஊருலேயும், சுத்து வட்டார ஊர்களிலேயும் சோழச் சிற்பங்கள் நிறைஞ்ச கோவில்கள் இருக்காம்... கிராமமே பசுமையா — அழகா இருக்குமாம்... கையில் கேன்வாஸையும், பெயிண்ட் டியூப்ஸையும் எடுத்துட்டுப் போ... இந்தத் தடவை லலித கலா அகாடமி எக்ஸிபிஷன்லே வைக்கிற மாதிரி, உருப்படியா நாலஞ்சு பெயிண்டிங்ஸோட வா...''

அவன், தந்தையைப் பார்த்து முறைத்தான்.

''இவன் அதுக்காகக் கூப்பிடலே... இவங்க அப்பா அம்மாகிட்டே என்னைக் காண்பிச்சு, சம்மதம் வாங்கிக்கத்தான் கூப்பிடறான்...''

நந்தகுமார் கத்தினான்.

''சார்... என்னைப் பத்தி எவ்வளவு மட்டமா எடை போட்டிருக்கா பார்த்தீங்களா...?''

''நீ போப்பா... அவள்கிட்ட நான் பேசிக்



கிறேன்...''

அவர் நந்தகுமாரை அனுப்பிவிட்டு, மக ளிடம் சொன்னார்:

''நீ நினைக்கிற மாதிரியேதான் இருக்கட் டுமே. அவனோட அப்பா அம்மா, நீ மரு மகளா வந்தால் தங்களுக்குச் சரிப்பட்டு வருமான்னு பார்க்கிற மாதிரி — நீயும், அவங்க உனக்கு மாமியார் மாமனாரா வந்தா, தோதுப்படுமான்னு பார்த்துட்டு வந்துடேன்...

முதல்லே — நந்து என் புருஷனா வந்தால் சரிப்படுமான்னு பார்க்க வேண்டாமா?''

''அதையும் இந்த விசிட்ல தீர்மானிச்சுடு..''

''ஒத்து வரலையின்னா...''

''ஜஸ்ட் — ஒரு ஃப்ரெண்ட்லி விஸிட்... நாலஞ்சு நல்ல பெயிண்டிங்ஸ்... கிராமியச் சூழ்நிலையில கொஞ்ச நாட்கள் வாழ்ந்த அனுபவம்... இதுங்களாவது மிஞ்சட்டும்.''

''என்னைத் தனியா அவன் கூடப் போகச் சொல்றீங்களா... அம்மா இருந்தா இப்படி என்னை அனுப்புவாங்களா...?''

இதைக் கேட்டதும், ஜனார்த்தனம் கண் கலங்க, மகளைப் பார்த்தார்.

''அவள் இருந்திருந்தால் இந்தச் சிரம மெல்லாம் இல்லே... அவளே, மூட்டை முடிச்சைக் கட்டிட்டு, அவங்க ஊருக்குப் போய்ப் பார்த்து, பேசிட்டு வந்துவிடுவாள். இப்ப... உனக்கு ஏத்தவனை நீயே தேர்ந்தெ டுக்க வேண்டிய அவசியத்துல இருக்கே... ஆனா ஒரு விஷயம் இன்பா... உனக்கு யாரு மில்லேன்னு மட்டும் நினைச்சிடாதே... நானி ருக்கேன்...''

''......''

''அப்ப, 'நீங்களே போய்ப் பார்த்துவிட்டு வரலாமே'ன்னு கேப்பே... நான் பார்க்கிற விதமே வேறே... நான் பிஸினஸ்மேன். நந்துவோட குடும்பச் சொத்து எவ்வளவு தேறும்னு வேணுமானால் என்னால் மதிப்புப் போட முடியும். மனிதர்களை மதிப்புப் போட உன்னாலதான் முடியும்...''

அப்பாவின் ஆலோசனைப்படிதான் — இன்பா, நந்துவிடம் தன் சம்மதத்தைத் தெரிவிக்கிறாள்... அதுவும், அப்பாவின் எதிரிலேயே...

''சார், இவ சொன்னா... எங்க அப்பா எனக்காக பேசி பண்ணிட்டிருக்கார்னு. அப்ப நம்பலே... இப்ப நம்பறேன்... உங்க ளுக்குத்தான் எவ்வளவு உயர்ந்த உள்ளம்? இதுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலையே...''

''என் பொண்ணைப் பத்திரமா என் கிட்ட கொண்டு வந்து சேரு... போதும்..''

இன்பா, நந்தகுமாரைக் குறும்பாய்ப் பார்த்துச் சிரிக்கிறாள்.

''எனக்கு வேண்டிய வசதிங்க எல்லாம் உங்க வீட்டுல கிடைக்குமா நந்து?''

''என்ன வேணும்... சொல்லு... எங்க வீடு, கிராமத்துல இருக்குங்கற ஒரேயொரு குறையே தவிர — பட்டணத்து வசதிகள் அத்தனையும் இருக்கு. ஏதாவது சாமான் வாங்கணும்னா பக்கத்துலதான் மாயவரம் டவுன்... அம்மா, அப்பாவைத் தவிர — மத்த தெல்லாம் கிடைக்கும்...''

''நான் செவ்வாயும், வெள்ளியும் எண் ணெய் தேய்ச்சுக் குளிப்பேன்... நானாத் தேய்ச்சுக்கிட்டா — சரியா எண்ணெய் போகாது...''

''எண்ணெய்? இந்த ஷாம்பூ யுகத்துல...''

''எஸ்...''

''சரி... எங்க வீட்டுல நாலஞ்சு வேலைக் காரிங்க இருக்காங்க... ஏற்பாடு செய்ய றேன்...''

''நீங்க சைவமா, அசைவமா...?''

''அசைவம்...''

''நான், வீட்டுலே இருக்கிற வரைக்கும், கோழி முட்டை கூட சமையலறைக்குள்ளே வரக் கூடாது...''

''......''

''என்ன.. முழிக்கிறே...?''

''கொஞ்சம் கஷ்டம். இருந்தாலும் முயற்சி பண்றேன்...''

''அப்புறம், என் கூடவே ஒரு ஆள் வேணும்...''

''அதான் நான் இருக்கேனே...''

''ராத்திரி படுத்துக்கறப்ப பேச்சுத் துணைக்கு...?''

''டன்!''

''கடைசியா ஒண்ணு...!''

''சொல்லித் தொலை!''

''சொந்த ஊர், சொந்த வீடுதானேயின்னு என்கிட்டே அசடு வழியக் கூடாது!''

''இதைப்பாரு. எனக்கும் மான ரோஷம் இருக்கு. இனிமேல் நீயா, 'நந்து, நான் உன்னை லவ் பண்றேண்டா'ன்னு கதற வரைக்கும் நானா எதுவுமே இதைப் பத்திப் பேசப் போறதில்லே...''

அன்றிரவு —

எக்மோர் ஸ்டேஷனில், முதல் வகுப்பு பெட்டியில் அவர்களை ஏற்றிவிட்ட ஜனார்த் தனம், ரயில் கிளம்புவதற்கு முன் — மகளிடம் சொல்கிறார்:

''இங்கே பாரு இன்பா... தனியாப் போறதா நினைக்காதே... நீ நெருப்பு... நெருப்புக்குத் துணை காற்றுதான்... இங்கே காற்றுல கரைஞ்ச உன் அம்மா... உனக்குத் துணையா எப்பவும் இருப்பா...''

இன்பா, அப்பா பார்க்காதவாறு, கண் களைத் துடைத்துக் கொள்கிறாள்.

(தொடரும்)

ஒன்றரை வருடங்களாக ஓர் அவஸ்தை...

காங்கேயம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த கிராமம் துலுக்கன்வலசு. குண்டடம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தது. இந்த ஊரில் உள்ள ஒரே யொரு அடி பம்பு ஒன்றரை வருடங்களாக ரிப் பேராக இருக்கிறது. இதனால் இந்த கிராம மக்கள் குடிநீருக்காகப் படும் கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. இன்னும் துலுக்கன் வலசிலிருந்து இரண்டு கி.மீ. தொலைவிலுள்ள பெருமாள்பாளையம்போய்த்தான் குடிதண்ணீர் கொண்டுவருகிறார்கள். அண்மையில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தலின்போது ரிப்பேர் செய்வதற்காக அந்த பம்பைக் கழற்றிச் சென்ற தாகவும், பிறகு தேர்தல் முடிந்தவுடன் ரிப்பேர் ஏதும் செய்யாமல் அப்படியே கொண்டு வந்து போட்டுவிட்டுச் சென்றுவிட்டதாகவும் நாங்கள் சந்தித்த ரத்னசாமி என்பவர் கூறினார். இனி குண்டடம் பஞ்சாயத்து யூனியன் தலைவராவது கவனிப்பாரா?

— நமது நிருபர்


னது கூந்தலை சுத்தம் செய்து கண்டிஷன் செய்ய...
னது மேனி நிறம் காத்திட... அங்கமெங்கும் பொங்கும்
ழில் பேணிட... எனதருமை க்ரௌனிங் க்ளோரி!
Dimple Kapadia
Godrej
CROWNING Glory
BEAUTY SOAP
for silky hair
கூந்தலுக்கும், மேனி எழிலுக்கும், நிறத்திற்கும்
உதவும் ஒரே அழகு சாதன சோப்!



நம்பிக்கை வெல்லுமா?



அஸ்திவாரத்தோடு அப்படியே நிற்கும் வீடுகள்....

நம்பிக்கை துரோகமா?

"உள்ளதும் போச்சுதடா
நாரும் சிரிச்சுதடா!"

பழமொழி கேள்விப்பட்டிருப்பீர்களே! இது அப்படியே ஓசைப்பட்டி ஹரிஜன மக்களுக்குப் பொருந்தும்!

கடந்த 1984ம் ஆண்டு ஒரு நாள் இருபத்தைந்து குடும்பங்கள் கொண்ட ஓசைப்பட்டி ஹரிஜனக் குடியிருப்புக்கு வந்தார்கள் பவானி கிராமிய கூட்டுறவுச் சங்கத்தினர்.

"இப்போதிருக்கும் உங்கள் ஓலைக் குடிசைகளை இடித்துத் தள்ளிவிட்டு அனைவருக்கும் நல்ல வீடு கட்டித் தருகிறோம். அதற்காக நீங்கள் கொஞ்சம் பணம் செலுத்தினால் போதும்!" என்று ஆசை வார்த்தைகளை அள்ளி விட்டனர். பாவம் ஒன்றுமறியாத அந்த அப்பாவி மக்கள் அதை அப்படியே நம்பிவிட்டனர். அப்புறம் நடந்ததென்ன? தம்பி என்பவர் கூறினார்.....

"முதல்ல 125 ரூபாய் கட்டச் சொன்னாங்க. உடனே, உடனே வாங்கி அந்தப் பணத்தை புரட்டிக் கொண்டு போய்க் கட்டினோமுங்க. ஆனால் 110 ரூபாய்க்குத்தான் ரசீது கொடுத்தார்கள் (எங்களிடம் ரசீதுகளைக் காட்டினார்கள்). 'பெரிய மாடி வீடா கட்டித் தந்திடப் போறாங்க? ஒரு சின்ன வீடுதானே! உடனே கட்டித் தருவாங்கன்னு பார்த்தா ஒண்ணுமே நடக்கக் காணோமுங்க. நாலஞ்சு தடவை பவானிக்குப் போய் வந்த பிறகு தாங்க வேலை ஆரம்பமாச்சு. நாங்க ஏற்கெனவே குடியிருந்த குடிசைங்களையெல்லாம் பிரிச்சுட்டாங்க. பிறகு அந்த இடங்கள்லெ அஸ்திவாரம் போட்டாங்க; அவ்வளவுதாங்க...அப்போப்போட்ட அஸ்திவாரம் அப்படியே கிடக்குது பாருங்க" என்று இருபத்தைந்து வீடுகள் கட்டுவதற்காகப் போடப்பட்ட அஸ்திவாரங்களைக் காட்டினார்.

அதற்குள் பாராள் என்ற பெண்மணி

புதுக்கவிதையில் சில புதிர்கள்

நைட்கிளப் ஒன்றில்
பதுங்கிப் பாயும்
பயங்கர ஓநாய்கள்
பச்சினம் பாலருக்கு
எமனாய் வந்த
படு பயங்கரப் பருந்துகள்

மரங்களைக் காக்க
மறியல் நடத்தும்
சிறகொடிந்த புறாக்கள்
அபூர்வ உயிரினங்கள்
அழிவதைத் தடுக்க
உழைக்கும்கிழச் சிங்கங்கள்

வெண் புறாக்களை
அமைதிச் சின்னமென
கண்டு சிலிர்ப்பவர்கள்!
புறாக்கறி பிரமாதம்
அதற்கொரு-ஏப்பம்
விட்டுச் சிரிப்பவர்கள்

எதிர்ப்பக்கத்தில் அபூர்வமான வெண்ணிறப் பறவைகளுடன் வனிதையர்.
வண்ணப்படம்: யோகா

வந்தார். ''அத ஏன் சாமி கேக்கறீங்க? நாங்க வாயில்லாப் பூச்சிதானுங்களே. மழைக் காலம் வந்திடுச்சு; இருந்த வீடும் போயிருச்சு. ஒரு சின்னக் குடிசை போட்டுட்டு குழந்தை குட்டிகளோட இங்கேயே ஒண்டிக்கிட்டிருக்கிறோமுங்க சாமி'' என்றார் அந்தப் பெண்மணி.

இந்த ஹரிஜன மக்கள் பெரும்பாலோர் பக்கத்திலுள்ள விவசாய வேலைக்குச் செல்பவர்கள். அதாவது கரும்பு தோட்டத்தில் கரும்பு வெட்டுகிற வேலைதான். தினக் கூலி பத்து ரூபாய்தானும். இந்தக் கூலியை வெச்சுட்டு சரியா சாப்பிடுவதே கஷ்டம். இந்த நிலையில் இவர்களிடம் நூற்று இருபத்தைந்து ரூபாயை வாங்கிக் கொண்டு, இருந்த குடிசைகளையும் இடித்துத் தள்ளிவிட்டு அஸ்திவாரத்தை மட்டும் கட்டி விட்டிருக்கும் பவானி கூட்டுறவு கிராமியச் சங்கத்தினரின் போக்குத் தான் வேதனை தருவதாக இருக்கிறது.

''எங்க எம்.எல்.ஏ. கிட்டே போய்ச் சொன்னோமுங்க. 'எனக்குத் தெரியாம நடந்து போச்சு. நான் கவனிக்கிறேன்'ன்னு சொன்னாருங்க. சொல்லி ஒரு வருஷத்துக்கு மேலாச்சு; ஒண்ணுமே நடக்கலீங்க. அம்பது தடவைக்கு மேலே பவானிக்குப் போயிட்டு வந்தோமுங்க. பஸ் சார்ஜ் சும்மா வாங்க?'' என்றார் குருசாமி என்பவர்.

எவ்வளவோ முறையிட்டும் அஸ்திவாரத்தைத் தவிர மேற்கொண்டு எந்த வேலையும் நடக்கவில்லை. ஆதலால் கட்டிய பணத்தைக் கொடுங்கள் என்று ஹரிஜன மக்கள் வற்புறுத்தவே எழுபது ரூபாயை மட்டும் அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்து விட்டதாம் கூட்டுறவுச் சங்கம். இது என்ன கணக்கு என்று தெரியவில்லை. அந்த மக்கள் அழாத குறையாக ''என்னங்க இந்தச் சின்ன குடிசையிலேயே நாங்கள் காலம் தள்ள வேண்டுமா, மழைக்காக ஒதுங்கிய குடிசைங்க. இதில் எப்படிங்க காலம் தள்ளறது?'' என்று நம்மிடம் முறையிட்டபோது, என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை.






* எந்தக் கணக்கை வைத்து கொண்டு பவானி கூட்டுறவுச் சங்கம் 125 ரூபாய் வாங்கியது?
* 125 ரூபாய் வாங்கிக் கொண்டு ஏன் 110 ரூபாய்க்கு மட்டும் ரசீது கொடுத்தது?
* அஸ்திவாரத்தோடு வீடுகள் நிற்கக் காரணம் என்ன?
* மக்கள் வீடு முழுதும் கட்டித் தர வற்புறுத்தவே 70 ரூபாயை மறுபடியும் அவர்களிடமே திருப்பிக் கொடுத்து விட்டார்களே? அது ஏன்?

ஓசைப்பட்டி ஹரிஜனவாசிகளின் கேள்விகள் இதுதான். ஆனால் அந்த மக்கள் கூட்டுறவு சங்கத்தின் மீது இன்னும் நம்பிக்கை இழக்கவில்லை. அதே போல எம்.எல்.ஏ. மேலும் இவர்கள் நம்பிக்கை இழக்கவில்லை. எங்க எம்.எல்.ஏ. (பவானி தொகுதி. அ.தி.மு.க. எம்.எல்.ஏ. மாதையன்) மேலேயும் எங்களுக்கு இன்னமும் நம்பிக்கை இருக்குங்க. தேர்தல் சமயத்துலெ எங்க தோள் மேலே் கையைப் போட்டுக்கிட்டு எங்க கிட்ட ஆதரவு கேட்டாருங்க. நிச்சயம் ஏதாவது செய்வாருங்க..... என்றுதான் இன்னமும் நம்பிக்கையை நெஞ்சில் சுமந்து கொண்டு வாழ்கிறார்கள். அந்த நம்பிக்கை ஈடேறுமா? அல்லது நம்பிக்கைத்துரோகமாகவே முடிந்து போகுமா?

— கே.எஸ்.வி.

இந்தியா முழுதும் பெருகி வளர்ந்து வரும் சிங்க்ளேர் உரிமையாளர்களுக்கு எங்களின் உணர்ச்சி மிக்க ஒரே வார்த்தை "நன்றி"



சிங்க்ளேர் எங்கும் இந்தியா முழுதும் புதிய வீடுகளில் அதிக மக்கள் சிங்க்ளேரையே நாடுகிறார்கள்.

சிங்க்ளேரின் தொழில் நுட்பம் பற்றியோ எதுவும் கூறத் தேவையில்லை. அது கலைத்திறனின் உன்னதப் படைப்பாகும். அழகிய இல்லங்கள் தோறும் வரவேற்பு அறைகளில் அமைதியான அழகுடன் சிங்க்ளேர் கலர் டி.வி. செட்டுகள் அலங்கரிக்கின்றன.

சிங்க்ளேரின் முன்னணி ரெண்டிக் தொழில் நுட்பமும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட அம்சங்களும் இணைந்து கண்ணுக்கு விருந்தான காட்சிகளை ஆண்டாண்டு காலத்திற்கு அளித்தவாறு உங்கள் இல்லத்தோடு ஒன்றிய பகுதியாக ஆகிவிடுகிறது.

சிங்க்ளேர் சாலஞ்சர் — துரிதமாய்த் துவங்கும் பிக்சர் டியூப் — மென்மையான (ஸாஃப்ட்டச்) எலக்ட்ரானிக் ட்யூனிங் — மற்றும் பல முன்னணி அம்சங்கள்.


ஒரு புத்தம் புதிய மாருதி காரை உங்கள் உரிமையாக்கிக் கொள்ள அரிய வாய்ப்பு! மற்றும் ஏராளமான உன்னத பரிசுகள் இலவசம், வாய்ப்பு இன்னமும் உள்ளது!

மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள விற்பனையாளரை அணுகுங்கள்.

Sinclaire Challenger

பரிசுகள்

1 மாருதி கார் 2 ஹோண்டா மோட்டார் சைக்கிள் 5 வீடியோ கேம் செட்டுகள் 150 பாக்கெட் ரேடியோக்கள்



Prestige Plus Performance

Adwave/STPL/Tam/1/86

தண்ணீரை எதிர்பார்த்துத் தவமிருக்கிறார்கள்...

ஈரோட்டுக்கு எத்தனை மணிக்கு பஸ், கோயமுத்தூருக்கு எத்தனை மணிக்கு பஸ், என்று கேள்விகள் கேட்டால் டக், டக்கென்று பதில் சொல்வார்கள் அம்மாப்பாளையம் வாசிகள். ஆனால் "உங்கள் ஊர்க் குழாயில் எத்தனை மணிக்குத் தண்ணீர் வரும்?" என்று கேட்டால், மலங்க, மலங்க விழிப்பார்கள்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பெயர் போன — ஈரோட்டிலிருந்து சுமார் பதினெட்டு கி. மீ. தூரத்திலுள்ள சென்னிமலையின் விரிவாக்கப் பகுதிதான் அம்மாப்பாளையம். சென்னிமலை — அம்மாப்பாளையம், வாசிகளின் குடிதண்ணீர் பிரச்னையைத் தீர்க்கப் பவானி அருகே, பவானி ஆற்றிலிருந்து குழாய் மூலம் சென்னிமலைக்கு கனெக்‌ஷன் கொடுத்திருக்கிறார்கள். 1981 வரை எல்லாம் சரியாகத்தான் இருந்தது. பின்னர்தான் அம்மாப்பாளையத்திலுள்ளவர்களுக்கு வந்தது பிரச்னை!

முதலில் ஒருநாள் விட்டு ஒருநாள் வந்த தண்ணீர், பின்னர் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை, அப்புறம் மூன்று நாட்களுக்கு ஒரு முறை என்று வர ஆரம்பித்தது. மூன்று நாளைக்கொருமுறை என்று ஆனவுடன் அம்மாப்பாளையம் வாசிகள் கலெக்டரிடம் முறையிட்டார்கள். அவரோ (பெயர் குறிப்பிட்டார்கள் மக்கள்) நீங்கள் அதிர்ஷ்ட சாலிகள் பெரியார் மாவட்டத்திலேயே மூன்று கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று குடிநீர் எடுத்து வரும் மக்களும் இருக்கிறார்கள்..." என்றாராம்.

அம்மாப்பாளையம் மக்கள் புதிதாகக் குடிநீர்த்திட்டம் ஏதாவது கொண்டு வரச் சொன்னார்களா என்ன? ஏற்கெனவே போடப்பட்டிருக்கும் குழாய்களில் ஒழுங்காகக் குடிநீர் வரும்படி பார்த்துக் கொடுங்கள் என்று தானே கேட்டார்கள். இந்தப் பதிலைக் கூற ஒரு கலெக்டர் எதற்கு? கடந்த மூன்று வருடங்களாக என்ன நடக்கிறது என்பதை முத்து சாமி என்ற வாலிபர் நமக்கு விளக்கினார்.

"பொதுக் குழாயிலேயே எப்போது குடிநீர் வரும் என்று தெரியாத நிலையில், சென்னிமலைக்கும், அம்மாப்பாளையத்துக்கும் இடையில் ஏகப்பட்ட வீட்டு கனெக்‌ஷன்களைக் கொடுத்து விட்டார்கள். மேலும் அம்மாப்பாளையத்திலேயே பல வீடுகளுக்கு கனெக்‌ஷன் கொடுத்தார்கள். இதனால் தண்ணீரின் தேவை அதிகமாகியது. இடையில் சென்டெக்ஸ் காலனியிலிருந்து ஐந்து குதிரைச் சக்தியுள்ள மோட்டார் வைத்து, துணிகளுக்ுச் சாயம் போடும் தேவைக்காகக் குடிதண்ணீரை இழுத்துக் கொள்கிறார்கள். இதனால் கடைசிப் பகுதியான எங்கள் பகுதிக்குத் தண்ணீர் வருவது குதிரைக் கொம்பாயிற்று!

"இப்போது மெயின் ரோடிலுள்ள பொதுக் குழாயில் தண்ணீர் எப்போது வரும் என்று சொல்ல முடியாது. ராத்திரி பகல், எப்போது வேண்டுமானாலும் — எத்தனை மணிக்கு வேண்டுமானாலும் வரலாம். குழாயில் தண்ணீர் வருகிறது என்று தெரிந்து நாங்கள் ஊருக்குள்ளிருந்து மெயின் ரோட்டிற்குத் தண்ணீர் பிடிக்க வருவதற்குள் தண்ணீர் நின்று போய்விடும். அப்புறம் மெயின் ரோடிலுள்ள அடி பம்பிலிருந்து (Bore Well) தண்ணீர் பிடித்துக் கொண்டு போக வேண்டியதுதான்" என்று கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாகத் தாங்கள் பட்டு வரும் அவஸ்தையை விளக்கினார் முத்துசாமி என்ற இளைஞர்.

இதற்குள் ரங்கசாமி என்ற வாலிபர், "இந்த அடிபம்பு தண்ணீரைக் குடித்துத்தான் ஸார் எனக்கு உடம்பில் தேமல் ஏற்பட்டது. எங்கள் ஊரில் பலருக்குச் சரும நோய்கள் ஏற்பட்டதற்குக் காரணம் இந்த அடிபம்பு தண்ணீரைக் குடிப்பதற்கும் சமையலுக்கும் உபயோகிப்பதுதான்" என்று அந்த பம்பைச் சுட்டிக் காட்டினார்.

நாங்கள் போய்ப் பார்த்தோம். அங்கே, 'போர் வெல்' போடப்பட்டு, மோட்டார் வைத்து மோட்டார் போடும்போது பல குழாய்களில் தண்ணீர் வரும்படியாக (படத்தில் உள்ளதுபோல்) வைத்திருந்தார்கள். அதிலிருந்து எப்போதும் தண்ணீர் கிடைக்குமென்றாலும் அந்தத் தண்ணீரில் ஃப்ளோரைட் என்ற ரசாயனப் பொருள் கலந்திருப்பதால் குடிக்கவும், சமையலுக்கும் உபயோகப் படுத்தும்போது பல நோய்கள் வருவதாகச் சொன்னார்கள் அந்த இளைஞர்கள். இது எவ்வளவு தூரம் உண்மை என்பது தெரியவில்லை.

அம்மாப்பாளையத்திலேயே குழாயில் எப்போது குடிதண்ணீர் வருகிறது என்பது தெரியாத போது, அதற்கடுத்தபடியாகப் ஒதுக்கப்பட்டுள்ள ஹரிஜனக் குடியிருப்புக்



• பேரூராட்சித் தலைவர் அங்கப்பன்





• ரங்கசாமி





• பொதுக்குழாய்: எப்போது? தண்ணீர் வருமோ தெரியாது



• முன்னால் குடிநீர்க் குழாய்: பின்னால் 'குடி தண்ணீர்' கடை

குழாயில் மட்டும் தண்ணீர் வருவது எப்படித் தெரிந்துவிடும்? அதோடு அந்த ஹரிஜன மக்கள் காலையில் எங்காவது கூலி வேலைக்குச் சென்றுவிட்டால் குடி தண்ணீர் அம்போதான்! எனவே அந்த மக்களுக்கு இந்த 'போர் வெல்' தண்ணீரை விட்டா வேறு வசதியில்லை. பலரும் நோய் வருகிறது என்று சொல்லவே, சரி அந்தத் தண்ணீர் எப்படித்தான் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்காக நாங்கள் அந்த போர்வெல் தண்ணீரை ருசி(?) பார்த்துக் கொண்டிருந்தபோது அங்கு தினந்தோறும் வந்து தண்ணீர்

பிடித்துச் செல்லும் கருப்பாயி என்ற ஹரிஜன மூதாட்டி அந்த வழியாக வந்தார். வந்தவர் பதறியபடி, ''தம்பி அதைக் குடிக்காதீங்க, வடிச்சால போதும்! நாங்கள் தினமும் குடிச்சிட்டு அப்படிக் கஷ்டப்படறது போதாதா?'' என்று எங்களை எச்சரித்து விட்டுப் போனாள்.

சரி, அந்தத் தண்ணீர்தான் அப்படி என்றால் அந்தக் குழாய்களுக்குப் பின்னாலேயே சாராயக் கடை (படம் பார்க்க) வைக்கப் பட்டிருப்பதால்தண்ணீர்பிடிக்கவரும்பெண்களுக்கு ஒரு தர்மசங்கடமான நிலை ஏற்பட்டிருப்பதை அவர்கள் சொல்லாமலேயே நாங்கள் உணர்ந்து கொண்டு வேதனைப்பட்டோம்.

ஏறத்தாழ சுமார் இரண்டாயிரம் பேர் வசிக்கும் அம்மாப்பாளையத்தின் குடிதண்ணீர்ப் பிரச்னை தீர என்ன வழி என்று அண்மையில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தலில் அந்தப் பகுதிகளின் பேரூராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அங்கப்பனிடம் (தி. மு. க.) விசாரித்தோம்.

''முதலில் இந்த சென்டெக்ஸ் நிறுவனத்தினர் சாயம் போடுவதற்காகக் குடிநீரை மோட்டார் மூலம் எடுத்துக் கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இரண்டாவதாக, பவானியிலிருந்து தினமும் எத்தனை மணிக்குத் தண்ணீர் விடுகிறார்கள் என்பதை மக்களுக்குத் தெளிவாகச் சொல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். இதனால் 24 மணி நேரமும், மக்கள் குழாயின் மீது கண்ணாக இருக்க மாட்டார்கள். இதைச் செய்துவிட்டாலே ஓரளவுக்குக் குடிநீர்ப் பிரச்னை தீர்ந்துவிடும்!'' என்றார்.

பவானியிலிருந்து, சென்னிமலை, அம்மாப் பாளையம் வரும் வழியில் இருக்கும் சென்டெக்ஸ் காலனியிலுள்ள, சாயப் பட்டறைக்கு, மோட்டார்மூலம்தண்ணீர்இறைக்கப் படுவதால்தான், சென்னிமலைக்கும், அம்மாப் பாளையத்துக்கும் குடிதண்ணீர் சரியாக வருவதில்லை என்பது அந்த வட்டாரத்து மக்களின் குற்றச்சாட்டு. இதுபற்றி சென்டெக்ஸ் நிர்வாகத்திடம் விசாரித்தபோது, அந்த குழாய் கனெக்ஷன் போடும்போதே தினமும் இரண்டுமணிநேரத்துக்குநாங்கள்மோட்டார் போட்டு எடுத்துக் கொள்ளலாம் என்று ஒப்பந்தம் இருக்கிறது. அதற்குத் தனியாகப் பணமும் செலுத்துகிறோம்! எனவே, சாயப் பட்டறைக்கு நாங்கள் தண்ணீரை விலை கொடுத்துத்தான் வாங்குகிறோம்!'' என்றார்கள்.

ஆனால் குடிநீரை இதுபோன்ற வியாபார வேலைகளுக்குப் பயன்படுத்தலாமா? என்ற சந்தேகத்திற்கு அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. ''இதையெல்லாம் பேரூராட்சியின் புதிய தலைவர் கண்டு பிடித்து மக்களுக்குச் சரியான முறையில் குடிதண்ணீர் விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்வார் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்'' என்றார்கள் அம்மாப்பாளையம் இளைஞர் சங்கத்தினர். அந்த எதிர்பார்ப்புகளைப் புதிய தலைவர்தான் நிறைவேற்றி வைக்க வேண்டும்.

— திருபர்



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் 1542—ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் கும்பகோணம் ''ராஜா வேத காவ்ய பாடசாலை''யை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 75 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒருநாள் உணவளிக்க சுமார் 200/— ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2000/— மூலதனம் ஏற்படுத்தியோ (அ) அவ்வப்போது ரூ. 200/— அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் சமாராதனை நடத்தும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடைக்கு 80—G விதியின்படி வருமானவரி விலக்கு உண்டு.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்ய மஹாராஜ ஸாஹேப்

ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,

D–76, 3 வது கிராஸ், ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம்—612 001.

பக்கம் பார்த்துப் பேசுகிறேன்

— மு. மேத்தா



குழந்தைத்தனங்கள்

பேருந்து போய்க் கொண்டிருக்கிறது.

இருக்கைகளில் இடம் பிடித்துவிட்டவர்கள் — ஓர் அரசாங்கத்தையே பிடித்துவிட்ட அக மகிழ்ச்சியோடு, அமர்ந்திருக்கிறார்கள்.

எட்டித் தள்ளி முட்டி மோதிக் கொண்டு நிற்பவர்களோ, மந்திரி சபையில் இடம் கிடைக்காதா என்று மயங்கிக் கிடப்பவர்களைப் போல் இருக்கைகளைப் பார்வையிடுகிறார்கள் ஏக்கத்தோடு.

நதியைப் பிளந்து கொண்டு நடப்பது போல் நடத்துனர் இங்கும் அங்கும் எரிச்சலோடு புகுந்து போய்க் கொண்டிருக்கிறார்.

பேருந்தின் கடைசியில், ஒரு பெண்கள் இருக்கையில் அட்டகாசமாகப் பேசிச் சிரித்தபடி இரண்டு இளைஞர்கள்.. 'பெண்களுக்கான இடம்' என்று சட்டம் பேசி சண்டைக்கு வர வசதியில்லாதபடி பேருந்தின் முன் பக்கத்தில் கூட்டத்தில் சிக்கித் துவண்டு கொண்டிருக்கும்பெண்களைப்பார்த்து அந்தஇளைஞர்கள் தங்கள் அதிர்ஷ்டத்தை நினைத்து அக மகிழ்ந்து போகிறார்கள்.

அடுத்த நிறுத்தத்திலேயே ஐந்தாறு பெண்கள் அடித்துப் பிடித்துப் பேருந்தில் ஏறி விடுகிறார்கள். பெண்களுக்கான இருக்கையில் அமர்ந்திருந்த இளைஞர்களோ, அந்தக் காட்சியே தங்கள் கண்களில் படாதது போல், மிக அக்கறையோடு வெளியே பார்த்துக் கொண்டு வீற்றிருக்கிறார்கள்.

சில நிமிடங்கள் பொறுத்துப் பார்த்துவிட்டு, ஒரு பெண்மணி 'உரிமைக் குரல்' கொடுக்கவே — உட்கார்ந்திருந்த இளைஞர்கள் வேண்டா வெறுப்பாக எழுந்து நிற்கு மாறு நேர்கிறது. எரிச்சல் எரிச்சலாக அவர்கள் இடத்தைக் காலி செய்ய, அந்த இடத்தில் உரிமைக் குரல் கொடுத்த பெண்ணும், அவளது தோழியும் உட்கார்ந்து கொள்கிறார்கள்.

கையில் இரண்டு வயதுக் குழந்தையோடு அடுத்து வந்த பெண்ணுக்கு அமர்வதற்கு இடம் கிடைக்கவில்லை. அவள் ஒரு கையில் குழந்தையையும் ஒரு கையில் உயரத்தில் இருக்கும் கம்பியையும் பிடித்துக் கொள்ள முடியாமல் சுற்றியுள்ளவர்களின் கண்களில் ஒரு தாவணிக் கனவாய்த் தடுமாறுகிறாள். நடத்துனர் — கட்டணச் சீட்டுக்காக அவசரப் படுத்தியபோது, கம்பியை விட்டுவிட்டுப் பணத்தை எடுப்பதற்காக முயற்சி செய்கிறாள்.

பேருந்து வேகமாக ஒரு திருப்பத்தில் திரும்பவே, குலுங்கிய குலுங்கலில், நடத்துனரை மோதிக் கொண்டு அந்தப் பெண்மணி ஐந்தாறு ஆண்கள் மீது அவலமாகச் சாய்கிறாள். கையிலிருந்த குழந்தையோ கையை விட்டு நழுவி தொலைவிலிருந்த கம்பி மீது மோதி உட்கார்ந்திருந்தவர்களின் மீது விழுந்து — தரையில் ஒரு தாமரைச் சிவப்பாய்ச் சரிகிறது.

வெவ்வேறுவிதமான விமர்சனங்கள் எழுகின்றன....

'கடைசி இருக்கையில் அமர்ந்த உரிமைக் குரல் பெண்மணி, கைக்குழந்தைக்காரிக்கு இடம் கொடுத்திருக்கலாம்' — என்று ஏற்கெனவே அந்த இருக்கையை ஆக்ரமித்து எதிர்பாராமல் இழக்க நேர்ந்த அந்த இளைஞர்கள் முணுமுணுக்கிறார்கள்.

'ஆண்கள் ஏன் தங்கள் இருக்கையைக் காலி செய்து கொடுத்திருக்கக் கூடாது?' என்று அந்த உரிமைக் குரல் பெண்மணி உரத்த குரல் கொடுத்து ஆண்கள் பக்கம் அம்பை வீசுகிறாள்.

''கையிலிருந்த குழந்தையையாவது நீங்கள் வாங்கிக் கொண்டிருக்கக் கூடாதா?' என்று உரிமைக் குரல் பெண்மணியை நின்று கொண்டிருக்கும் ஒருவர் நியாயம் கேட்கிறார்.

குழந்தை அடிபட்டுக் குருதி கொட்டிக் கொண்டிருக்கிறது.

அதிகமாகப் போனால் அரை மணி நேரப் பயணம். போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்ததும் எல்லாருமே இறங்க வேண்டியவர்கள்தான். உட்கார்ந்து போவதால் மட்டும் உடம்பு ஒரு சுற்று பருத்து விடப் போவதில்லை. இன்னொருவருக்காக இடம் கொடுக்கிறபோது கிடைக்கிற மகிழ்ச்சிக்கு ஈடு கிடையாது.

இயலாதவர்களுக்காக விட்டுக் கொடுக்க இதயம் வரவில்லை என்றால் 'மனிதர்கள்' என்ற வார்த்தைக்கே மரியாதை வராது.

உங்களுக்குச் சரியாக மாலை நாலரை மணிக்குக் கலெக்டர் அப்பாயின்ட்மெண்ட் கொடுத்திருக்கிறார். நீங்கள் நாலேகால் மணிக்கே என் அறைக்கு வந்து விடுங்கள்' என்று சொல்லியிருந்தார் பெரியார் மாவட்டக் கலெக்டர் அருண் ராமநாதனின் தனி உதவியாளர் ராமநாதன். நாங்களும் சரியாக நாலேகால் மணிக்கு உதவியாளர் அறைக்குச் சென்றதும் அவர் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு. ''பங்க்ச்வாலிட்டி'யை அருமையாகக்கடைபிடிக்கிறீர்களே!'' என்று வியந்தார் (அதில் என்ன வியப்போ?) பிறகு துணை மக்கள் தொடர்பு அதிகாரியான தில்லை கோவிந்தனை இண்டர்காமில் வரச் சொன்னார்.

எங்கள் அறையில் நுழைந்த தில்லை கோவிந்தன் கைகளில் மதுரை மாவட்டம் பற்றிச் செய்திகள் வந்திருந்த இரண்டு கல்கி இதழ்களும் இருந்தன. அப்போதுதான் அவற்றைப் படித்து முடித்த அவசரம் அவரிடம் காணப்பட்டது. அறிமுகம் முடிந்ததும் தில்லை கோவிந்தன், "எங்கள் கலெக்டரிடம் என்னென்ன கேள்விகள் சார் கேட்கப் போகிறீர்கள்? மதுரை கலெக்டர் மாதிரி எங்கள் கலெக்டரால் காண்ட்ரோவர்ஸியலான (அப்படியென்ன காண்ட்ரோவர்ஸியோ!) கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது. கொஞ்சம் பார்த்துக் கேளுங்க சார்!'' என்று 'அறிவுரை' வழங்கினார். பிறகு அந்தக் கல்கி இதழ்களோடு கலெக்டரின் அறைக்குள் சென்றுவிட்டார்.

அவர் சென்று கால் மணி நேரம் கழித்து—

“குறைகளா? அதை மக்கள்தான் சொல்ல வேண்டும்; நீங்களல்ல!



அதாவது நாலே முக்கால மணிக்கு எங்களைக் கலெக்டரிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தார் உதவியாளர் ராமநாதன். பிறகு நாங்கள் உட்கார்ந்ததும் உட்காராததுமாகக் கலெக்டர் அருண் ராமநாதன், "உங்களுடைய பத்திரிகை எப்படிப்பட்ட பத்திரிகை? நீங்கள் என்னிடம் என்ன கேட்க வந்திருக்கிறீர்கள்?" என்று எங்களைக் கேட்டு, அவரே பேட்டியைத் துவக்கினர்.

கல்கி: உங்களுக்கு ஏற்கெனவே எங்கள் அலுவலகத்திலிருந்து கடிதம் அனுப்பியிருக்கிறோம். அதன்படி, நாங்கள் உங்கள் பெரியார் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுப் பயணம் செய்து மக்களுடைய குறைகளைக் கேட்டும் பார்த்தும் வந்தோம். அவற்றையெல்லாம்தான் உங்களிடம் கூறப் போகிறோம். அதற்கான பதில்களை உங்களிடமிருந்து பெற்றுப் பிரசுரிக்கப் போகிறோம்.

கலெக்டர்: மக்களுடைய குறைகளை நீங்கள் எதற்காக என்னிடம் வந்து கூற வேண்டும்? அதை மக்களல்லவா வந்து கூற வேண்டும்? அதற்காகவே 'மனு நீதி நாள்' என்று தனியாக ஒரு நாளையே ஒதுக்கியிருக்கிறோமே!

கல்கி: இருக்கலாம். அப்படியும் பிரச்னை தீராமல்தானே எங்களுக்கு எழுதியிருக்கிறார்கள்! அதனால்தான் வந்திருக்கிறோம்.

கலெக்டர்: சரி, கூறுங்கள். கேட்டுக்கொள்கிறேன். ஆனல் பதில் சொல்ல மாட்டேன்.

கல்கி: ஈரோட்டில் ஸ்டேடியம் கட்டுவதற்காக இருபத்து நான்கு லட்ச ரூபாய் வசூல் செய்யப்பட்டு நான்காண்டுகள் ஆன பிறகும் — எம்.ஜி. ஆர். அடிக்கல் நாட்டிய பிறகும் இன்னும் அதன் வேலை துவங்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

கலெக்டர்: அதற்கான மொத்த மதிப்பீடு எண்பத்து நான்கு லட்சம். இன்னும் அறுபது லட்சம் தேவை. அது இல்லாமல் எப்படி வேலை துவங்கும்?

கல்கி: சரி, வேலை துவங்காமல் இருக்கட்டும். ஆனல் வசூலிக்கப்பட்ட இருபத்து நான்கு லட்சங்களையும் கடந்த நான்காண்டு காலமாக கரண்ட் அக்கௌண்ட்டிலேயே வைத்திருப்பதால் ஏராளமான வட்டி நஷ்டமடைகிறதே..... அதற்கு என்ன காரணம்?

கலெக்டர்: இதையெல்லாம் நீங்கள் கேட்கக் கூடாது. வேண்டுமானல் பணம் கொடுத்தவர்கள்தான் கேட்க வேண்டும். அடுத்த கேள்விக்கு வாருங்கள்.

கல்கி: காவிரியாற்றில் சாராயத் தொழிற்சாலை, சர்க்கரைத் தொழிற்சாலைகள், டெக்ஸ்டைல்ஸ் போன்றவற்றின் கழிவு நீர் கலப்பதால் காவிரியே அசுத்தமடைந்துவிட்டதே?

கலெக்டர்: உண்மைதான். இதை மட்டும் நான் பூரணமாக ஒப்புக் கொள்கிறேன்.

கல்கி: காவிரியைச் சுத்தப்படுத்தும் முயற்சி ஏதாவது நடக்கிறதா?

கலெக்டர்: நடந்து கொண்டுதான் இருக்கிறது.

கல்கி: எந்த அளவுக்கு?

கலெக்டர்: உடனடியாகச் செய்துவிட முடியுமா? கொஞ்சம் கொஞ்சமாகத்தான் செய்ய முடியும்.

கல்கி: வீட்டு வசதி வாரியத்தைப் பற்றிக் குறை சொல்லாத இடமே இல்லை. ஈரோட்டிலும் அப்படித்தான். பள்ளிக்கென்று முன்பு ஒதுக்கிய இடத்தை இப்போது தர மறுக்கிறதாம்?

கலெக்டர்: அதற்கு நான் என்ன செய்ய முடியும்? வீட்டு வசதி வாரியத்திடம்தான் நீங்கள் கேட்க வேண்டும்.

கல்கி: ஆட்டோ கொள்ளைக்கு என்ன நடவடிக்கை?

கலெக்டர்: எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

கல்கி: சேலத்துக்கு அடுத்தபடியாக ஈரோட்டில்தான் அதிகமான விபசாரம் நடப்பதாகச் சொல்கிறார்களே?

கலெக்டர்: விபசாரம் இருப்பது உண்மைதான். நாங்களும் அடிக்கடி ரெய்டுகள் நடத்திக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனல் மனிதர்கள் இருக்கும்வரை விபசாரத்தை ஒழித்துவிட முடியுமா என்ன? ஆனலும் குறைக்க முயலுகிறோம்.

கல்கி: ஒரு காலத்தில் இந்தியாவிலேயே ஈரோடு முனிசிபாலிட்டிதான் பணக்கார முனிசிபாலிட்டியாக இருந்ததாகவும் ஆனல் இப்போது அதில் பணமே இல்லையென்றும் சொல்லிக் கொள்கிறார்களே?

கலெக்டர்: நீங்கள் பத்திரிகையாளரா? இல்லை ஆடிட்டரா?

கல்கி: இப்போது ஈரோடு முனிசிபல் சேர்மனகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அரங்கராசனே முனிசிபாலிட்டியில் பணமில்லை, அதற்கு அதிகாரிகளின் தவருன போக்குகள்தான் காரணம் என்று எங்களிடமே சொல்லியிருக்கிறார். அவை எங்கே போனது? உங்களுக்குத் தெரியாதா?

கலெக்டர்: வேண்டுமானல் கணக்குகளைக் காட்டச் சொல்கிறேன். பார்த்துக் கொள்ளுங்கள்.

கல்கி: நடக்காத வேலைகளையெல்லாம் நடந்ததாகக் கணக்கு எழுதியிருப்பதாகச் சொல்லிக் கொண்டார்கள். அதனல்தான் கேட்கிறோம்.

கலெக்டர்: கணக்குகளைக் காட்டச் சொச

—'மூட் அவுட்' ஆன கலெக்டருடன் பேட்டி

கிறேன். பார்த்த பிறகு பேசுங்கள். அடுத்த கேள்வி?

கல்கி: ஈரோட்டிலுள்ள உடல் ஊனமுற்றோருக்கான பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுபவர்கள் பாதியிலேயே பயிற்சியை விட்டு விடுகிறார்களாம். காரணம் பஸ் கட்டணம் கொடுக்க வசதியில்லாததால் வெளியூர் ஏழைகளுக்கு இந்த நிலை ஏற்படுகிறதாம். ஜீவா போக்குவரத்துப் பஸ்களில் அவர்களுக்கு இலவசப் பயணத்துக்கு ஏற்பாடு செய்தால் உதவியாய் இருக்கும்.

கலெக்டர்: (குறித்துக் கொண்டு) கவனிக்கிறேன். அடுத்த விஷயம்?

கல்கி: பவானிசாகர் அணை கட்டப்பட்டபோது பாதிக்கப்பட்ட மக்களுக்கு பசுவபாளையத்தில் வீட்டு மனைகள் ஒதுக்கப்பட்டபோது, அங்கு சுமார் ஒன்றரை ஏக்கர் காலியிடத்தை கோயில், லைப்ரரி போன்றவற்றுக்காக ஒதுக்கப்பட்டதாம். ஆனால் இப்போது அதை வசதிமிக்கவர்கள் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறார்களாம்....

கலெக்டர்: (குறித்துக் கொள்கிறார்) அடுத்த கேள்வி?

கல்கி: பவானி போகும் வழியிலுள்ள பெரியவலசு என்றஇடத்தில்பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான வாய்க்கால் மேடு என்ற இடத்தை இப்போது ஆளுங் கட்சியினர் விற்றுவிட்டதாகச் சொல்கிறார்களே?

கலெக்டர்: அது எங்கே இருக்கிறது? (நாம் விளக்கிச் சொன்ன பிறகு குறித்துக் கொள்கிறார்.)

கலெக்டர்: வெள்ள கோவிலில் 'ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட'த்தின் கீழ் டைப்ரைட்டிங் பயிற்சி பெற்ற முப்பத்தொன்பது மாணவர்களுக்கான மூன்று மாத உதவித்தொகை கடந்த நான்காண்டுகளாகக் கொடுக்கப்படவில்லையாமே?

கலெக்டர்: (குறித்துக் கொள்கிறார்)

கல்கி: கொடுமுடியில் கடந்த ஆண்டு பட்டப் பகலில் நடந்த ஒரு கொலை இன்னமும் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கிறது. போலீஸார் கொலை நடந்த அடுத்த நாள்தான் அந்த இடத்துக்கே சென்றிருக்கிறார்கள். போலீஸாரைக் கேட்டால் எங்களுக்கு மோட்டார் சைக்கிள் வசதியைக் கூட அரசு செய்யாதபோது, நாங்கள் எப்படி விரைவாகச் செயல்பட முடியும் என்கிறார்கள்? இதையெல்லாம் நீங்கள் அரசுக்கு எடுத்துச் சொல்லக் கூடாதா?

கலெக்டர்: (குறித்துக் கொண்டு) நான் சொல்லவில்லை என்று எப்படிச் சொல்கிறீர்கள்?

கல்கி: சொல்லியிருந்தால் சரி. அடுத்ததாக சென்னிமலை அருகிலுள்ள அம்மாபேட்டையில் போடப்பட்டுள்ள பொதுக் குழாயில் வரும் தண்ணீரைக் குடித்தால் வயிற்றுப் போக்கு, தோல் தொடர்பான வியாதிகள் போன்றவை வருவதாகச் சொல்கிறார்கள். குழாய் மூலம் வரும் ஆற்று நீரும் தங்கள் இடத்துக்கு வந்து சேர்வதில்லை. காரணம்சென்னிமலையிலுள்ள 'சென்டக்ஸ்' நிறுவனத்தினர் துணிகளுக்குச் சாயம் போடும் உபயோகத்திற்காக மோட்டார் வைத்துக் குடி நீரை எடுத்துக் கொண்டிருப்பதுதான் என்கிறார்கள்?

கலெக்டர்: (குறித்துக் கொள்கிறார்)

கல்கி: சில கிராமங்களிலுள்ள அடிகுழாய்களில் தண்ணீரே வருவதில்லை. சில குழாய்களில் தண்ணீர் இருந்தும் குழாய்கள் ரிப்பேராக இருப்பதால் உபயோகப்படுத்த முடிவதில்லை என்கிறார்கள்.

கலெக்டர்: தண்ணீரே இல்லாவிட்டால்

ஒரு கும்பகர்ணத் திட்டம்

14 வருடங்களாக ஒரு திட்டம் தூங்கிக் கொண்டிருக்கிறது. இது என்ன பிரமாதம்? குறட்டையிலே 'செஞ்சுரி' போட்ட திட்டங்கள் எல்லாம் உண்டு என்கிறீர்களா? இருக்கட்டும். இந்த பதினெட்டாண்டு பழைய திட்டத்தைப் பார்ப்போம்.

என்.கே.கே. பெரியசாமி (தி.மு.க.) என்பவர் கவுந்தம்பாடி பஞ்சாயத்துத் தலைவராக இருந்தபோது ஆறு லட்சம் ரூபாய்ச் செலவில் பெருந்தலையூர் பவானி ஆற்றிலிருந்து கவுந்தப்பாடி நகருக்குக் குடி தண்ணீர் கொண்டு வரும் திட்டம் ஒன்று போட்டார். அதோடு சரி; அவர் பதவியை விட்டுப் போன பின்பு திட்டமும் கிடப்பில் போடப்பட்டது. அப்புறம்தான் பஞ்சாயத்தும் இல்லையே!

இப்போது பஞ்சாயத்துத் தலைவராகியுள்ள காடுவெட்டி கண்ணப்பன் (அ.தி.மு.க.) கவுந்தப்பாடியைச் சேர்ந்தவர்தான். ''கிடப்பில் போடப்பட்டுள்ள இந்தத் திட்டத்தை எடுத்து நிறைவேற்றிக் காட்டுவேன்'' என்று சொல்லித்தான் தேர்தலில் நின்று வெற்றி பெற்றிருக்கிறார். எல்லா நகராட்சிகளும், பஞ்சாயத்துக்களும்திவாலாகி இருப்பதைப்போலத்தான் கவுந்தப்பாடி பஞ்சாயத்தும் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் காடுவெட்டி கண்ணப்பன் சொன்னதைசெய்துகாட்டுவாரா? குடி தண்ணீருக்கு அல்லல் பட்டுக் கொண்டிருக்கும் கவுந்தப்பாடி மக்கள், இதற்கான பதிலை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

— நமது நிருபர்

“பெரியார் மாவட்டமா? அது எங்கே?”

கடந்த பிப்ரவரி பதினைந்தாம் தேதியன்று சென்னை, மவுண்ட் ரோடு தலைமை தபால் தந்தி அலுவலகத்தில் தந்தி ஒன்று கொடுக்கச் சென்றேன். ஃபாரத்தைப் பூர்த்தி செய்து கவுண்டரில் கொடுத்தேன். அதனைப் பெற்றுக் கொண்ட சிப்பந்தி, விலாசம் சரியாக எழுதப்படவில்லை என்று கூறி அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டார். மீண்டும் படித்துப் பார்த்தேன். விலாசம், மிகச் சரியாகவே இருந்தது. சிப்பந்தியிடம் விளக்கம் கேட்டபோது 'சத்தியமங்கலம், பெரியார் மாவட்டம்' என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றார். பெரியார் மாவட்டம் என்றே ஒன்று இடையாது என்று ஒரே போடாகப் போட்டுவிட்டார்! கோவை மாவட்டம் என்று மாற்றி எழுதித் தந்தால்தான் தந்தியை அனுப்ப முடியும் என்றார்.

1978 லேயே பெரியார் மாவட்டம் பிரிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி வாதாடினேன். அந்தச் சிப்பந்தி மசியவில்லை. மேலதிகாரிகளை அணுக முயன்றும் பயனில்லை. தந்தி அனுப்பும் அலுவலர் அருகே அமர்ந்திருந்த சில அதிகாரிகளிடம் முறையிட்டேன். முக்கால் மணி நேரம் வாதாடிய பிறகு தந்தியில் விலாசத்தை மாற்றாமல் அனுப்ப ஒப்புக் கொண்டார்கள். ஆனால் தந்தி போய்ச் சேராவிட்டால் அதற்குத் தாங்கள் பொறுப்பு ஏற்க முடியாது என்றும் அடித்துச் சொல்லிவிட்டார்கள்!

— பி. வேலுசாமி.

யார்தான் என்ன செய்யமுடியும்? ஆனால் பெரியார் மாவட்டத்திலுள்ள 2472 அடி குழாய்களில் இரண்டே இரண்டு சதவிகிதம் தான் ரிப்பேரில் இருக்கின்றன. அவற்றைத் தான் நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

கல்கி: கோபி அருகிலுள்ள குண்டடம் என்னுமிடத்திலுள்ள குழாயில் ஒன்பதாண்டுகளாகத் தண்ணீரே வரவில்லை என்கிறார்கள்.

கலெக்டர்: நான்தான் முன்பே சொன்னேனே, இரண்டே இரண்டு சதவீதம்தான் ரிப்பேர் என்று. அடுத்த கேள்விக்கு வாருங்கள்.

கல்கி: வரட்டுப்பள்ளம் அணைக்கட்டால் பல கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு நேரடிப் பாசன வசதி இல்லாவிட்டாலும் 72ல் கொடுக்கப்பட்ட கலெக்டரின் வாக்குறுதிப்படி ஏற்கெனவே நிரம்பிக் கொண்டிருந்த குட்டைகளுக்காவது தண்ணீர் விட்டால் கிணறுகளில் தண்ணீர் ஊறும். வறட்சி இருக்காது. அதோடு அந்த அணைக் கட்டுக்குப் பின்னாலுள்ள மலையில் சுமார் எண்பதடி உயரத்தில் ஓடும் மணியாச்சி ஆறை இந்த மலை வழியாகக் குடைந்து கொண்டு வந்தால் நீர் மின்சாரமும் தயாரிக்க வாய்ப்புண்டு என்கிறார்களே?

கலெக்டர்: சேது சமுத்திரம் திட்டம் போல்தான் அதுவும்....

கல்கி: குடும்பப்பாளையம் என்ற ஊரில் மாஜி இராணுவத்தினருக்காக 73ல் ஒதுக்கப்பட்ட நிலத்தை இப்போது அவர்கள் சாகுபடி செய்து கொண்டிருந்தும் சாகுபடி இல்லை என்று கூறி வெளியாளர்களுக்கு மாற்றும் முயற்சி நடப்பதாக அவர்கள் புகார் சொல்கிறார்களே?

கலெக்டர்: (குறித்துக் கொள்கிறார்)

கல்கி: செல்லிய கவுண்டனூர் என்னும் கிராமத்திலுள்ள தொண்ணூற்றைந்து ஹரிஜனக் குடும்பங்களில் தொண்ணூற்று நான்கு குடும்பங்கள் கடன்பட்டு கொத்தடிமைகளாகத்தான் இருக்கிறார்கள். வேறு பல கிராமங்களிலுள்ள ஹரிஜனங்களும் இப்படித்தான் இருப்பார்களோ என்று ஐயப்படுகிறோம். அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டாமா?

கலெக்டர்: (மௌனம்)

கல்கி: அப்புச்சிமார் கோயில் என்ற கோயிலின் கதவுக்குப் பின்னால் திரைச் சீலைகள் தொங்குகிறது. அதற்குப் பின்னால் என்ன இருக்கிறது? சாமி எந்த வடிவத்தில் இருக்கிறது? என்பது யாருக்குமே தெரியவில்லை. அதாவது பல்லாண்டு பல்லாண்டு காலமாக அந்தத் திரைச் சீலைகள் விலக்கப்பட்டதே இல்லையாம். அப்படியொரு மர்மம். ஆனாலும் அந்தத் திரைச் சீலைகள் அத்தனையொன்றும் பழசானதல்ல என்பதைக் கதவிடுக்கின் வழியாகப் பார்த்துத் தெரிந்து கொண்டோம். அது என்ன மர்மம்? ஏனெனில் புனிதமானது எதையும் மூடி மறைக்கத் தேவையில்லை. எனவே அதை நீங்கள் புலனாய்வு செய்து மர்மத்தை நீக்க வேண்டும்.

கலெக்டர்: அப்படியிருந்தால் மக்களுக்கு ஒரு 'த்ரில்' இருக்குமே! அதற்காகத்தான் அப்படியிருக்கிறதோ என்னவோ!

— இப்படிக் கடந்த கல்கி இதழிலும் இந்த இதழிலும் பிரசுரிக்கப்பட்ட பிரச்னைகள் உள்பட பிரசுரிக்க இயலாமல் போன பல்வேறு பிரச்னைகளைப் பற்றியும், அவரிடம் எடுத்துச் சொன்னோம். ஆனால், கலெக்டரும் கூட இருந்த அவருடைய உதவியாளர், துணை மக்கள் தொடர்பு அதிகாரி ஆகியோரும் சில விஷயங்களை மட்டுமே குறித்துக் கொண்டார்கள். அது பற்றிக் கலெக்டரிடம் கேட்டபோது, "எனக்கு முக்கியமானது என்று தோன்றியதை மட்டும் குறித்துக் கொண்டேன். நல்லது போய் வாருங்கள்!" என்று விடை கொடுத்து அனுப்பிவிட்டார்.

கடைசி வரை நமது புகைப்படக்காரரை ஓர் எதிரியைப் போல்தான் பார்த்துக் கொண்டிருந்தார் கலெக்டர். இருந்தாலும் நமது போட்டோகிராபர் அவரைப் படமெடுத்து விட்டார்! அந்தப் படம்தான் இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஹாலி சுப லாலி!



ஜே. எஸ். ராகவன்

(நட்சத்திரா அபார்ட்மெண்ட்ஸின் இரண்டாவது மாடி பிளாட்டில் 'ஒளியும் ஒலியும்' முடிந்த கையோடு சாப்பிட உட்காருகின்றனர்.)

ராஜா: அம்மா, கார்த்தாலே நாலு மணிக்கு எழுந்துக்கணும். அலாரம் இல்லியே. நீ எழுப்பிடு.


பார்வதம்: எதுக்குடா நாலு மணிக்கு?

ராஜா: ஹாலியைப் பார்க்கணும்.

பார்வதம்: அது எவடா ஹாலியும், லாலியும்? விடியற்காலேலே வந்து நிக்கப் போறு?

சபேசன்: (முருங்கைக் காயைச் சாப்பிட்டுக் கொண்டே) ஞானசூன்யம்! ஹாலிங்கிறது வால் நட்சத்திரம். எழுபத்தி ஆறு வருஷத்துக்கு ஒரு தடவைதான் வரும். அதை உன் பிள்ளை மொட்டை மாடியிலே போய்ப் பார்க்கத்தான் எழுப்பச் சொல்றான்.

பார்வதம் (சலிப்புடன்): நான் என்னத்தைக் கண்டேன்? சொன்னாத்தானே தெரியும். ஆமா, வால் நட்சத்திரம் வந்தால் ஏதோ ஆபத்து நடக்கும்னு எங்க அப்பா சொல்வாரே.....?



சபேசன்: சரியாகத்தான் சொன்னார். ஹாலி போன தடவை வந்தபோதுதான் உங்கப்பா பிறந்திருக்கணும்!

பார்வதம்: ஹூம். எங்கப்பாவைக் கரிச்சுக் கொட்டாட்டா உங்களுக்குப் பொழுது போகாதே..... ஆமா, வால் நட்சத்திரம் வந்தா ராஜாக்களுக்கு ஆபத்து இல்லையோ?

சபேசன்: பயப்படாதே. உன் பிள்ளை ராஜாவுக்கு ஒரு ஆபத்தும் வராது. அதுக்கு இருக்கிற வாலைவிட இவனுக்குப் பெரிய வால்!

(டி.வி.யில் 'யே ஜோ ஹை ஜிந்தகி' ஆரம்பிக்கும் சத்தம் கேட்டுச் சாப்பாட்டை அவசரமாக முடிக்கின்றனர்.) **2**

(முதல் மாடி பிளாட்டில் ராணியும், சுந்தரேசனும் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர். சுந்தரேசனின் மனைவி பார்வதம் பரிமாறிக் கொண்டு இருக்கிறாள்.)

பார்வதம்: ராணி, இன்னும் ரெண்டு இட்லி போடட்டுமா?

ராணி: வேண்டாம்மா, வயறு ஃபுல். பம்முனு இருக்கு.

சுந்தரேசன்: இப்படி சாப்பிட்டா எப்படி? நம்ப குல வழக்கப்படி நன்னா சாப்பிட வேண்டாமா? எங்கப்பா இட்லி சாப்பிட உட்கார்ந்தார்னா நாலு ஈடு வெட்டுவார். அவருக்கு எப்பவுமே ஈடு கணக்குத்தான். ஒவ்வொரு ஈட்டுக்கும் ஏழு இட்லின்னா மொத்தக் கணக்குப் பார்த்துக்கோ! கடைசி ஈடுக்கு எருமைத் தயிர் இருக்கணும்.

பார்வதம்: போறும் அழகுதான். சுத்த சாப்பாட்டு ராமக் குடும்பம். பொண்ணுக்குக் கல்யாணம் பண்றதைப் பத்தி யோசிக்காம, இட்லி வீரர், தோசை சாம்பியனைப் பத்தி என்ன பேச்சு வேண்டியிருக்கு. நம்ம அபார்ட்மெண்ட்லே கூட ராஜான்னு ஒரு பையன்.....

சுந்த: யாரு வெடவெடன்னு இருக்கும் ஒல்லிப் பயதானே. சுத்த வயத்து வலி. அவனை எனக்குக் கட்டோடு பிடிக்கலே.

பார்வதம்: ஏன், அவனுக்கு என்ன குறைச்சலாம். நல்ல வேலை. கண்ணுக்கு லட்சணமாய் இருக்கான். இண்டக்சுக்கி வேறே வெச்சிருக்கான். அவா கூட நமக்குத் தூரத்து....

சுந்த: (கோபத்துடன்) சர்தாண்டி நிறுத்து.

(சுந்தரேசன் முறைக்கப் பார்வதம் உள்ளே போகிறாள்.) **3**

(அபார்ட்மெண்ட் பக்கத்தில் இருக்கும் 'அம்புலி அப்பளாம் டிப்போ'வில் நுழைந்த ராஜா, அங்கே ராணியைப் பார்த்துச் சிலிர்த்து நிற்கிறான்.)

ராஜா: ஹாய் ராணி! என்ன ஹெவி பர்சேஸா?

ராணி: (பெருமூச்சுடன்) ஆமாம். சீடை, முறுக்கு, அப்பளாம், அதிரசம் அப்புறம் சிப்ஸ்.

ராஜா: என்ன விருந்தினர் யாராவது வரப் போறாங்களா?

ராணி: நோ ராஜா. சொல்லவே வெக்கமா இருக்கு. எங்கப்பாவுக்கு இன்னிக்கு லீவு இல்லியா. அவர் கொரிக்கத்தான்.

ராஜா: என் இன்டிரஸ்ட் வயத்துக்கு மேலே — ஆகாசத்திலே நட்சத்திரம், கிரகம் அப்படி. அண்ட சராசரங்கள் எல்லாம் எப்படி ஒரு நியதியோடு இயங்கிண்டு இருக்கு தெரியுமா? இந்த ஹாலியை எடுத்துக்கோ...

ராணி: ராஜா, நீ வால் நட்சத்திரம் பார்த்திண்டு இருக்கே. எங்கப்பா என்னோட கல்யாணத்துக்கு நாள் நட்சத்திரம் பாக்க ஆரம்பிச்சுட்டா!

ராஜா: என்ன ராணி? என்ன சொல்றே நீ? உங்கப்பா அப்பளாக் கட்டை கீழே போட்டுட்டு ஜாதகக் கட்டை எடுக்க ஆரம்பிச்சுட்டாரா?

ராணி: அப்புறமா சொல்றேன். இன்னிக்கு எங்கம்மா அப்பாவுக்காக வடாம் பிழியறா. அப்பா மாவாகவே பாதியைத் தின்னுடுவார். அப்புறம் பார்க்கலாம், பை!

(விடியற்காலை நாலு மணிக்கு மொட்டை மாடியில் ராஜா பைனாகுலர் சகிதம் கிழக்கு திக்கை நோக்கி நின்று கொண்டு இருக்கிறான்.)

ராஜா: சரியா தெரியலியே. எழுபத்தி ஆறு வருஷத்துக்கு ஒரு தடவை வர்ற ஹாலி கொஞ்சம் பிரகாசமா தெரியக்கூடாதா?

ராணி (ரகசியக் குரலில்): ஹாலி நட்சத்திரம் தெரியாட்டா பரவாயில்லே. உன்னோட ஜாலி நிலா வந்திருக்கேன், ராஜா!

ராஜா: ஆ! ராணி, மை டியர் ராணி. நீ எங்கே இப்படி இருட்டிலே.....

ராணி: (பெருமூச்சுவிட்டு) எல்லாம் இங்கே உலர்த்தியிருக்கிற வடா•த்தினாலே தான். நேத்தி 'வடாம் உலர்த்தியிருக்கேன், சாயந்திரமா எடுத்து வைன்னு சொல்லிட்டு எங்கம்மா மைலாப்பூருக்குப் போனா. நான் மறந்தே போயிட்டேன். திடீர்னு கொஞ்ச நாழிக்கு முன்னாலே ஞாபகம் வந்தது. அப்பாவுக்குத் தெரிஞ்சா ருத்ர தாண்டவம் ஆடுவார். அதான் எடுத்துண்டு போக வந்தேன். ஐயோ யாரோ வர சத்தம் கேக்கிறதே (சட்டென்று வாட்டர் டாங்க் பின்னால் ஒளிந்து கொள்கிறாள்.)

சுந்தரேசன்: அட யாருடா அது! திருடன், திருடன் வடாத்தைத் திருட வந்த திருடன். பிடி, பிடி, அடி உதை....

ராஜா: சார்! சார்! நான் திருடன் இல்லே. ராஜா, செகண்ட் ஃப்ளோர் ராஜா. ராத்திரி பூரா உங்க வீட்டு வடாத்திற்குக் காவலா நிக்கறேன். பாவம் ராணி எடுத்து வைக்க மறந்துட்டா. ராத்திரி ரெண்டு தடவை உங்க பிளாட்டிலே பெல் அடிச்சுப் பார்த்தேன். யாரும் கதவைத் திறக்கலே. அதனாலே ராத்திரி பூரா உங்க வீட்டு வடாத்திற்கு செக்யூரிட்டியா நிக்கறேன் சார்!

சுந்த: (கண்களில் நீர் ததும்ப) ராஜா, ராஜா நீ..... நீ சொல்றது நிஜமா?

ராஜா: சத்தியமா சார். உங்க வீட்டுப் பொருளைப் பாதுகாக்கிறது என்னோட முதல் கடமை சார்.

சுந்த: தாங்க்ஸ் ராஜா. ரொம்ப தாங்க்ஸ். அது சரி, ஆமா, அது என்னப்பா கையிலே பைனாகுலரா.... அது எதுக்கு.....

ராஜா: அது..... அது.... சார் அது வந்து...

(வாட்டர் டாங்க் பின்னாலிலிருந்து 'கா கா' என்று குரல் கேட்கிறது.)

ராஜா: ஆ! காக்கா! காக்கா சார். வடாங்களின் பிறவி எதிரிகளான காக்காக்களைத் தூரத்திலேயே பார்த்து இனங்கண்டு விரட்டத் தான்.

சுந்த: (உணர்ச்சிப் பெருக்குடன்) ராஜா! நீதான் இனிமேல் எனக்கு எல்லாம். ஆகா! உன்னைப் பத்தி தப்பா நினைச்சுட்டேன். உங்கப்பாவை இன்னிக்குச் சாப்பாடு முடிஞ்சவுடன் வந்து பார்க்கிறேன். நான் இப்போ அவசரமா ஹோட்டல் வனதுர்காவுக்குப் போகணும். கார்த்தாலே பொங்கல் சட்னி பிரமாதமா இருக்கும். (போகிறார்)

ராஜா: மிஸ் காக்கா, இங்கே வறியா, ஹாலியை ஜாலியா, ஜோடியா பார்க்கலாம்.

ராணி: பார்க்கலாம். பார்க்கலாம். அது சரி வேற ஏதோ சொல்றாங்களே, ஆ! அருந்ததி அது எங்கே இருக்கு. சேர்ந்து பார்க்கலாமா, ராஜா?



விடுதலை

ரொம்ப நாளைக்கு முந்தைய சுறுசுறுப் போடு ரஜினிகாந்த். கொஞ்சம் காமெடி, கொஞ்சம் மிடுக்கு என்று மின்னலடிக்கும் சிவாஜி. டான்ஸுக்கும், நீச்சல் ஸீனுக்கும் தைரிய உடைகளுடன் மாதவி. கொஞ்சம் ஒரிஜினல் ஹிந்தியிலிருந்து, கொஞ்சம் சுயமாய் என்று விறுவிறுப்பான மியூஸிக் தர சந்திரபோஸ். ஆனை அசத்தும் செட்டிங்ஸ். ஆங்கிலப் படங்களில் மட்டுமே பார்த்திருந்த அதே சுறுசுறுப்புடன் ஒரு நீள மான கார் சேஸ். துறுதுறுப்பிற்கு பேபி ஷாலினி......

அட்டகாசமான காம்பினேஷன்.

பாலாஜிக்கு சின்ன ரோல், படத்தில். பெரிய ரோல் தயாரிப்பில்.

'நான் திருடன், கொள்ளையடிக்கிறவன் என்றுமாதவியிடம்ரஜினிசொல்ல,செல்லக் கோபத்துடன் அவர் நம்ப மறுக்க, சாவி தொலைந்து போன அவர் வீட்டுப் பூட்டையே ரஜினி நிமிஷமாய்த் திறந்து காட்டும் இடம் சுவாரஸ்யமானது. பின்னால் அந்தக் காதலுக்கு அதிக அழுத்தம் விழாமலே போவது வருத்தம்தான்.

நீலக் கண்களோடு அனுராதா, ரோஷமான அவர் அண்ணன் விஜயகுமார், தாயில்லாக் குழந்தையின் அப்பா விஷ்ணுவர்த்தன் என்று தனித் தனி டிராக்குகள். ஒரு மசாலாப் படத்திற்கு இத்தனை சுவையான கதையமைப்பா என்று ஆச்சரியமாயிருக்கிறது. (ஹிந்திக்கு மூலக்கதை எழுதியவர்களுக்குத் தனி பாராட்டுக்கள்.)

கட்டபொம்மன் கூத்து நகைச்சுவைக்கு நகைச்சுவை; சிவாஜியின் பழைய வசனங்களுக்கு மறு வாய்ப்பு.

படாடோபத்திற்காகவென்றே கதை திமரென்று அமெரிக்காவிற்கு அழைத்துப் போனாலும்,

கொஞ்சம் வித்தியாசமான மசாலாவை ஜிகினா தூவி, நிறைய முந்திரி சேர்த்து, பொன் தட்டில் பரிமாறியிருக்கிறார்கள்.





வீடு வாடகைக்குக் கிடைத்தால் போதுமென்று பிரம்மச்சாரி, கல்யாணமானவன் என்று புளுக, 'எங்கே உன் பெண்டாட்டி, ஃபோட்டோ?' என்று வாடகைக்கு விட்ட வீட்டுக்காரி கேட்க, 'இதோ இது தான்' என்று ஸ்டுடியோவில் பொறுக்கிய ஒரு பெண் படத்தைக் காண்பிக்க, அதே பெண் பெட்டி சகிதம்

கடைக்கண் பார்வை

கர்நாடகசங்கீதத்தையும், ஆர்மோனியப்பெட்டியையும் தூக்கிக் கொண்டு காடு, மலைச்சாரல், கிராமம் என்று பசேல் பின்னணியில் சுய சாதகம் பண்ணிக் கொண்டிருந்துவிட்டு, நகரத்திலிருந்து வரும் பெண்ணால் ஊக்குவிக்கப்படும் வழக்கமான ரோல், பாண்டியனுக்கு. இறுக்கமான முகபாவங்களிலிருந்து அவருக்கு இன்னும் விடுதலை கிடைக்காதது ஐயோ பாவம்.

இளவரசி சுட்டிக்குப் பாட வந்த இடத்தில் பாண்டியனைச் சந்தித்து, மெட்டுக்கு வார்த்தை கொடுத்து, இரண்டாம் நாளே இதயத்தைக் கொடுத்து, மூன்றும் நாளே ஊர் திரும்பி விடுகிறார். ஸ்கூல் பெண்ணுக்குக் காதலா என்று கோபம் வருகிறது. அதற்கேற்றாற்போல் காதல் விவகாரம் கடைசி வரை ஒரே குழந்தைத் தனமாய் இருக்கிறது. காதல், பிரிவின் வேதனை இதற்கெல்லாம் இன்னும் அழுத்தம் தேவை, டைரக்டர் ஸார்!

மாஸ்டர் டிங்குவும், சோமயாஜுலுவும் பங்கு கொள்ளும் அந்த சின்ன ஃப்ளாஷ் பேக் மட்டும் பெரிய ஆறுதல்!

சத்யராஜின் தங்கையாக வருபவருக்கு, பெரிய பெரிய கண்கள். நடிக்கச் சொல்லும்போது மட்டும் ஆள் அம்பேல்.

வி.எஸ். நரசிம்மனின் இசையில், கர்நாடக சங்கீதத்

கண்ணத் தொறக்கணும் சாமி

'உங்க பெண்டாட்டி வந்திருக்கேங்க' என்று வீட்டுக்குள்ளே நுழைய.....

வெகு சுவாரஸ்யமான முடிச்சு. எப்படி அவிழ்க்கப் போகிறார்கள், எப்படி அவிழ்க்கப் போகிறார்கள் என்று கடைசி வரை எதிர்பார்க்க வைத்துவிடுகிறார்கள். மூலக் கதைக்கு தாசரி நாராயண ராவ் காரு சொந்தக்காரர்.

.வசனம் பாக்யராஜா, ஹீரோ வேறு கொஞ்சம் கஞ்சூஸ் டைப்பா..... கேட்கவே வேண்டாம். இயல்பான நகைச்சுவை படம் முழுக்க.

சிவகுமார்தான் அசடு வழியும் ஹீரோ. நன்றாகவே வழிந்திருக்கிறார். ஹீரோவுக்கு தோழனாய் சோ. சோ என்றால் அரசியல் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். இதிலும் 'நெடி' இருக்கிறது. ஆனால் 'பொடி' இல்லை. ஸென்ஸார் அபேஸ் பண்ணிவிட்டார்கள்.

ஜீவிதா கதாநாயகி. கொடுத்த வேலையை செய்திருக்கிறார்.

டைரக்டர் கோவிந்தராஜ் பாக்யராஜின் சிஷ்யராம். ஒழுங்காகப் பாடம் படித்திருக்கிறார்.

இரண்டரை மணி 'நேரம் ஜாலியாய் பொழுது ஓடுகிறது!

இன் தவிர்க்க முடியாத இனிமை. 'ஏதோ ஒரு ராகம்' பாடல் நம்பர் ஒன்.

சத்யராஜை எப்படியாவது லிஸ்டில் சேர்த்துவிட்டு, சரியாய் பயன்படுத்தாமல் விரட்டுவது வாடிக்கையாகி விட்டது. என்னதான் உயிர்த் தியாகமென்றாலும், ஸ்லோ மோஷனில் அத்தனை படிகளிலும் மெல்...ல மெ...ல்ல உருண்டு வருவதற்குள் அவரவர்கள் பஸ் பிடிக்கக் கிளம்பிப் போய்விடுவார்கள் என்று ஏனோ மறந்துவிட்டார்கள்.





வாத்தியார் சுரேஷ். அவரை டாவு கட்டப் பார்க்கும் வனிதாவும் மோகனப் பிரியாவும். வீட்டை வாடகைக்கு விடுகிற போட்டியில் தொடங்கி, தாயத்து வாங்குகிற விவகாரத்தில் தொடர்ந்து கடைசியில் பூனைகள் அப்பத்திற்கு போட்டுக் கொண்ட சண்டையாய் விவகாரம் முடிய, 'சீச்சீ, இந்தப் பழம் புளிக்கும்' கேஸாய் ஸைடு வாங்குவது படத்தோடு ஒட்டாத சமாசாரம் என்றாலும் ரசிக்க முடிகிறது.

கண்ணியக்கார ஜெய்சங்கர் புகுந்து விளையாடுகிறார். சாப்பாட்டு கூடைக்காரி சுமித்ராவின் புருஷனுக்கு சொரணை வரவேண்டுமென்பதற்காக அவர் ஙெய் ஙெய் என்று 'ஙி' கொடுத்தாலுங்கூட அந்த புருஷன்காரன் இடிச்ச புளிக்கு எட்டு படி மேலே. சாப்பாடு, தூக்கம் தவிர வேறெதுவும் வேண்டியிராத சுகவாசி.

'வேறே ஒருத்தனோட போய்டுவேன்' என்று சுமித்ரா சொன்னதும், அந்த புருஷன்காரர். 'அப்பவும் சோத்துக்கு நான் ஒன் பின்னாலதான் வருவேன்' என்று பதில்உரைப்பதும் சுமித்ரா ஆவேசமாய் திரும்பி ஓடுவதும்—ஒன்றாகப் பார்க்கும்போது என்னவோ நடக்கப் போகிறது என்று பார்த்தால், ப்பூ.... பாட்டு. அந்த பாட்டு நன்றாக இருக்கிறது என்பதற்காக (அந்தப் பக்கம்) வேண்டாத இடத்தில் செருகிவிட்டார்களோ?

சுமித்ரா நன்றாகப் பண்ணியிருக்கிறார்.

அது சரி, சாப்பாட்டுக் கூடைக்காரியின் பாத்திரத்தை, தூக்கோ தூக்கென்று தூக்க வேண்டுமென்பதற்காக வேலை செய்ய விருப்பமில்லாத புருஷன், அவனை வேலை செய்ய வைக்கப் பார்க்கும் பெண்டாட்டி என்று ஆழமேயில்லாத விவகாரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமா என்ன?

அதுதான் போகட்டும். கடைசியில் எல்லாம் சுபமாய் முடிந்ததே என்று சந்தோஷப்பட்ட வேளையில் 'தொபுகடீர்' என்று சுமித்ரா காரெக்டரை ஏன் கொல்ல வேண்டும்? சந்தோஷமாய் முடித்திருந்தாலே திருப்தியுடன் எழுந்து வந்திருக்கலாம்.

இந்த முடிவு என்னவோ, பல்லிடுக்குப் பாக்கு போல நெருடிக் கொண்டே இருக்கிறது.

—ஜெயமன் மதன்

ஒரு மனிதன் ஒரு மனைவி



நம்பிக்கை கங்கை போல் என்.டி.ஆர்!

வட்ட மேஜை

தனிப்பாங்குதான்!

அன்று முதல் இன்றுவரையான ஆந்திரத்தின் அரசியல்நிலை, கலைப்பெருமை, பண்பாட்டுச்செழுமை, தொழில் வளமை ஆகியவற்றைப் படம் பிடித்துக் காட்டியதன் மூலம் சிறப்பிதழ்களை அளிப்பதில் கல்கிக்கே உரிய தனிப்பாங்கை நிலை நாட்டியுள்ளீர்கள்.

திருவையாறு. — குடந்தை முரளி.

ஒவ்வொரு பக்கத்திலும் அந்தத் தேவியின் கலைவழு கோடுகூடியபடத்தை ரொம்பவும்ரசித்தேன்; வித்தியாசமான சிறப்பிதழ்!

திருமருகல். — எம். பிரபாகரன்.

நம்பிக்கை கங்கை

நம்பிக்கைக் கங்கை போல் வார்த்தைகளை எடுத்துத்தரும் என்.டி. ஆர். கவர் ஸ்டோரியில் கவர்கிறார். நிதர்சனத்தில்.....? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

சென்னை–14. — எஸ். வாசுதேவன்.

'என்னதான் நன்மை பயக்கும் திட்டமாக இருந்தாலும் நிறைய குறைபாடுகள் வரும்போது அதை ஏன் தொடர வேண்டும்' என்று என்.டி. ராமாராவ் கேட்கும் கேள்வியிலேயே அவர் நடைமுறைக்குச் சாத்தியமானவைகளையே நினைப்பவர் என்ற பதில் கிடைக்கிறது. கூடவே தெலுங்கு கங்கா திட்டம் நிறைவேறும் என்ற நம்பிக்கையும் பிறக்கிறது.

சென்னை–28. — எம். தியாகராஜன்.

ஸ்வீட்டா ஏதாச்சும்.....?

ஆந்திர (சமையல்) ஸ்பெஷலில் எல்லாமே இப்படிக் காரமாகவே போடணுமா சார்! ஸ்வீட்டா ஏதாச்சும் சொல்லியிருக்கப்படாதோ!

வியாசர்காலனி. — திருமதி சுகந்தி நாராயண்.

பாபாவை மறந்துவிட்டீர்களே!

ஆந்திர மலர் கண்டேன். திருக்கோயில்களும் கலைக்கூடங்களும்..... நல்ல முயற்சி. ஆனால் நடமாடும் பிரத்யட்ச தெய்வமாம் பாபாவையும், அவர் கோயில் கொண்டிருக்கும் பர்த்தி புரியையும் மறந்தது மலருக்கு பெரும் குறையாக இருந்தது.

பம்பாய்–22. — லீலா கோபாலன்.

துடுப்பில்லாத படகு!

அ.தி.மு.க.வில் நடைபெறும் குழப்பங்களைத் தலையங்கத்தின் மூலம் நன்முக விளக்கினீர்கள்! அ.தி.மு.க. துடுப்பில்லாத படகாகத்தான் சென்று கொண்டிருக்கிறது!

திருநள்ளூர். — எம். கல்யாணசுந்தரம்.

பரிசீலனைக்குரியவை

'போரா — பேச்சு வார்த்தையா?' வாசகர் பங்கு பகுதியில் சொல்லப்பட்ட அனைத்துக் கருத்துக்களும் பரிசீலிக்கப்பட வேண்டிய கருத்துக்களே.

ஸ்ரீரங்கம். — மன்னார்குடி தேரோட்டி.

வெங்கட்ராமன் சார்பாக......

கே. கே. நகர் சக்தி விநாயகர் கோவிலைப் பற்றி 23.3.86 பேட்டிக் கட்டுரை, தொடர்ந்து 30.3.86 விளக்கக் கட்டுரை இரண்டையும் மிகுந்த கவனத்துடன் படித்துப் பார்த்தோம்.

முதல் பேட்டிக் கட்டுரையில் அந்தக் கோவிலில் தக்காராகச் சில காலம் பணியாற்றிய திரு. வெங்கட்ராமன் அவர்களைப் பற்றிச் சில குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டுள்ளன. குற்றச்சாட்டுக்களுக்கு வெங்கட்ராமன் சார்பிலும், அழகப்பன்தான் பதிலளித்திருக்கிறாரே தவிர, பதிலளிக்க வெங்கட்ராமனுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அதைக் கண்டு அந்தக் கோவிலுக்கு நன்கொடை கொடுத்துள்ள நாங்கள் மிகவும் வருத்தப்பட்டோம். ஏனென்றால், அந்தக் கோவிலுக்கு நாங்கள் நன்கொடை கொடுத்ததே திரு. வெங்கட்ராமன் அவர்களின் தூண்டுதல் பேரிலும், அவரிடம் எங்களுக்கு இருக்கும் பரிபூரண நம்பிக்கையின் அடிப்படையிலும்தான். எங்களுக்குத் தெரிந்தவரை திரு. வெங்கட்ராமன் அவர்கள் அந்தக் கோவிலின் வளர்ச்சிக்காக மிகவும் பாடுபட்டிருக்கிறார். எனவே, திரு. வெங்கட்ராமன் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை மறுப்புடன் கல்கியில் இப்படிச் சில அவதூறுகள் வெளிவர நேர்ந்ததே என்பதற்காக மிகவும் வருந்துகின்றோம்.

சென்னை. — எஸ். ஆனந்தம்மாள்.
மற்றும் 20 நன்கொடையாளர்கள்.

(கையெழுத்திட்டிருப்பவர்கள் 10 ரூ. முதல் 15,000 ரூ. வரை நன்கொடை வழங்கியிருப்பவர்கள். — ஆசிரியர்.)

வன்மையாகக் கண்டிக்கிறோம்!

6.4.86 தேதியிட்ட தங்களது கல்கி வார இதழில் தங்கள் நிருபர் பாலு மணாளன் என்பாரின் "இராதாபுரம் ஊர் சம்பந்தமான பேட்டித் தொகுப்பு" ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் கல்கி பக்கம் 4ல் இராதாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியின் ஆசிரியர்களைப் பற்றி "ஆசிரியர்களில் சிலர் பள்ளி நேரத்திலேயே தண்ணி அடித்துச் சீட்டு விளையாடிக் கும்மாளம் போடுகிறார்கள்" என்று யாரோ விஷமிகளின் தூண்டுதல் பேரால், முற்றிலும் உண்மைக்குப் புறம்பான, நேர்மைக்கு மாறான ஒரு செய்தியை வெளியிட்டு ஒரு கண்ணியம் மிகுந்த அரசு நிறுவனத்தையும் அதன் ஊழியர்களையும் (ஆசிரியர்களையும்) அவமானப்படுத்த வேண்டும் என்ற தீய நோக்கத்தோடு செய்திருக்கும் செயலை மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எம். அப்துல் ஜபார், (தலைமை ஆசிரியர்)
இராதாபுரம். — மற்றும் 32 ஆசிரியர்கள்.

(கேள்விப்பட்ட செய்தியை நம்பவே முடியவில்லை என்று கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறது. அச்செய்தி உண்மையல்ல என்று அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம். — ஆசிரியர்.)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032. (Phone: 431543).

Assistant Editor: P. S. Mani. — Editor: K. Rajendran.

REGISTERED No. M 6292
Registered as a Newspaper in Srilanka



"இப்போது, லக்ஸையும் விட நான் அதிகம் விரும்பும் சோப் ஒன்று உள்ளது", என்கிறார் ரேவதி.

புதிய லக்ஸ்

நேர்த்தியான புது மணம்

அதன் புத்தம் புது, மலர்களின் சாற்று மணம் பற்றி ஒவ்வொரு சினிமா நட்சத்திரமும், தம் விருப்பமான முறையில் விளக்குகிறார்—"மென்மைய மிக்கது", "கிளர்ச்சியூட்டுவது".

கவர்ச்சியான புதுத் தோற்றம்

உங்களைப் போலவே கவர்ச்சியானது நவநாகரீகமானது அது—கண்ணைக் கவர்வதும்கூட! மூன்று வகை அழகிய வண்ணங்களில் கிடைக்கிறது— இளஞ் சிவப்பு, பச்சை மற்றும் மஞ்சள்.



இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தரமான தயாரி